விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 சித்திரை 14 வியாழக்கிழமை (27.04.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 129

## பூரண ஹர்த்தால் ஆதரவும் அழைப்பும்

- வடக்கு மாகாணசபை
- தமிழ் மக்கள் பேரவை
- தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
- தமிழ் தேசிய மக்கள் முன்னணி
- ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி
- தமிழர் விடுதலைக் கூட்டணி
- ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்
- அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ்
- புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி
- ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி
- இலங்கை ஆசிரியர் சங்கம்
- இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்
- அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு
- அகில இலங்கை பொது ஊழியர் சங்கம்
- அனைத்து மதப்பேரவை
- வட மாகாண தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம்
- வடக்கு முஸ்லிம் சிவில் சமூகம்
- வீணாகான குருபீடம்
- சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியம்
- யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்
- யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்
- யாழ்.பல்கலை ஊழியர் சங்கம்
- யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்
- யாழ் மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்
- வட இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம்
- தமிழ் தேசிய பண்பாட்டுப்பேரவை
- யாழ் மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் சங்கம்
- வடமராட்சி கிறிஸ்தவ ஒன்றியம்
- கிளி.அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம்
- கிளி.வர்த்தக சமூகம்
- கிளிநொச்சி பிரஜைகள் குழு
- கிளிநொச்சி இளைஞர் திறன் விருத்தி அமையம்
- கிளிநொச்சி அந்தணர் ஒன்றியம்
- கிளிநொச்சி இரணைமடு கமக்கார அமைப்பு
- கரைச்சி கிராம மாதர் அபிவிருத்தி சமாசம்
- தர்மபுரம் மனிதம் சர்வமத அமையம்
- பச்சிலைப்பள்ளி மாதர் கிராம அபிவிருத்தி சங்கம்
- கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கம்
- கிளிநொச்சி, முல்லைத்தீவு வர்த்தக சங்கம்
- ஒட்டுசுட்டான் வர்த்தக 23

# வடக்கு - கிழக்கில் இன்று ஹர்த்தால்

(யாழ்ப்பாணம்)

தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கில் இன்றைய தினம் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளது. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் ஏற்பாடு செய்யப்பட்ட ஹர்த்தால் போராட்டத்துக்கு, வடக்கு - கிழக்கு தழுவிய ரீதியில் மதத்தலைவர்கள், அரசியல் கட்சிகள், பொது அமைப்புகள், மாணவர்கள், வர்த்தகர்கள் என பல தரப்பட்டவர்களும் தமது ஆதரவை வழங்கியுள்ளதுடன் போராட்டத்தை ஒன்றிணைந்து முன்னெடுக்கவும் ஓரணியில் திரண்டுள்ளனர். (23-ம் பக்.)



## அமைதியான ஹர்த்தாலை முன்னெடுங்கள் - பொலிஸ்

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கில் பூரண ஹர்த்தால் இன்று நடைபெறும் நிலையில் இவ் ஹர்த்தாலின் போது சமாதானத்திற்கும் பாதுகாப்பிற்கும் பங்கம் விளைவிக்கும் வகையில் செயற்படாமல் அமைதியாக நடந்து கொள்ளுமாறும், மீறி செயற்படுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் யாழ்ப்பாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரனிஸ்லஸ் தெரிவித்துள்ளார்.

காணாமல் போனவர்களின் உறவினர்கள் கடந்த இரண்டு மாதங்களாக தமக்கு நீதிகோரி தொடர் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இவ்வாறான நிலையில் அவர்களது போராட்டத்திற்கு வலுச் சேர்க்கும் வகையில் இன்றைய தினம் வடக்கு கிழக்கு 23

## தனியார் பேருந்து சேவை வடக்கில் இன்று ஸ்தம்பிதம்

### பேருந்து உரிமையாளர் சங்கம் அறிவிப்பு

(குருமன்காடு)

வட மாகாணத்தில் காணி விடுவிப்பு மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி வேண்டி இன்று இடம்பெறவுள்ள கதவடைப்பு போராட்டத்திற்கு தனியார் பேருந்து உரிமையாளர்கள் ஆதரவு தெரிவிக்கும் நிலையில் வட மாகாணத்திற்கான பேருந்து சேவைகள் இடம்பெறாது என வட இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் உப தலைவர் எஸ். ரி. இராஜேஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணி 23

## வாகன விபத்து 4பேர் படுகாயம்

(கரணவாய்)

துவிச்சக்கர வண்டியும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளான வேளை பின்னால் வந்த முச் 23

## நல்லாட்சி அரசுக்கு ஆதரவாக ஹர்த்தால்

### தமிழர்களிடம் ராஜித கோரிக்கை

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மக்கள் தம்து உரிமைகளுக்காக இல்லாமல் நல்லாட்சி அரசாங்கம் இதுவரை வழங்கியிருக்கும் சுதந்திர உரிமைகளை நினைத்து நன்றி கூறும் வகையில் பிறிதொரு நாளில் ஒருநாள் ஹர்த்தால் ஒன்றை செய்ய வேண்டும் என்று 23



## மல்லாவியில் நேற்று வாள்வெட்டு தாக்குதல்

### தாதியர் உட்பட ஐவர் படுகாயம்

(மல்லாவி)

மல்லாவி நகரப் பகுதியில் வைத்து இரண்டு குழுவினரிடையே ஏற்பட்ட கைகலப்பு பின்பு வாள்வெட்டுத் தாக்குதலில் முடிவடைந்த நிலையில் படுகாயமடைந்த ஒரு தரப்பினர் மல்லாவி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களுக்கு 04

## முஸ்லிம்களது பிரச்சினைகளும் பேசப்பட வேண்டும்

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் போலவே முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் வெளிக்கொணரப்பட்டு பேசப்பட வேண்டும் என புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

இன்று வியாழக்கிழமை வடக்கு 23

## எதிர்பார்க்கும் அதிகார பரவலாக்கம் தமிழர்களுக்கு கிடைக்கப் போவதில்லை

### விட்டுக்கொடுப்புக்கு தயாராகுங்கள் –அரசியலமைப்பு குழுத் தலைவர்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் அதிகார பரவலாக்கம் கிடைக்கப் போவதில்லை என தெரிவித்துள்ள அரசியலமைப்பு குழுவின் தலைவரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான ஜெயம்பதி விக்ரமரட்ன, தமிழ் தரப்பு விட்டுக்கொடுப்பிற்கும் இணக்கப்பாட்டிற்கும் தயாராக இருக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

தந்தை செல்வாவின் 40வது நினைவு தினம் நேற்றைய தினம் யாழ்.பொது 23



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்**

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு



UK-550/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS

V2 TRAVELS-0768226240
- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

(6-8229)



**பணிநிலை வேண்டுகை**

கிளிநொச்சியில் இயங்கும் கணனி நிலையம் ஒன்றுக்கு பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

1. கணனி ஆசிரியர் (பெண்கள்)
2. அலுவலக எழுதுநர் (பெண்கள்)
3. கணனி ஆய்வு கூட உதவியாளர்

(கிளிநொச்சி மாவட்டத்திற்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது)

நேர்முகத்தேர்வு :30.04.2017
ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணி
இடம் : கல்விப் பண்பாட்டு அபிவிருத்தி மன்றம்
திருநகர் வீதி, கனகராசா வீதி, கிளிநொச்சி

மேலதிக விபரங்களுக்கு 0772999699

(8855)



**விற்பனைக்கு**

அரைக்கும் ஆலை இயந்திரங்கள் மற்றும் ஐஸ்கிறீம் தயாரிக்கும் மிஷின் விற்பனைக்கு உண்டு.
(நல்ல நிலையில் உள்ளது)

தொடர்புக்கு: 076 701 4397

(8853)



**வேலையாட்கள் தேவை**

யாழ்.நகரில் உள்ள புடைவை விற்பனை நிலையத்துக்கு அனுபவமுள்ள, பழகவிரும்பும் ஆண், பெண் விற்பனையாளர் உடன் தேவை. மேலும்

சிட்டை எழுதுநர் (கணனியில்)
ஆண் (வயது 30 - 50)
பெண் (வயது 20 - 35)

(C-8270)

தொடர்புக்கு:
077 526 9182, 076 328 3763


## வீட்டின் கூரையை பிரித்து 5 பவுண் நகை, மடிக் கணனி, தொலைபேசி துணிகர திருட்டு



(கோப்பாய்)

நேற்று முன்தினம் மாலை வேளை வீட்டின் கூரையை பிரித்து உள்நுழைந்த திருடர்கள் துணிகரமான முறையில் 5 பவுண் தங்க நகைகளையும் ஒரு தொகை பணம், மடிக் கணனி மற்றும் கையடக்கத் தொலைபேசி ஆகியவற்றை திருடிச் சென்றுள்ளனர்.

பலாலி வீதி உரும்பிராய் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அண்மையாக உள்ள வீடொன்றிலேயே இத் திருட்டுச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

குறித்த வீட்டார் நண்பகல் வேலை விடயமாக வெளியே சென்றுள்ளனர். அதனை அவதானித்த திருடர்கள் தமது கைவரிசையை காட்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வீட்டின் கூரை வழியாக ஏறி கூரைத் தகட்டினை உடைத்து உள்ளே நுழைந்து வீட்டை சல்லடை போட்டுத் தேடி வீட்டின் அலுமாரியினுள் வைக்கப்பட்டிருந்த 5 பவுண் நகைகளையும் ஒரு தொகை பணம் அடங்கலாக மடிக்கணனி, கைத்தொலைபேசி என்பவற்றை அபகரித்துக்கொண்டு திருடர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

குறித்த திருட்டுச் சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து சம்பவ வீட்டிற்கு வந்த பொலிஸார் தடயங்களை சேகரித்ததோடு மேலதிக விசாரணைகளையும் ஆரம்பித்துள்ளனர்.

அத்துடன் மேற்படி திருட்டு இடம்பெற்ற வீட்டுக்கு அருகில் உள்ள வீடு ஒன்றில் கடந்த 14-ம்திகதி புத்தாண்டு தினத்தன்று துவிச்சக்கர வண்டி ஒன்றும் திருடப்பட்டமை குறிப்பிடத் தக்கது. (செ-87)


**மேல்மாகாண பிரபல ஆசிரியரின் வழிகாட்டலில்**

IELTS (ACADEMIC/GENERAL) வகுப்புக்கள் மற்றும் திருமணம் முடித்து SPONSOR VISA இல் UK செல்பவர்களுக்கு IELTS Life skills A1 EXAM இற்குரிய வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

STUDY in UK & EUROPE

நேரில் வந்து இலவச சட்ட ஆலோசனைகளை கேட்டு, வளமான எதிர்காலத்தை எட்டிப்பிடிக்க... IELTS EXAM REG. CENTRE

WORLD EDUCATION CONSULTANCY A9 வீதி, சாவகச்சேரி 0779265447, 0217200989
புதிய உயர் கல்லூரி வளாகம் ஆரியகுளம், யாழ்ப்பாணம்

(C-8287)


## வடக்கு அமர்வு ஒத்திவைக்கப்படும்!

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் இன்றைய மாதாந்த அமர்வு ஹர்த்தாலுக்கு ஆதரவு தெரிவித்து ஒத்திவைக்கப்படவுள்ளதாக அறியக் கிடைத்துள்ளது.

காணாமல்போனவர்களின் உறவினர்கள் பலநாட்களாக தமக்கு நீதிகோரி வடக்கு கிழக்கில் தொடர் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இதே போன்று தமது காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தியும் பல இடங்களிலும் தொடர்போராட்டங்கள் முன்னெடுகக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறானநிலையில் அவர்களதுபோராட்டத்திற்கு வலுச் சேர்க்கும் வகையில் இன்றைய தினம் வடக்கு கிழக்கு முழுவதும் பூரண கடையடைப்புக்கு அனைத்து அரசியல் கட்சிகள், பொது அமைப்புக்கள் உள்ளிட்ட பலரும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் இன்றைய தினம் வடக்கு மாகாண சபை மாதாந்த அமர்வுக்காக கூடவுள்ளது. இந்த அமர்வை இன்றைய தினம் குறித்த திகதியில் நடத்தப்படாவிடின் ஆளுநரின் அனுமதி பெற்றே அடுத்த அமர்வை நடத்த வேண்டும் என்ற காரணத்தால்,

இன்றைய தினம வடக்கு மாகாண சபை கூடுவது எனவும் பின்னர் மக்களுடைய போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து ஒத்திவைப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது. (செ-4)


**கண்ணீர்க் காணிக்கை**

அருட்தந்தை
**எஸ்.இ.என். குணசீலன்**



யாழ்.மறைமாவட்ட மூத்த குருவானவரும் யாழ்ப்பாணம் கோப்பாய் மத்தி புனித சூசையப்பர் ஆலயத்தின் முன்னாள் பங்குத் தந்தையுமான அருட்திரு. **எஸ்.இ.என். குணசீலன்** அடிகளார் 24 ஏப்ரல் 2017 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் உறவினர்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கின்றோம்

யாழ். கல்வியியற் கல்லூரி வீதி, கோப்பாய் மத்தி. (C-8286) இ. பொன்ராசா குடும்பத்தினர்



**மரண அறிவித்தல்**

**இளையதம்பி சபாரத்தினம்**
**(10ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு)**



10ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பை பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்ட அமரர் **இளையதம்பி சபாரத்தினம்** அவர்கள் 25.04.2017 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதமடைந்துள்ளார்.

அன்னார் இளையதம்பி - கமலம் அவர்களின் அன்பு மகனும் வல்லிபுரம்பிள்ளை - சின்னாச்சிப்பிள்ளை அவர்களின் அன்பு மருமகனும் சந்தானலட்சுமி அவர்களின் அன்புக் கணவரும் கமலாதேவி, அமரர் சிவபாலராஜா, பேரின்பராசா, குணேஸ்வரராஜா (லண்டன்), ஸ்ரீகாந்தராசா, கிருமஞ்சுளா, அமரர் விஜயகுமார், துஷ்யந்தன் (லண்டன்) அவர்களின் அன்புத் தந்தையும் அமரர் விவேகானந்தம், சந்திரவதி, நிர்மலா (லண்டன்), வரதா, கெங்காதரன், அம்புஜா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் திலீபன் (லண்டன்), அமரர் தட்சாயினி, தர்சன், சோபியா, டயல்ஷியா, யார்த்திகா (லண்டன்), கஜந்தன் (லண்டன்), ஹாஸ்வினி, கனிஸ்ரன், பவிநயா, காவியா, நேசிகா, தட்சனா, மேனுகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (27.04.2017) வியாழக்கிழமை மு.ப 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக புதுக்குடியிருப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

1ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.
0779990415, 0775903184, 0772203125
(C - 8284)
தகவல்: குடும்பத்தினர்.



**அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு**

மண்ணில் 02 - 05 - 1944
விண்ணில் 28 - 03 - 2017



திருமதி
**புவனேஸ்வரி திருநாவுக்கரசு**

கடந்த 28.03.2017 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவி அமரர் திருமதி **புவனேஸ்வரி திருநாவுக்கரசு** அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று காலை 6 மணியளவில் திருநாவலூர் தெணியம்மன் கோவில் அந்தியேட்டி மடத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும் தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் மு.ப 10 மணியளவில் நடைபெற இருக்கும் வீட்டுக் கிருத்திய நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்பத் தலைவியின் இறுதிக்கிரியைகளின் போது பல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும் பல வழிகளில் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்**

(C-8285)

ஐயனார் வீதி, பருத்தித்துறை. குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை-இந்திய பிரதமர்கள் நேற்று சந்திப்பு





(கொழும்பு) இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நேற்றுக்காலை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்து பேச்சு நடத்தினார்.

டில்லியில் உள்ள ஐதராபாத் இல்லத்தில் நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் இந்தச் சந்திப்பு ஆரம்பமாகியது.

இந்தச் சந்திப்பின் போது, இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு விவகாரங்கள் குறித்துப் பேச்சுக்கள் நடத்தப்பட்டன.

அத்துடன், இந்திய, இலங்கை பிரதமர்களின் முன்னிலையில் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் , இலங்கையின் அனைத்துலக வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்கிரமவும், பொருளாதாரத் திட்டங்களில் ஒத்துழைத்துச் செயற்படுவது தொடர்பான புரிந்துணர்வு உடன்பாட்டில் கையெழுத்திட்டு, பத்திரங்களை பரிமாற்றம் செய்தனர். (இ-7)

# புத்தர் சிலையை வைக்க சிங்ஹலே முயற்சி

# சிவனொளிபாத மலையில் கடும் பதற்றம்

(கொழும்பு)

சிங்ஹலே அமைப்பானது சிவனொளிபாதமலையில் புத்தர் சிலையை வைப்பதற்கு எடுத்த முயற்சி நல்லதண்ணிப் பொலிஸாரின் தலையீட்டையடுத்த தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் அப்பகுதியில் நேற்றும் பதற்றமான சூழல் ஏற்பட்டதுடன் நல்லதண்ணி நகரிலிருந்து சிவனொளிபாதமலை வீதிவரை பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.





நேற்று முன்தினம் அப்பகுதிக்கு விஜயம் மேற்கொண்ட சிங்ஹலே அமைப்பின் யாத்திரிகர்கள், சிவனொளிபாத மலையில், புத்தர் சிலையை வைப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

சிவனொளிபாதமலையின் இந்திகட்டுமானப் பகுதிவரை புத்தர் சிலை கொண்டு செல்லப்பட்டதாகவும், பின்னர் பொலிஸாரின் தலையீட்டையடுத்து, முயற்சி கைவிடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சிவபூமியானது, சிங்களவர்களுக்கு மட்டுமே உரித்தானது என்பதை வலியுறுத்தும் வகையில், இவர்கள் புத்தர் சிலையைப் பிரதிஷ்டை செய்ய முயன்றதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இது, இனவாதப் பிரச்சினைக்கு வழிவகுக்கும் என்றும் எனவே சிலை வைக்க அனுமதிக்கப்போவதில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர். இந்நிலையில் புத்தர் சிலையை பிரதிஷ்டை செய்யும்வரை, தாம் அவ்விடத்திலிருந்து செல்லப் போவதில்லை என்று கூறி, சிங்ஹ லே அமைப்பின் யாத்திரிகர்கள், நேற்று முன்தினம் இரவு சிவனொளிபாத மலையின் இந்திகட்டுமான பகுதியிலேயே தங்கியதாக, பொலிஸார் தெரிவித்தனர். இதனால் அப்பகுதியில், நேற்று முன்தினம் தொடக்கம் பதற்றமான சூழ்நிலை நிலவி வருகிறது. (இ-7)

## அரச பயங்கரவாதமும் கட்டவிழ்த்து விடப்பட்டது

### ஒப்புக் கொண்டார் சந்திரிகா



(கொழும்பு)

நாட்டில் அரச பயங்கரவாதமும் கட்டவிழ்த்து விடப்பட்டதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஒப்புக்கொண்டார். கேகாலை பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள், ஜே.வி.பி. போன்ற இயக்கங்களைப் போன்று சில சந்தர்ப்பங்களில் அரசாங்கமும் பயங்கரவாதத்தை கட்டவிழ்த்து விட்டது. இவ்வாறு பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டதனால் நாடு பின்னோக்கி நகர்ந்தது.

நாட்டில் நீண்டகாலமாக தமிழீழ விடுதலைப் புலிகள், ஜே.வி.பி. ஆகியனவற்றின் பயங்கரவாத செயற்பாடுகள் காணப்பட்டன. இதனால் நாடு பொருளாதார மற்றும் சமூக ரீதியில் பின்னடைவை எதிர்நோக்க நேரிட்டது என சந்திரிகா குமாரதுங்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## பொன்சேகாவிற்கு புதிய பதவி அமைச்சரவையில் அங்கீகாரம்



(கொழும்பு)

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு புதிய பதவியொன்றை வழங்க ஜனாதிபதி முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவையில் நேற்று முன்தினம் அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

முப்படை உள்ளிட்ட பாதுகாப்புத் தரப்புடன் செயலாற்றக்கூடிய விதத்தில் புதிய பதவியொன்றை உருவாக்கி, அதற்காக சரத் பொன்சேகாவை நியமிக்க ஜனாதிபதி யோசனை முன்வைத்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாதாள உலகின் முக்கிய நபர் திருட்டுக்குற்றச்சாட்டில் கைது

(கொழும்பு)

பாதாள உலகின் மிக முக்கிய நபராகக் கருதப்படும் எஸ்எஃப் லொக்கா என்று அழைக்கப்படும் எரோன் ரணசிங்கவை பொலிஸார் கைது செய்துள்ளனர். வாகனத் திருட்டு ஒன்றுடன் தொடர்பு இருப்பதான சந்தேகத்தின் பேரிலேயே எரோன் கைது செய்யப்பட்டுள்ளார்.

பல்வேறு குற்றச்சாட்டுக்களில் தேடப்பட்டு வருபவரான எரோன் கொலைக் குற்றச்சாட்டுக்களுடனும் சம்பந்தப்பட்டவராகக் கருதப்படுகிறது.

குறிப்பாக, இரவு விடுதி ஒன்றின் உரிமையாளரான வசந்த டி சொய்ஸா என்பவர் அநுராதபுரத்தில் வைத்துக் கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் எரோன் பிரதான சந்தேக நபராகக் கருதப்படுபவர்.

எரோன் கைது செய்யப்பட்ட தகவலை பொலிஸார் உறுதி செய்துள்ளனர். (இ-7)



# சம்பியன்ஸ் டிராபி தொடருக்கான வீரர்களை இங்கிலாந்து, பாகிஸ்தான் அறிவித்துள்ளது




இங்கிலாந்தில் நடக்க உள்ள ரொப்-8 அணிகள் மட்டுமே பங்கேற்கும் சம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் போட்டிக்கான பாகிஸ்தான், இங்கிலாந்து அணிகள்கள் அறிவிக்கப்பட்டுள்ளது.

ரொப்-8 அணிகள் மட்டுமே பங்கேற்கும் சம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் போட்டி ஜுன் 1ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை இங்கிலாந்தில் நடக்கிறது. இதற்கான 15 பேர் கொண்ட பாகிஸ்தான் அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது. அவுஸ்திரேலிய ஒரு நாள் தொடரில் ஏற்பட்ட தோல்விக்காக கழற்றிவிடப்பட்ட அசார் அலி, உமர் அக்மல் மீண்டும் அணிக்கு திரும்பியிருக்கிறார்கள். அதே சமயம் பாகிஸ்தான் சுப்பர் லீக்கில் தொடர் நாயகன் விருதை பெற்ற கம்ரன் அக்மல் நீக்கப்பட்டுள்ளார்.

பாகிஸ்தான் அணி விவரம்: சர்ப்ராஸ் அகமது (தலைவர்), அகமது ஷேசாத், அசார் அலி, முகமது ஹபீஸ், பாபர் அசாம், சொயிப் மாலிக், உமர் அக்மல், இமாத் வாசிம், பஹார் ஜமான், பஹிம் அஷ்ரப், முகமது அமிர், வஹாப் ரியாஸ், ஜுனைட் கான், ஹசன் அலி, ஷதப் கான்.

இந்த போட்டிக்கான இங்கிலாந்து அணியும் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் விவரம்,

இயன் மோர்கன் (தலைவர்), மொயீன் அலி, ஜானி பேர்ஸ்டோ, ஜாக் பால், சாம் பில்லிங்ஸ், ஜோஸ் பட்லர், அலெக்ஸ் ஹாலஸ், லியாம் பிளங்கெட், அடில் ரஷித், ஜோ ரூட், ஜாசன் ராய், பென் ஸ்டோக்ஸ், டேவிட் வில்லி, கிறிஸ் வோக்ஸ், மார்க் வுட்.

# பி.வி.சிந்து, அஜய் ஜெயராம் இரண்டாம் சுற்றுக்கு முன்னேற்றம்

சீனாவின் உகான் நகரில் ஆசிய பட்மிண்டன் சம்பியன்ஷிப் தொடர் கடந்த 25ஆம் திகதி தொடங்கி நடைபெற்று வருகின்றது. இத்தொடரில் ஆசிய கண்டத்திலுள்ள பல்வேறு நாடுகளைச் சேர்ந்த முன்னணி பட்மிண்டன் வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர்.

இந்நிலையில், நேற்று காலை நடைபெற்ற பெண்கள் ஒற்றையர் ஆட்டத்தில் இந்திய நட்சத்திர வீராங்கனை சாய்னா நேவால், ஜப்பானின் சயாகா சாடோவிடம் தோல்வியடைந்து முதல் சுற்றிலேயே வெளியேறினார்.'

அடுத்து, மற்றொரு ஒற்றையர் ஆட்டத்தில், ஒலிம்பிக் நாயகியான பி.வி.சிந்து இந்தோனேசிய வீராங்கனை தினார் தியா ஆயுஸ்டினை எதிர்கொண்டார். உலகின் மூன்றாம் தரநிலை வீராங்கனையான சிந்து தொடக்கம் முதலே சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி எதிராளியை திணறடித்தார். இதனால், வெறும் 31 நிமிடங்களில் 21-8, 21-18 என்ற நேர்செட்களில் வெற்றி பெற்ற சிந்து இரண்டாம் சுற்றுக்கு முன்னேறினார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்திய வீரர் அஜய் ஜெயராம் 5ஆம் தரநிலை வீரரான ஹ°வேய் டியான் (சீனா) என்பவரை 21-18, 18-21, 21-19 என்ற செட்கணக்கில் வீழ்த்தி இரண்டாம் சுற்றுக்கு முன்னேறினார். கலப்பு இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் இந்தியாவின் பிரணவ் ஜெர்ரி சோப்ரா-சிக்கி ரெட்டி ஜோடி, 15-21, 21-14, 16-21 என்ற செட்கணக்கில் சிவேய் ஜெங்-கிங்சென் சென் ஜோடியிடம் தோல்வியடைந்தது.

# நீதிமன்றில் வழக்கு நடைபெறும்போது

# பழிவாங்கும் அரச அதிகாரிகள் அவமதிப்பிற்காக தண்டிக்கப்படுவர்

# நீதிபதி இளஞ்செழியன் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

நீதிமன்றில் வழக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது பழிவாங்கல் நடவடிக்கைகளில் ஈடுபடும் அனைத்து அரச அதிகாரிகளும் நீதிமன்றை அவமதித்த குற்றத்துக்காக தண்டிக்கப்படுவார்கள் என யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் எச்சரித்துள்ளார்.

வடக்குமாகாண ஆளுநர் சட்டத்துக்கு முரணான தீர்மானத்தை எடுத்துள்ளார் என வடக்கு மாகாண மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளராக பணியாற்றிய எம்.ஜெகு வால் கடந்த 2 வாரங்களுக்கு முன்னர் யாழ். மேல் நீதிமன்றில் எழுத்தாணை மனு தாக்கல் செய்யப்பட்டது.

அதாவது அவுஸ்ரேலிய தேசிய பல்கலைக்கழகத்தில் பொதுக் கொள்கைகள் தொடர்பான முதுமாணி பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கான புலமைப்பரிசில் ஒன்றை பெற்று வடக்கு மாகாண மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர் எம்.ஜெகு கடந்த 2016 ஆம் ஆண்டு சென்றுள்ளார்.

இந்த நிலையில் 2016 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இவரை மீண்டும் நாட்டுக்கு வருமாறு அவுஸ்ரேலிய அரசின் ஊடாக ஆளுநரின் செயலாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் மேற்குறித்த அதிகாரி தனக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாகவும் தான் உரிய முறையில் அனுமதி பெற்று சென்றேன் எனவும் அதை விசாரணை செய்யுமாறும் எதிர்மனுதாரர்களாக வடமாகாண ஆளுநர், வடமாகாண ஆளுநரின் செயலாளர், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர், வடமாகாண கல்வி பணிப்பாளர், வடமாகாண பிரதி பிரதம செயலாளர் (பயிற்சியும் ஆளணியும்) ஆகியோரை குறிப்பிட்டு எழுத்தாணை மனு தாக்கல் செய்திருந்தார்.

எதிரி மனுதாரருடைய விளக்கத்துக்கு நேற்றைய தினம் திகதியிடப்பட்டிருந்த நிலையில் குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

எதிர் மனுதாரர்கள் மன்றில் ஆஜராகி விளக்கமளிப்பதற்கு அவகாசம் கேட்டிருந்தனர். வழக்கு தொடுநர் தரப்பில் ஆஜராகிய சட்டத்தரணி குருபரன் மன்றில் மனுதாரருக்கு எதிராக மேலும் அநீதிகள் இழைக்கப்பட்டிருப்பதாக சுட்டிக்காட்டினார்.

அதாவது வெளிநாட்டில் இருந்து திரும்பியவுடன் மேலதிக மாகாண கல்வி பணிப்பாளராக மனுதாரர் 2017.01.16 ஆம் திகதி மீண்டும் தனது பணியை ஆரம்பித்தார். அப்போது கடந்த பெப்ரவரி மாதம் இவர் பிரதம செயலாளர் அலுவலகத்தில் தற்காலிக இணைப்பில் இருக்குமாறு மாற்றப்பட்டுள்ளார். இலங்கை நிர்வாக சேவை தரம் ஒன்று பதவியில் உள்ள இவர் பொறுப்பு ஏதும் இல்லாத தரத்தில் நியமிக்கப்பட்டதன் காரணம் என்ன? தற்போது இந்த மாதம் அவருடைய பதவிக்கு வேறு அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இதுவரை அவரது சம்பளம் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. அதை உடனடியா பெற்றுக்கொடுக்க வேண்டும்.

பதவி நிலை மாற்றம், சம்பளம் நிறுத்தி வைக்கப்பட்டமை தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என மன்றில் கோரினார்.

வழக்கை விசாரித்த நீதிபதி, நீதிமன்றில் வழக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது குறித்த மனுதாரர் மீது பழிவாங்கல் நடவடிக்கை இடம்பெற்றிருக்குமேயானால் சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகள் மேலும் நீதிமன்ற அவமதிப்பு குற்றம் தாக்கல் செய்யப்படும்.

மேல் நீதிமன்றுக்கு வழக்கு வந்த பின்னர் குறித்த மனுதாரர் தொடர்பில் வழக்குடன் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு யாருக்கும் அனுமதி இல்லை. அவ்வாறு நடைபெற்றால் அனைத்து விவகாரங்களுக்கும் தடை உத்தரவு பிறப்பிக்கப்படும்,

குறித்த விடயத்தில் என்ன நடக்கிறது என்பது புரியவில்லை. ஆனால் ஏதோ பிரச்சினை இடம் பெறுகிறது என தெரிகிறது. பழிவாங்கல் நடவடிக்கைகள் இடம்பெறுகிறது என தெரிந்தால் அந்த வழக்குகளுக்கு அரச சட்டத்தரணிகளும் ஆஜராகக்கூடாது

ஆளுநர் தெரிவித்தார் எனவும் அவர் சார்பாகவும் அதிகாரிகள் கையெழுத்து போடக்கூடாது. வாய் மூல அறிக்கைகள் மன்றில் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது. எனவே அரச அதிகாரிகள் கவனமாக இருக்க வேண்டும்.

சம்பளம் நிறுத்தம், இடமாற்றம் தொடர்பில் இரண்டு வாரத்தில் பதிலளிக்க வேண்டும் என தெரிவித்த நீதிபதி வழக்கை எதிர்வரும் மே மாதம் 15 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார். (செ-9)

## முதியவர் ஒருவர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சங்கானைப் பகுதியில் முதியவர் ஒருவர் நேற்று முன்தினம் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கிணற்றுக் கப்பிக் கயிற்றில் தூக்கில் தொங்கிய நிலையிலேயே குறித்த முதியவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாகவும் சடலமாக மீட்கப்பட்டவர் நிச்சாமம் சங்கானைப் பகுதியினை சேர்ந்த நாகன் தில்லை நாதன் என்ற 74 வயதுடையவர் எனவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

இதனிடையில் இந்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் மேற் கொண்டுவருகின்றனர். (செ-11)


7ம் அணி அனுமதிகள் முற்றுப்பெற்றன
8ம் அணியில் இணைய முந்துங்கள்!
O/L உடன் மாதம் 25,000/- சம்பாதிக்க!
நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு பயிற்சியுடன் வேலைவாய்ப்பை வழங்கி வெற்றிநடை போடும்
Diploma in Tourism & Hotel Management 8ம் அணி
3 மாத இலவச ஆங்கில வகுப்புடன்
புதிய பிரிவு ஆரம்பம் மே 10 திங்கள் காலை 10மணி
பயிற்சிக் காலத்திலேயே பணம் சம்பாதிக்கலாம்
யாழ் - கொழும்பு முன்னணி ஹொட்டேல்களில் வேலைவாய்ப்பு
வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு
அனுமதிகளுக்கு:
077 3616 798 021 222 0011
SIKARAM ACADEMY
Business · Hospitality · English
SCHOOL of HOSPITALITY
175.முதலாம் குறுக்குத்தெரு (வேம்படி வீதி).யாழ்ப்பாணம்.


## மல்லாவியில் நேற்று ...

அவசர சிகிச்சை பிரிவில் வைத்து மருத்துவர்களால் சிகிச்சை வழங்கப்பட்டுக் கொண்டிருந்த போது, வாள் வெட்டுக் காயங்களுக்குள்ளான மறுதரப்பினர் சிகிச்சைகளுக்காக வைத்தியசாலையிற்கு அழைத்து வந்தவர்கள், ஏற்கெனவே சிகிச்சை பெற்று வந்த இரண்டு பேர் மீதும் அவசர சிகிச்சை பிரிவுக்குள் புகுந்து தாக்குதல் நடத்திய சம்பவத்தில் 04 பேர் ஆபத்தான நிலையில் நோயாளர் காவு வண்டிகள் மூலம் கிளிநொச்சி, வவுனியா ஆகிய மாவட்ட வைத்தியசாலைகளுக்கு மாற்றப்பட்டு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மல்லாவி பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று புதன்கிழமை பிற்பகல் 12. 30 மணியளவில் மல்லாவி வைத்திய சாலையின் உள்ள நோயாளர் பிரிவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவது.

மல்லாவி பொலிஸ் பிரிவில் உள்ள கல்விளான் கிராமத்தைச் சேர்ந்த இளைஞர் குழு ஒன்றிற்கும், திருநகர் கிராம இளைஞர் குழு ஒன்றிற்கும் இடையில் நீண்டகாலமாக பகை நிலவி வந்துள்ளது.

இந் நிலையில் நேற்று புதன்கிழமை இரண்டு தரப்பும் மல்லாவி நகரப் பகுதியில் சந்தித்த போது, முற்பகல் 11.30 மணியளவில் கத்தி, அரிவாள் கொண்டு மோதிக் கொண்ட நிலையில் படுகாயமடைந்த ஒரு குழுவைச் சேர்ந்த அண்ணன், தம்பி இருவரும் மல்லாவி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மருத்துவர்கள் சிகிச்சை வழங்கி கொண்டிருந்த போது, மற்றைய தரப்பைச் சேர்ந்த படுகாயமடைந்த 02 பேரை அக்குழுவைச் சேர்ந்தவர்கள் சிகிச்சைகளுக்காக வைத்தியசாலையிற்கு கொண்டு வந்துள்ளனர்.

ஏற்கெனவே தம்முடன் மோதிக் கொண்ட அண்ணன், தம்பிக்கு சிகிச்சை வழங்கப்படுவதைக் கண்டதும் வைத்தியசாலையில் வைத்து அவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதன் போது, தாக்குதலில் படுகாயமடைந்த 04 பேர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி, வவுனியா ஆகிய மாவட்ட வைத்தியசாலைகளுக்கு நோயாளர் காவு வண்டிகள் மூலம் மாற்றப்பட்டு அதிதீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர்.

இச்சம்பவத்தில் வைத்தியசாலையில் கடமையாற்றும் பெண் மருத்துவ தாதி ஒருவரும் தலைக் கவசத்தால் தாக்கப்பட்டு சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

அத்துடன் வைத்திய சிகிச்சை பிரிவில் உள்ள மருத்துவ உபகரணங்கள், மருந்துப் பொருட்களும் சிதறுண்டு சேதமடைந்துள்ளது. இதனையடுத்து தகவல் அறிந்தது வைத்திய சாலைக்கு வந்த மல்லாவி பொலிசார் நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

இச்சம்பவத்தில் வாள் வீச்சில் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்திய சாலையில் மேலதிக சிகிச்சைக்காக திருநகர் கிராமத்தைச் சேர்ந்த சகோதரர்களில் ஒருவரான கமல நாதன் சுஜீபன் (வயது - 21), கல்விளான் கிராமத்தைச் சேர்ந்தவர்களான, நவரத்தினம் தஜீபன் (வயது -21), சிவலிங்கம் வினோராஜ் (வயது - 21), ஆகியோர் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை,

கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையில் திருநகர் கிராமத்தைச் சேர்ந்த மற்றைய சகோதரரான கமலநாதன் கஜீபன் (வயது -26) என்பவர் மேலதிக சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வைத்தியசாலையில் புகுந்து தாக்குதல் நடத்தி பணியாளர்களையும், சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த நோயாளர்களையும் தாக்கியவர்களைக் கைது செய்யும் வரை வைத்தியசாலையில் எந்தவித நடவடிக்கையும் மேற் கொள்ள மாட்டோம் எனத் தெரிவித்துள்ள மருத்துவர்கள், சுகாதார உத்தியோகத்தர்கள், பணியாளர்கள், மருத்துவ தாதியர்கள் உட்பட அனைவரும் வெளிநடப்பு பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட நிலையில் சம்பவ இடத்துக்கு வந்த மல்லாவி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி 02 மணிநேரத்தில் சம்பந்தப்பட்ட அனைவரையும் கைது செய்வதாகவும், போராட்டத்தை கைவிடுமாறும் கேட்டுக் கொண்டதை அடுத்து பணிக்குத் திரும்பிய மருத்துவர்கள், உத்தியோகத்தர்கள், வெளிநோயாளர் பிரிவில் காத்திருந்த நோயாளர்களுக்கு சிகிச்சைகளை வழங்கியுள்ளார்கள்.

இதேவேளை, வழங்கிய வாக்குறுதி நேரத்திற்குள் வாள் சண்டை மற்றும் வைத்தியசாலை தாக்குதல்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் 12 பேரை மல்லாவி பொலிஸார் கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (செ-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் நிதியை உள்வாங்கவா? பணமாற்று கட்டுப்பாட்டு சட்டமூலம்

### கூட்டு எதிரணி கேள்வி

(கொழும்பு)

சீன முதலீடுகளை விட புலம்பெயர் தமிழர்களின் முதலீடுகளே இலங்கைக்கு உகந்தது என்று நோர்வேயின் சிறப்பு தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் இந்திய ஊடகத்திற்கு தெரிவித்துள்ளார்.

இதனை அங்கீகரிக்கும் வகையில் விடுதலைப்புலிகளின் நிதியை சட்டவிரோதமான முறையில் நாட்டிற்குள் கொண்டு வருவதற்காகவே அரசாங்கம் பணமாற்று கட்டுப்பாட்டு சட்டமூலத்தை கொண்டு வருவதற்கு முயற்சிகளை மேற்கொள்கின்றது என பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

ஜி.எஸ்.பி.வரிச்சலுகையை மீண்டும் பெற்றுக் கொள்வதாயின் தேசிய பாதுகாப்பு மற்றும் கலாசாரம் உள்ளிட்ட அனைத்தையும் விட்டுக் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போன்று அரசாங்கத்தின் கைக்கூலியாகாது கூட்டு எதிர்க் கட்சி நாட்டிற்கான கடமைகளை செய்யும் எனவும் அவர் தெரிவித்தார்.

கூட்டு எதிர்க்கட்சியின் விசேட ஊடக சந்திப்பு பொறளையில் அமைந்துள்ள ஸ்ரீ வஜிராஷ்ரம பௌத்த மத்திய நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பாராளுமன்ற உறுப்பினர்பந்துலகுணவர்த்தன மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# பிரதமர் ரணில்- சுஷ்மா சந்திப்பு





(டில்லி)

இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை, இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் நேற்று சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

டில்லியில் உள்ள தாஜ் பலஸ் விடுதியில் நேற்றுக் காலை இந்தச் சந்திப்பு இடம் பெற்றது.

இந்திய வெளிவிவகார அமைச்சருடன், இந்திய வெளிவிவகாரச் செயலர் எஸ்.ஜெய்சங்கர் மற்றும் வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள் குழுவும் இந்தச் சந்திப்பில் பங்கேற்றது.

பிரதமருடன், அமைச்சர்கள் அநுர பிரியதர்சன யாப்பா, மலிக் சமரவிக்கிரம மற்றும் அதிகாரிகளும் பேச்சுக்களில் பங்கேற்றிருந்தனர்.

இந்தச் சந்திப்பை அடுத்து இந்தியாவின் மத்திய தரைவழிப் போக்குவரத்து , கப்பல்துறை அமைச்சர் நிதின் கட்கஏரி, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இந்தச் சந்திப்பில், இந்திய, இலங்கை அதிகாரிகள் குழுவினரும் பங்கேற்றனர். (இ-7)

# இந்தியாவுடன் உடன்பாடு செய்ய இலங்கை அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

திருகோணமலை எண்ணெய் குதங்கள் தொடர்பாக இந்தியாவுடன் புரிந்துணர்வு உடன்பாடு செய்து கொள்வதற்கு இலங்கை அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

இதுதொடர்பான அமைச்சரவை அனுமதியைப் பெற்றுக் கொண்டே, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியாசென்றிருப்பதாக, இலங்கையின் பெற்றோலிய வளங்கள் அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

இது ஒரு அரசியல் முடிவு என்றும், குறிப்பாக உடன்பாடு குறித்தோ, கூட்டு முயற்சி தொடர்பாகவோ எதுவும் கலந்துரையாடப்படவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்தியாவுடன் திருகோணமலை எண்ணெய்க் குதங்கள் தொடர்பாக புரிந் துணர்வு உடன்பாடு செய்து கொள்வதற்கு அனுமதிகோரும் அமைச்சரவைப் பத்திரத்தை நேற்று முன்தினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமைச் சரவையில் சமர்ப்பித்திருந்தார்.

அதேவேளை, திருகோணமலையில் உள்ள 99 எண்ணெய்க் குதங்களில், தற்போது இந்தியன் எண்ணெய் நிறுவனத்திடம் உள்ள 15 குதங்கள் தவிர ஏனையவற்றில் 10 குதங்களை இலங்கை வைத்துக் கொள்வதற்கும், ஏனைய 74 குதங்களை கூட்டாக அபிவிருத்தி செய்வதற்கும் இணக்கப்பாடு காணப் படவுள்ளதாக அமைச்சர் சந்திம வீரக்கொடி கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையே டில்லி பயணத்தின் போது, பெற்றோலிய பணியாளர் தொழிற் சங்கங்களுக்கு அளித்துள்ள வாக்குறுதிகளை மீறும் வகையில் செயற்பட வேண்டாம் என்று நேற்று முன்தினம் அமைச்சரவைக் கூட்டத்தில் பிரதமரிடம் அறிவுறுத்தியதாக மற்றொரு செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# குப்பைமேடு பிரச்சினைக்கு நல்லாட்சியும் பொறுப்பாம்

## நளின் பண்டார எம்.பி.தெரிவிப்பு

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயத்தின் போது திருகோணமலை குதங்கள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்த மாட்டார்.

எனினும் எட்கா குறித்தான பேச்சுவார்த்தைகள் நடைபெறும் என ஐக்கிய தேசியக் கட்சியின் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

மீதொட்டமுல்ல குப்பை மேட்டு பிரச்சினைக்கு முன்னைய ஆட்சியும் நல்லாட்சியும் பொறுப்பு கூற வேண்டும் என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# அரசாங்கத்தில் இருக்கும் குற்றவாளிகளை தண்டிக்க காலம் நெருங்கிவிட்டது - டிலான்



நாட்டை பிளவுபடுத்தி சர்வதேச உடன்படிக்கைகளை மேற்கொள்ளும் நபர்களை நிராகரித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆட்சியை கையில் எடுக்க வேண்டும். அரசாங்கத்தில் இருக்கும் குற்றவாளிகளை தண்டிக்க வேண்டிய காலம் வந்துள்ளது என ஸ்ரீலங்கா சுதந்திரகட்சியின் ஊடகப் பேச்சாளரும் இராஜாங்க அமைச்சருமான டிலான் பெரேரா தெரிவித்தார்.

தவறான பாதையில் பயணிக்கும் அரசாங்கத்தை சரியான பாதைக்கு கொண்டு வரும் பொறுப்பு ஜனாதிபதியின் கைகளிலேயே உள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

மே தினத்துடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பயணத்தில் எவ்வாறான மாற்றங்கள் ஏற்படவுள்ளன என வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# இராசி பலன்

27.04.2017
(சித்திரை 14, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு
பிரதமை பிற்பகல் 4.06 மணிவரை
பரணி மாலை 6.25 மணிவரை
சுபநேரம் 7.29-8.59 மணிவரை
இராகுகாலம் 1.29-2.59 மணிவரை
கார்த்திகை விரதம், சித்திரைப்பரணி
சிறுத்தொண்டர் குருபூசை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சுக் புத | சூரி சந் | செவ் | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் அத்தம், சித்திரை இரவு 11.46 மணிக்கு இட-சந் | | |
| | | | ராகு |
| | சனி | | குரு |

**மீனம்** இறை வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், எதிர்பாராத் தனவரவுகள் வந்து சேரலாம்.

**மேடம்** உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கனவு பலிதமுண்டு, எதிர்பார்க்காமல் செய்த வேலையொன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம்.

**இடபம்** விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், சேமிப்பில் சிறிது கரையலாம், பயணத்தால் பலன் கிடைக்கும், சயன சுகக் குறைவான நாள்.

**மிதுனம்** எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், தனவரவுகள் திருப்திகரமாக அமையும், பொது வாழ்வில் மதிப்பும், மரியாதையும் உயர்வடையும், குடும்ப மகிழ்ச்சியுண்டு.

**கும்பம்** பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், நீண்ட நாள் பிரச்சினையொன்று நல்ல முடிவுக்கு வரும், முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும்.

**கடகம்** தொட்ட காரியங்களில் வெற்றி பெறுவீர்கள், உங்கள் யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், ஆரோக்கியமான நாள், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**மகரம்** பெற்றோரின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், சுபதகவல்கள் வந்து சேரலாம், மாதர் நட்புண்டு, நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**சிம்மம்** சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், வருங்காலத்திற்கான திட்டமொன்றைத் தீட்டுவீர்கள், வீட்டை சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள்.

**தனுசு** கேளிக்கை, கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, நெடுநாளைய கனவுகள் நனவாகலாம், இல்லம் தேடி இனிய தகவல்கள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்** பொதுவாழ்வில் புகழ்கூடும், விரதம், வழிபாடுகளில் ஆர்வம் காட்டுவீர்கள், செய்தொழிலில் முன்னேற்றம் ஏற்படலாம், திருமண முயற்சிகள் கைகூடும்.

**துலாம்** புதிய பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், வெளியூர் பயணத்தால் ஆதாயம் கிடைக்கும்.

**கன்னி** கவலைகள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள், குடும்ப பெரியவர்கள் உங்கள் செயற்பாடுகளில் குறைகண்டு கூறலாம், வாகன பழுதுச் செலவுகள் உருவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி விடுவிப்பு தொடர்பாக ஜனாதிபதி பதிலளிக்க வேண்டும்

## சுரேஷ் வலியுறுத்து



(யாழ்ப்பாணம்)

காணி விடுவிப்பு தொடர்பாக மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரே பதிலளிக்க வேண்டும். எனவே தமிழர் தரப்பு இவர்களுடனேயே பேச வேண்டும். இதனை விடுத்து இராணுவ தரப்போடு பேசுவது இப்பிரச்சினைக்கான தீர்வைத் தராது என தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.ஆர்.எல்.எவ்.கட்சியின் தலைவருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

மேலும் அரசாங்கம் தமிழ் மக்களது காணிகளை மீள கையளிப்போம் எனவும் காணாமல் போனோர் தொடர்பாக தீர்வொன்றை வழங்குவோம் எனவும் ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை பேரவையிலேயே கூறிவந்தாலும் காணி விடுவிப்பு தொடர்பில் தான் தப்பித்துக்கொள்வதற்கும் காணிகளை மீள கையளிப்பதை தட்டிக்களிப்பதற்கும் அரசாங்கம் இராணுவத்தை பயன்படுத்த முயல்கின்றதா? என்ற கேள்வியெழுந்துள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ். ஊடக அமையத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்ட விடயத்தை தெரிவித்திருந்தார். தமிழ் மக்களிடம் அபகரிக்கப்பட்ட அம்மக்களது காணிகளை விடுவிப்பது தொடர்பாக கடந்த நாட்களில் நான்கு கலந்துரையாடல்கள் தமிழ்த்தேசிய கூட்டமைப்பினால் நடத்தப்பட்டுள்ளது. குறிப்பாக ஜனாதிபதியுடன் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் மேற்கொண்ட பேச்சுவார்த்தையில் ஜனாதிபதி காணிகள் தொடர்பான தகவல்களை இராணுவத்திடம் கோரியுள்ளேன். எனினும் ஒரு வருட காலமாக இராணுவம் அந்த தகவல்களை வழங்கவில்லை என தெரிவித்திருந்தார்.

இதேபோன்று இராணுவ தளபதிகளுடன் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவர் நடத்திய கலந்துரையாடலில் இராணுவத்தினர் தாம் ஜனாதிபதி உத்தரவிட்டால் காணிகளை மீள கையளித்து விடுவோம் எனக் கூறியிருந்தனர். இவ்வாறான நிலையில் ஜனாதிபதியும் இராணுவமும் ஒன்றுக்கொன்று முரண்பட்டதான கருத்துக்களை கூறிவருகின்றனர். இவற்றை விட கடந்த வாரம் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் மற்றும் மேலும் சில கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் வடக்கில் ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் சென்று மாவட்ட பிரிகேடியர், தளபதிகளுடன் இது விடயமாக கலந்துரையாடியிருந்தார்கள். ஆனால் இவர்களது சந்திப்புக்களில் அவர்களுக்கு எதிர்மறையான பதில்களே கிடைத்திருந்தன.

குறிப்பாக கேப்பாபிலவு பகுதிகளில் விடுவதாக ஒப்புக் கொண்ட பகுதிகளில் கூட இராணுவம் ஆறு மாத கால அவகாசமும் 50 மில்லியன் ரூபா பணத்தையும் கோரியிருக்கின்றது.

மக்களது காணிகளை அபகரித்து சட்ட விரோதமாக அக் காணிகளில் இருந்த மக்களது வீடுகள், கட்டடங்களை இடித்தளித்து பின்னர் தமக் கேற்ற வாறு கட்டடங்களை சட்ட விரோதமாகக் கட்டிய இராணுவம் தற்போது அக் காணிகளை விடுவிப்பதற்கு கால அவகாசமும் நட்டஈடும் கேட் பதானது இராணுவத்தின் ரவுடித் தனமான செயற்பாட்டையே காட்டி நிற்கின்றது.

இவற்றையெல்லாம் விட மீள்குடியேற்ற அமைச்சர் தலைமையில் இடம்பெற்ற காணி விடுவிப்பு தொடர்பான கலந்துரையாடலில் கூட முள்ளிக்குளம் மேற்கு கடற்படைத் தளத்தை விடுவிக்க முடியாது என்ற கருத்தை கடற்படைத் தளபதி கூறியுள்ளார். இதேபோன்று செட்டிகுளத்தில் படையினர் வசமுள்ள ஆறாயிரம் ஏக்கர் காணிகளையும் விடுவிக்க முடியாது எனவும் அவர்கள் திட்டவட்டமாக கூறிவிட்டார்கள். இவ்வாறானதொரு சூழ்நிலையில் மக்களது காணி விடுவிப்பு தொடர்பாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பானது இராணுவத்தினருடன் பேச வேண்டிய தேவை ஏன்? அல்லது அவ்வாறு பேசுவது சரியானதா? என்ற கேள்வியெழுந்துள்ளது.

காணி விடுவிப்பு தொடர்பாக பதிலளிக்க வேண்டியவர்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரே.

எனவே தமிழர் தரப்பு இவர்களுடனேயே பேச வேண்டும். இதனை விடுத்து இராணுவத் தரப்போடு பேசுவது இப்பிரச்சினைக்கான தீர்வைத் தராது. எனவே தமிழ்த்தேசிய கூட்டமைப்பானது அரசாங்கத்துடன் பேசி மக்களது காணிகளை விடுவிக்க முடியும். அல்லது விடுவிக்க வேண்டும் என்ற கொள்கை ரீதியான தீர்மானத்தை எடுக்க வேண்டும். இதனை விடுத்து அரசாங்கம் மாற்றுக் காணிகளையும் தமது படைத் தளங்களை அகற்றுவதற்கு நட்டஈட்டினை கோருவதும் ஒரு போதும் ஆக்கபூர்வமான முடிவைத் தராது. அரசாங்கம் சர்வதேசத்திடம் இரண்டு வருடகால அவகாசத்தை கோரியுள்ளது. இராணுவம் காணி விடுவிப்பு தொடர்பாக 2021 ஆம் ஆண்டுவரை காலஅவகாசத்தை கோரியுள்ளது.

இத்தகைய நிலையில் 2020 ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளது. அதற்கு பின்னர் யார் ஆட்சியமைப்பார்கள் என்பது தெரியாது. இவ்வாறான நிலையில் தற்போது தான் இவ் விடயத்தில் தப்பித்துக் கொள்வதற்கு அரசாங்கம் இராணுவத்தை கொண்டு இத்தகைய கால அவகாச கோரிக்கையை முன்வைத்துள்ளதா? இவ்வாறுதான் இராணுவத்தை பயன்படுத்தி தப்பிக்கொள்ள முயற்சிக்கின்றதா? என்ற கேள்விகள் எழுந்துள்ளன. எனவே இது தொடர்பான விடயங்களை தமிழ்த்தேசிய கூட்டமைப்பு குறிப்பாக தற்போது முடிவுகளை எடுக்கின்ற தமிழரசுக் கட்சி இது தொடர்பாக அரசாங்கத்துடன் பேசி கொள்கை ரீதியான தீர்மானத்தை பெற்றுக் கொள்ள வேண்டும். அவ்வாறில்லாத நிலையில் சர்வதேச ரீதியாக உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் எவ்வாறு அழுத்தங்களை ஏற்படுத்த வேண்டும் என்பது தொடர்பாக சிந்திக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது என்பதையும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவர் புரிந்துகொள்ள வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-4)

# கல்வி அமைச்சிடம் கோரிக்கை

வடமாகாண பயிற்றப்பட்ட ஆசிரியர் சங்க ஆசிரியர்கள் வெளிமாவட்டத்தில் 3 வருடகால ஆசிரியர் சேவையாற்றி மீள முன்னைய வலயங்களில் கடமையாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என வடமாண கல்வி அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அச் சங்கத்தினர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில்,

நாங்கள் ஆசிரிய உதவியாளர் சேவையில் ஈடுபடுவதற்கு முன்பாக தொண்டர் அடிப்படையில் சுமார் பத்து ஆண்டுகளுக்கு மேலாக வெகு சிரமத்தின் மத்தியில் பணியாற்றினோம் ஆசிரிய உதவியாளர் தெரிவின் பின் 2009 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் தொடக்கம் 2012 ஆம் ஆண்டு ஆனி மாதம் வரை மாதமொன்றிற்கு மூவாயிரம் ரூபா. பின்னர் ஆறாயிரம் ரூபா என்கின்ற அடிப்படையில் பணியாற்றினோம்.

பொருளாதார கஷ்டத்தில் இருந்த எம்மை இவற்றையெல்லாம் பொருட்படுத்தாது வன்னி தொண்டர் ஆசிரியர் பயிற்சிக்கு மூன்றாண்டுகள் உதவி செய்ய வேண்டும் என வடக்கு மாகாண கல்வி அமைச்சு கோரிக்கை விடுத்தது. வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் கோரிக்கையை ஏற்று 16.05.2014 முதல் வன்னியில் சேவையாற்றி வருகிறோம். வன்னியில் சேவையாற்றும் எங்களுக்குரிய மூன்றாண்டுகாலம் எதிர்வரும் 16.05.2017 இல் நிறைவுறுகின்றது. எமக்கு வழங்கப்பட்ட இடமாற்றக் கடிதத்தில் குறிப்பிட்டவாறு 16.05.2017 முதல் எம்மை எமது பிரதேச கல்வி வலயப் பாடசாலைகளில் பணியாற்ற பொருத்தமான நடவடிக்கை எடுக்கவேண்டும் என மேலும் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (இ-3)

# கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரல்

தேசிய கணக்கியல் டிப்ளோமா (NVQ மட்டம் 5 மற்றும் 6) கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் பிறவுண் வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் கல்லூரியினால் கோரப்பட்டுள்ளது. க.பொ.த. உயர் தரப் பரீட்சையில் வர்த்தக பிரிவில் மூன்று பாடங்களில் சித்தியுடன் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு அமர்விற்கு மேற்படாது கணிதம் மற்றும் ஆங்கிலத்தில் சித்தி பெற்ற மாணவர்கள் இக்கற்கை நெறியினை தொடர முடியும்.

ஆர்வமுள்ள மாணவர்கள் கல்லூரி தொழில் வழிகாட்டல் பிரிவில் தொடர்பு கொண்டு இக் கற்கைநெறியினை தொடருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (இ

# சதுர்த்தி

யாழ்.வண்ணை வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் சதுர்த்தி விரதம் நாளை மறுதினம் 29 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு இடம் பெறும். (இ-3)

# அலங்கார உற்சவம்

இருபாலை ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலய அலங்கார உற்சவம் இன்று வியாழக் கிழமை ஆரம்பமாகி எதிர் வரும் மே மாதம் 8 ஆம் திகதி திங்கட்கிழமை சங்காபிஷேகத்துடன் உற்சவம் நிறைவு பெறவுள்ளது. (இ-3)

# 'ஆடல் அரங்கம்' சிறப்பு நிகழ்வு

யாழ்.இந்தியத் துணைத் தூதரகம் சர்வதேச நடன தினத்தை முன்னிட்டு வடக்கு மற்றும் மத்திய மாகாண பிரபல நடன ஆசிரியர்களின் நெறியாள்கையில் வழங்கும் ஆடல் அரங்கம் சிறப்பு நடன நிகழ்வு நாளை மறுதினம் 29 ஆம் திகதி சனிக் கிழமை மாலை 4 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறும். (இ-3)




# நாடக செயற்றிட்டத்துக்கு தகுதிவாய்ந்த கலைக்குழுக்கள் விண்ணப்பிக்கலாம்

இலங்கை அபிவிருத்திக்கான ஊடக நிலையத்தின் ஏற்பாட்டில் "இலங்கை மக்கள் அரங்க - நாடக செயற்றிட்டம்" அடுத்த மாதம் தொடக்கம் வட மாகாணத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இளம் தலைமுறையினரிடத்தில் பன்மைத்துவம், சகிப்புத்தன்மை, வித்தியாசங்களை மதித்தல் மற்றும் அகிம்சையை ஊக்குவித்தல் என்பன இம்மக்கள் அரங்கச் செயற்றிட்டத்தின் நோக்கங்களாகும்.

இத் திட்டத்தில் தெரிவு செய்யப்படும் மக்கள் அரங்க நாடகக் கலைஞர்கள் மற்றும் கலைக் குழுக்கள் என்பன வற்றுக்கான நிபுணத்துவ மக்களரங்க ஆற்றுகை தொடர்பான பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவ மற்றும் சிங்கள சமூகங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள், கலைக்குழுக்கள் என்பன முற்றிலும் இலவசமாக இடம்பெறவுள்ள இத்திட்டத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

பயிற்சிக் காலத்தில் மக்கள் அரங்க ஆற்றுகையை சமூக மாற்றத்திற்குப் பயன்படுத்தும் முறைகள் தொடர்பில் பயிற்சி வழிகாட்டல் நூல் ஒன்றையும் இலங்கை அபிவிருத்திக்கான ஊடக நிலையம் வெளியிடவுள்ளது. இதற்காக கலைக்கழகங்கள், துறைசார் நிபுணர்கள், பயிற்றுவிப்பாளர்கள், பல்கலைக்கழகத்தினர் ஆகியோரின் வழிகாட்டல்களை ஊடக நிலையம் பெற்றுக்கொள்ள உள்ளது.

சுமார் பத்து வார இறுதி நாட்களில் இடம்பெறவுள்ள 10 நாட்கள் பயிற்சிகளைத் தொடர்ந்து 40 மக்கள் அரங்குகள் இடம்பெறவுள்ளன. ஒவ்வொரு மாவட்டத்திலும் தலா 10 மக்கள் அரங்க நாடகங்கள் வீதம் அரங்கேற்றப்படும். இதில்கலந்து கொள்ள விரும்பும் கலைஞர்கள், கலைக்குழுக்கள் எதிர்வரும் மே மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் info@LDJF.org எனும் மின்அஞ்சலுக்கு விண்ணப்பிக்கலாம். மேலதிக விபரங்களுக்கு அஸ்ஜைன் - 077 665 3694 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)



மணற்காடு றோ.க.த.க.பாடசாலை கட்டடத் திறப்பு விழா நேற்று முன்தினம் பிற்பகல் நடைபெற்ற போது விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.மாவட்ட ஆயர் கலாநிதி ஜஸ்ரின்.பி.ஞானப்பிரகாசம் நாடா வெட்டி திறந்து வைப்பதையும் வரவேற்பு நடனம் இடம்பெறுவதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

33

# தமிழரின் தலைவிதி எப்படியாகும்?



அதேவேளை அமரர் மகேஸ்வரனின் சகோதரர் தியாகராசா துவாரகேஸ்வரனும் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய செயற்பாட்டாளராக இருந்தார்.

2015 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி யாழ்ப்பாண மாவட்டத்தில் களமிறங்கியது.



திருமதி விஜயகலா மகேஸ்வரன் முதன்மை வேட்பாளராக தலைமை தாங்கினார். திருமதி விஜயகலா மகேஸ்வரன் வெற்றி பெறுவதற்கான சாத்தியம் இல்லை என்பதே பலரதும் கருத்தாக இருந்தது.

## திருமதி விஜயகலாவின் வெற்றி ரணிலுக்கு ஆச்சரியம் கொடுத்தது

இதற்குக் காரணம் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றிக்கு உதவுவதிலேயே கவனம் செலுத்தினார்.

அதிலும் குறிப்பாக கூட்டமைப்பின் வேட்பாளர் எம்.ஏ.சுமந்திரனின் வெற்றியில் ரணில் விக்கிரமசிங்க கூடிய கரிசனை கொண்டிருந்தார் என அப்போது பரவலாகப் பேசப்பட்டது.

இதனால் திருமதி விஜயகலா மகேஸ்வரனின் தேர்தல் பிரசாரங்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை போதிய ஒத்துழைப்பு வழங்கவில்லை.

எனினும் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தளர்ந்தாரில்லை. தனது கணவர் மகேஸ்வரனின் பாணியில்- பிரசார வியூகத்தில் தனது முயற்சியை முன்னெடுத்தார்.

மகேஸ்வரனின் நெருங்கிய ஆதரவாளர்கள் திருமதி விஜயகலா மகேஸ்வரனின் வெற்றிக்காகக் கடுமையாகப் பாடுபட்டனர்.

தேர்தல் முடிவுகள் வைகறைப் பொழுதில் வெளிவந்து கொண்டிருந்தன. திருமதி விஜயகலா மகேஸ்வரனின் வெற்றி என்பது குறைந்த வாக்குகளால் காட்டி நின்றது.

இச்சந்தர்ப்பத்தில் திருமதி விஜயகலா மகேஸ்வரனின் வாக்குகளைத் திரும்பவும் எண்ண வேண்டும் என்ற கோரிக்கை தோல்வியின் விளிம்பில் நின்ற வேட்பாளர்கள் சிலரால் விடுக்கப்பட்டது.

இத்தகவல் திருமதி விஜயகலா மகேஸ்வரனுக்கு கட்சி ஆதரவாளர்களால் தெரியப்படுத்தப்பட, அவர் சடுதியாக வாக்குகள் எண்ணப்படும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்குச் சென்றார்.

தனது வாக்குகளைத் திரும்பவும் எண்ணுவதாக இருந்தால், எல்லா வாக்குகளையும் எண்ண வேண்டும் என அவர் அதிரடியாகக் கூற, தேர்தல் பணியில் ஈடுபட்டிருந்த அதிகாரிகள் அதிர்ந்து போயினர்.

திருமதி விஜயகலா மகேஸ்வரனின் வாக்குகளைத் திரும்ப எண்ணவேண்டும் என்ற கோரிக்கையை ஏற்றுக்கொள்வதற்குத் தயாராக இருந்த தேர்தல் அதிகாரிகள் அனைத்து வாக்குகளையும் மீள் எண்ணல் செய்யப்படவேண்டும் என்ற திருமதி விஜயகலா மகேஸ்வரனின் கோரிக்கையை ஏற்பதற்குத் தயாரில்லை.

இந்நிலையில் திருமதி விஜயகலா மகேஸ்வரனின் வாக்குகளை மீள எண்ணுவதில்லை என்றும் அவரின் வெற்றியை உறுதி செய்வதெனவும் தேர்தல் அதிகாரிகள் முடிவு செய்தனர்.

ஆக, திருமதி விஜயகலா மகேஸ்வரன் அந்த அதிகாலை 2.45 மணியளவில் அவசர அவசரமாக யாழ்ப்பாண மத்திய கல்லூரிக்கு விரைந்தோடிச் சென்றதும்; அனைத்து வாக்குகளையும் எண்ண வேண்டும். அதுவே நீதி என்று அடித்துரைத்ததும் அவரின் வெற்றியை உறுதி செய்தது.

ஆக, திருமதி விஜயகலா மகேஸ்வரனின் ஆளுமை அந்த இடத்தில் வெளிப்பட்டிருக்காவிடில் ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்.மாவட்ட இயங்கு நிலை என்பது முற்று முழுதாக ஸ்தம்பிதமாகியிருக்கும் என்பது சர்வ நிச்சயம்.

இது ஒரு புறம் இருக்க, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு திருமதி விஜயகலா மகேஸ்வரனின் வெற்றி அதிர்ச்சியைக் கொடுத்தது மாத்திரமின்றி தாங்கள் எவ்வித ஒத்துழைப்பும் வழங்காமல் இருக்க, ஒரு பெண்ணாக நின்று திருமதி விஜயகலா மகேஸ்வரன் சாதனை புரிந்தார் என்று நினைத்தபோது அது ரணில் விக்கிரமசிங்கவுக்கு தான் செய்தது தவறு என்ற குற்ற உணர்வை ஏற்படுத்தவே செய்திருக்கும்.

2010 ஆம் ஆண்டில் பொதுத் தேர்தலின் மூலமாக இலங்கைப் பாராளுமன்றத்திற்கு தெரிவாகிய திருமதி விஜயகலா மகேஸ்வரன் அப்போது எதிர்க்கட்சி ஆசனத்தில் இருந்தார்.

2015 இல் மீண்டும் அவர் தேர்தலில் வெற்றி பெற்ற போது ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட கட்சிகள் இணைந்து தேசிய அரசை அமைத்தன.

இதில் திருமதி விஜயகலா மகேஸ்வரனுக்கு மகளிர் விவகார பிரதி அமைச்சுப் பதவி வழங்கப்பட்டிருந்தது.

எனினும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நூறு நாள் வேலைத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட போது திருமதி விஜயகலா மகேஸ்வரன் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சராக நியமனம் பெற்றார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து யாழ். மாவட்டத்தில் தெரிவாகிய திருமதி விஜயகலா மகேஸ்வரனுக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவி வழங்கப்பட வேண்டும் என்ற கருத்தியல் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இருந்ததாயினும் வடக்கு-கிழக்கு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவி வழங்கப்படுவதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொழும்புத் தலைமை விரும்பாத நிலையில் திருமதி விஜயகலா மகேஸ்வரனுக்கு இராஜாங்க அமைச்சுப் பதவி வழங்கப்பட்டது.

2015 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் திருமதி விஜயகலா மகேஸ்வரன் பெற்ற வெற்றி என்பது அவரின் நெடுநாள் அரசியலுக்கு பெருந் துணையாயிற்று.

2015 ஆம் ஆண்டில் அவர் தோல்வியடைந்திருப்பாராயின் அதன் விளைவு அவருக்கு மிகப் பாதகமாக அமைந்திருக்கும் என்பது நிதர்சனமான உண்மை. வளரும்

-புருசோத்தமன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமல் போனோரின் உறவுகளை அமைச்சர், வடமாகாண சபை உறுப்பினர்கள் சந்தித்தனர்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக கூடாரம் அமைத்துள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் முன்னெடுத்துவரும் போராட்டம் நேற்றுடன் 50 ஆவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தமக்கு உரிய தீர்வு கிடைக்கும் வரை போராட்டத்தை நிறுத்தப்போவதில்லை என தெரிவிக்கும் மக்கள் தொடர்ந்தும் போராடி வருகின்றனர்.



இந்நிலையில் நேற்றைய தினம் வருகைதந்தவர்களிடம் மக்கள் தமது போராட்டத்துக்கு அரசியல்வாதிகள் அனைவரும்ஒன்றாகச்சேர்ந்து எமக்காக குரல் கொடுக்க வேண்டுமேனவும் இன்றைய போராட்டத்துக்கு ஆதரவு வழங்குமாறும் கோரினர்.

இந்நிலையில் நேற்றைய தினம் குறித்த போராட்டம் நடைபெறும்இடத்துக்கு சென்ற வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் மக்களுடன் கலந்துரையாடினார். இவருடன் வடக்கு மாகாணசபை உறுப்பினர்களான து.ரவிகரன் மற்றும் ஆ.புவனேஸ்வரன் ஆகியோரும் உடனிருந்தனர்.(2-5-25-81)

### வவுனியா மாவட்டத்திலுள்ள

# நான்கு பிரதேச செயலக பிரிவுகளிலும் 241 சிறுவர் துஷ்பிரயோகங்கள் பதிவு

(மல்லாவி )

வவுனியா மாவட்டத்தில் உள்ள 4 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் மார்ச் மாதம் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 241 சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட செயலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா மாவட்டத்தில் உள்ள 4 பிரதேச செயலகப் பிரிவுகளில் அதிகூடிய சிறுவர் துஷ்பிரயோகங்கள் நடைபெற்ற பிரதேச செயலகப் பிரிவாக வவுனியா நகரப் பகுதி காணப்படுகின்றது.

இங்கு 173 சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இந் நிலையில் சிறுவர் துஷ்பிரயோகங்கள் குறைந்த பிரதேச செயலகப் பிரிவாக வவுனியா தெற்கு பிரதேச செயலகம் காணப்படுகின்றது. இங்கு 2 சம்பவங்கள் மட்டும் பதிவாகியுள்ளன.

வவுனியா நகரப் பகுதி பிரதேச செயலகப் பிரிவில் பத்து சிறுவர் பாலியல் துஷ்பிரயோகங்களும் 9 சிறுவர் திருமணங்களும் 37 உடல் ரீதியான துன்புறுத்தல்களும் 41 மன ரீதியான துன்புறுத்தல் சம்பவங்களும் 40 பராமரிப்பின்றி கைவிடப்பட்ட சம்பவங்களும் 3 சிறுவர் தொழிலாலர் சம்பவங்களும் 33 பாடசாலையை விட்டு இடை விலகிய சம்பவங்களுமாக மொத்தம் 173 சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில், வெண்கலச் செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவில், மன ரீதியாக துன்புறுத்தலுக்குள்ளான 14 சம்பவங்களும் கவனிப்பாரின்றி கைவிடப்பட்ட நிலையில் 12 சம்பவங்களும் பாடசாலையை விட்டு இடைவிலகிய 14 சம்பவங்களும் உடல் ரீதியாக துன்புறுத்தப்பட்ட ஒரு சம்பவமுமாக மொத்தம் 41 சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரிவில் 2 பாலியல் ரீதியான சம்பவங்களும் கவனிப்பாரின்றி 8 சம்பவங்களும் பாடசாலைக் கல்வியை விட்டு இடைவிலகிய 13 சம்பவங்களும் உடல் ரீதியாக துன்புறுத்தலுக்கு உள்ளன. ஒரு சம்பவமும் ஏனைய வகையில் பாதிப்புக்குள்ளான ஒரு சம்பவமுமாக மொத்தம் 25 சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில், வவுனியா தெற்கு பிரதேச செயலக பிரிவில் மிகக் குறைந்த சம்பவங்களே நடைபெற்றுள்ளன.

இங்கு பாலியல் வன்முறைக்கு ஒருவரும் மன ரீதியான துன்புறுத்தல்களுக்கு ஒருவருமாக மொத்தம் 2 சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் மட்டும் பதிவு செய்யப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட செயலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் 1929 என்ற தொலைபேசி ஊடாக 56 முறைப்பாடுகளும் மிகுதி சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு அலுவலர் உட்பட அரச சிறுவர் நலன்புரி பிரிவுகள் ஊடாகவும் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த புள்ளிவிபரத் தகவல்களில் வெளிவந்த விபரம் மட்டுமே 241 ஆகக் காணப்படுகின்றது.

பல சம்பவங்கள் மூடி மறைக்கப்பட்ட நிலையில். வெளிவராமல் இருப்பதாக இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த சமூக ஆர்வலர்கள் குறிப்பிடுகின்றனர்.

எனவே வவுனியா மாவட்டத்தில் உள்ள அனைத்து பொது அமைப்புக்கள், சமயத் தலங்கள், அரசியல் கட்சிகள், வர்த்தக சமூகத்தினர் உட்பட பல்வேறுபட்ட பிரிவினரும் இணைந்து இன, மத, மொழி வேறுபாடுகளை மறந்து எமது வருங்கால சந்ததியினரான சிறுவர்களை சிறுவர் துஷ்பிரயோகங்களில் இருந்து பாதுகாக்க மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன், குடும்ப வறுமை காரணமாக பாடசாலைக் கல்வியை விட்டு இடை விலகும் சிறுவர்களுக்கு கல்வி கற்பதற்கான வசதிகளை ஏற்படுத்தி கொடுக்க முன்வர வேண்டும் என சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-5- 15)

# சிறுமி பாலியல் துஷ்பிரயோகம்; சந்தேகநபர் விளக்கமறியலில்

(மல்லாவி )

தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் பாடசாலை செல்லும் 15 வயதுடைய சிறுமி ஒருவரை 19, வயதுடைய இளைஞர் ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் கடந்த 24, ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கடந்த பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள சிறுமி சந்தேக நபரான இளைஞரின் வீட்டில் நடைபெற்ற கொண்டாட்ட நிகழ்வுக்காகச் சென்ற போதே இளைஞரினால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

இது தொடர்பில் வீட்டாருக்குத் தெரியப்படுத்தினால் கொலை செய்துவிடுவேன் எனவும் மிரட்டியதையடுத்து

பாதிக்கப்பட்ட விடயத்தை சிறுமி வீட்டாருக்குத் தெரியப்படுத்தாமல் இருந்துள்ளார்.

இந்நிலையில், சிறுமியின் உடலில் ஏற்பட்ட மாற்றங்களை அவதானித்த தாயார் இது தொடர்பில் சிறுமியிடம் விசாரணை மேற்கொண்ட போது, தனக்கேற்பட்ட பாதிப்பு தொடர்பில் தெரியப் படுத்தியுள்ளார்.

இதனையடுத்து சிறுமியுடன் தருமபுரம் பொலிஸ் நிலையத்திற்கு கடந்த 23, ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை சென்று முறைப்பாட்டை பதிவு செய்துள்ளார்.

முறைப்பாட்டை அடுத்து, தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம். எம். என். டீ. சதுரங்கவின் உத்தரவுக்கு அமைய அன்றைய தினமே சந்தேக நபரான 19, வயதுடைய *இளைஞரை தருமபுரம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைதான சந்தேக நபர் மறுநாள் திங்கட்கிழமை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட போது, எதிர் வரும் மே மாதம் 5.ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளதுடன், பாதிக்கப்பட்ட சிறுமியை கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதித்து வைத்திய பரிசோதனைக்குட்படுத்தி வைத்தியரின் அறிக்கையைப் பெற்று நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும் படி பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இதற்கமைய வைத்திய பரிசோதனைக்குட்படுத்திய நிலையில், சிறுமி துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகியமை வைத்திய பரிசோதனையின் போது உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

இந் நிலையில், வைத்திய அறிக்கையினை நீதி மன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ள தாக தருமபுரம் பொலிஸ் நிலையத் தகவலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(2-5-15)

# இரு வேறு சட்டவிரோத கடத்தல்கள்; வாகனங்களுடன் சாரதிகள் கைது!

(மல்லாவி )

கிளிநொச்சி/முல்லைத் தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஷ் வெலிகன்னவின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இயங்கி வரும் விசேட முறியடிப்புப் பொலிஸ் படைப் பிரிவின் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் கருணாரட்னம் ஜெசிந்தன் தலைமையிலான பொலிஸ் அணியினரின் திடீர் முற்றுகையின் போது, கிளிநொச்சி மாவட்டத்தில் இரு வேறு சட்டவிரோத கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட இருவாகனங்களுடன் இரு சந்தேகநபர்களையும் கைது செய்துள்ளதாக கிளிநொச்சி/முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் காரியாலயத் தகவலில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இச்சம்பவம், நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அதிகாலை 3 மணிக்கும் மற்றும் நேற்று புதன்கிழமை அதிகாலை 5.30 மணிக்கும் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கிளிநொச்சி / முல்லைத் தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் காரியாலத்திற்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து,

பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஷ் வெலிகன்னவின் உத்தரவுக்கு அமைய,

மேற்படி பொலிஸ் அணியினர் பளைப் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள அல்லிப்பளை களப்புப் பகுதியில் அனுமதிப் பத்திரத்திற்கு முரணான வகையில் கடல் மண்ணை ஏற்றிப் பயணித்த டிப்பர் வாகனம் கைப்பற்றப் பட்டுள்ளதுடன், சந்தேகத்தின் பேரில் அதன் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை நேற்று புதன்கிழமை அதிகாலை 5.30 மணியளவில் கிளிநொச்சி பொலிஸ் நிலையப் பிரிவில் ஏ-9 வீதியில் கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு அனுமதிப்பத்திரம் மற்றும் வைத்திய அறிக்கை எதுவும் இன்றி 6 பசு மாடுகளை டாட்டா பிக்கப் வாகனத்தில்கடத்திய போது பரந்தன் பகுதியில் வைத்து கைப்பற்றப்பட்டுள்ளதுடன், சந்தேகத்தின் பேரில் அதன் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன் போது கைப்பற்றப் பட்டுள்ள டிப்பர் வாகனத்துடன், கைதான சந்தேக நபர் பளைப் பொலிஸ் நிலையத்தில் மேலதிக விசாரணைகளைகளுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், கடத்தப் பட்ட மாடுகளுடன் கைப்பற்றப்பட்டுள்ள பிக்கப் வாகனம் மற்றும் கைதான சந்தேக நபரும் மேலதிக விசாரணைகளுக்காக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. (2-5-15)




# கடத்திச் செல்லப்பட்ட ஆட்டோ மீட்கப்பட்டது

வவுனியா, பம்பைமடு பகுதியில் வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டு கடத்திச் செல்லப்பட்ட ஆட்டோ ஒன்று நெளுக்குளம் பொலிஸாரால் நேற்று காலை மீட்கப்பட்டுள்ளது.

வவுனியா பிரதி பொலிஸ்மா அதிபர் காரியாலய வளாகத்தில் நேற்று முன்தினம் தமிழ், சிங்கள புதுவருட நிகழ்வு இடம்பெற்றிருந்தது. இவ்வு நிகழ்வுக்கு வருகை [illegible] நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் காணாமல் போயிருந்தது.

இவ்வாறு காணாமல் போயிருந்த ஆட்டோ மன்னார் வீதியில் பம்பைமடு பகுதியில் வீதியோரத்தில் கைவிடப்பட்டிருந்த நிலையில் பொலிஸாரால் மீட்கப் பட்டுள்ளது.

இக் கடத்தல் தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(2-5-250)

# கொலை முயற்சி; ஐவருக்கு விளக்கமறியல் நீடிப்பு

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை படுகொலை செய்ய முயற்சித்ததாகத் தெரிவித்து கைது செய்யப்பட்ட ஐந்து சந்தேக நபர்களையும் அடுத்த மாதம் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனை படுகொலை செய்ய முயற்சித்தமை, சட்டவிரோத ஆயுதங்கள் மற்றும் போதைப்பொருள் என்பவற்றை வைத்திருந்ததாக குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்ட ஐந்து சந்தேக நபர்களும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப் பட்டிருந்தனர்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஐந்து பேரும் நேற்றைய தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதவான் ஏ.ஏ.ஆனந்த ராஜா முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்ட போதே தொடர்ந்து அடுத்த மாதம் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டுள்ளது. (2-5-312)

# சிறுபோக தண்ணீர்ப்பங்கு ஏலத்தில்

(சிவநகர்)

கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்திற்குரிய வயற்காணிகளின் 2017 சிறுபோகத் தண்ணீர்ப் பங்கு நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஆலய மண்டபத்தில் பகிரங்க ஏலத்தில் விடப்படவுள்ளது.

பங்குகளை ஏலம் கூறி எடுப்பவர் அன்றைய தினம் பணத்தைச் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது எனவும் பரிபாலன சபையினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (2-5-254)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவில் 2585.75 ஏக்கர் காணி இராணுவத்தினர் வசம்

முல்லைத்தீவு மாவட்டத்தின் 2585.75 ஏக்கர் காணிகளை இலங்கை இராணுவத்திணர் மற்றும் கடற்படை, விமானப்படை மற்றும் பொலிஸார் கையகப்படுத்தியுள்ளதாக மாவட்ட செயலக தகவல்களில் தெரிவிக்கின்றன.

இதனடிப்படையில் கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவில் 1611.5 ஏக்கர் காணிகளும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவில் 366.25 ஏக்கர் காணிகளும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவில் 153.000 ஏக்கர் காணிகளும் துணுக்காய் பிரதேச செயலக பிரிவில் 425. 00 ஏக்கர் காணிகளும் மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவில் 30.00 ஏக்கர் காணிகளுமாக மொத்தமாக 2585.75 ஏக்கர் காணிகள் இதுவரை இராணுவம், கடற்படை, விமானப்படை பொலிஸாரிடம் உள்ளது. இதனைவிட முல்லைத்தீவு மாவட்டத்தில் இன்றுவரை இராணுவம், கடற்படை, விமானப்படை பொலிஸாரினால் 1914. 70 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன.

இந்தவகையில் கரைதுறைப்பற்றில் 1859 ஏக்கரும் புதுக்குடியிருப்பில் 44.7 ஏக்கரும் ஒட்டுசுட்டானில் ஒரு ஏக்கரும் மாந்தை கிழக்கில் 10 ஏக்கருமாக மொத்தமாக 1914.70 ஏக்கர் காணிகள் இன்று வரை விடுவிக்கப்பட்டும் உள்ளதாகவும் அந்த தகவலில் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (5-281)

# அடுத்த கட்டமாக

## காணிப் பிணக்குகளை தீர்ப்பதற்கான நடமாடும் சேவை மே, ஜூன் மாதங்களில்



காணி அமைச்சு மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்ட ஜனாதிபதி ஜெனபதி நில மெகவர எனும் ஜனாதிபதி மக்கள் தொடர்பு செயற்றிட்டத்தின் கீழ் காணிப் பிணக்குகளை தீர்ப்பதற்கான நடமாடும் சேவை முதற்கட்டமாக கடந்த 25ஆம் திகதி முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை பூநகரி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பூநகரி பிரதேசசெயலாளர், காணிஆணையாளர், காணி அமைச்சின் அதிகாரிகள், வடக்கு மாகாண உதவிக் காணி ஆணையாளர், பிரதேச செயலக குடியேற்ற உத்தியோகத்தர்கள், வெளிக்கள போதனாசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டதுடன் இந்நடமாடும் சேவை இரு அமர்வுகளாக நடைபெற்றன.

இதன்போது இதுவரை தீர்ப்புகள் வழங்கப்பட்டும் நடைமுறையில் நிறைவேற்றுவதில் உள்ள பிரச்சினைகள் தொடர்பிலும் ஆராயப்பட்டது.

இதில் சுமார் 30 இற்கு மேற்பட்ட காணிப்பிணக்குகள் ஆராயப்பட்டு தீர்வுகள் வழங்கப்பட்டதுடன் 100 இற்கு மேற்பட்டோர் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

இதன் அடுத்தகட்ட நடமாடும் சேவை அனைத்து திணைக்களையும் உள்ளடக்கியதாக எதிர்வரும் மே, ஜூன் ஆகிய மாதங்களில் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (2-5-84)

# கிளிநொச்சி மாவட்ட பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் ஆதரவு

(பரந்தன்)

காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளினால் இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ள பூரண கடையடைப்பு போராட்டத்திற்கு தமது சங்கம் சார்பாக பூரண ஆதரவை வழங்கவுள்ளதாக, கிளிநொச்சி பன்னை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் கனகையா மதனரூபன் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அச்சங்கம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில்,

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளினால் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கும் முகமாக நடைபெறவுள்ள இந்தப் போராட்டத்திற்கு தமது பூரண ஒத்துழைப்பை வழங்கவுள்ளதாகக் குறிப்பிட்ட அவர், கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் இயங்கிவரும் முப்பது கிளை நிலையங்கள் மற்றும் கிளிநொச்சி கரடிப்போக்கில் அமைந்துள்ள சங்கத்தின் பிரதான தலைமைச் செயலகம் என்பன முற்றாக மூடப்பட்டு பூரண ஆதரவை வழங்கவுள்ளதாக கூறினார்.

காணாமல்போன உறவுகளின் அழைப்பிற்கமைய, சங்க தீர்மானத்தின்படி இந்த அறிவிப்பை தாம் வெளியிட்டுள்ளதாகவும் கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் அதில் மேலும் தெரிவித்துள்ளார். (2-5-312)




# கனகாம்பிகைக்குளம் அம்மன் ஆலய வருடாந்த பெருந்திருவிழா

கிளிநொச்சி இரணைமடு கனகாம்பிக்கைக்குளம் அம்பாள் ஆலயத்தின் 2017ஆம் ஆண்டுக்கான வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் முதலாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

கிளிநொச்சி இரணைமடு கனகாம்பிகை அம்பாள் ஆலயத்தின் 2017ஆம் ஆண்டுக்கான வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறும்.

மே மாதம் 8ஆம்திகதி திங்கட்கிழமை வேட்டைத் திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் 10ஆம் திகதி புதன்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளது. (2-5-15)

# நாட்கள் இருமாதங்களாகியும் தீர்வின்றி நாம் தவிக்கின்றோம்



(பரந்தன்)

கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் முன்றலில் ஆரம்பிக்கப்பட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் கவனயீர்ப்பு போராட்டம் நேற்று புதன்கிழமை 66 ஆவது நாளாகவும் தீர்வின்றி தொடர்கிறது.

கிளிநொச்சி மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடுதலையையும் வெளிப்படுத்தலையும் வலியுறுத்தி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் கடந்த பெப்ரவரி மாதம் காலை கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்றலில் ஆரம்பிக்கப்பட்ட தொடர் கவனயீர்ப்பு போராட்டமே இரவு பகலாக தொடர்கிறது. (2-5-312)

# இதுதான் எமது வாழ்வோ? நிலமின்றி தவிக்கின்றோம்

(பரந்தன்)

36 ஆவது நாளாகவும் தொடரும் பன்னங்கண்டி மக்களின் போராட்டம் கிளிநொச்சி பன்னங்கண்டி சரஸ்வதி கமம் மற்றும் ஜொனிக் குடியிருப்பு பிரதேச மக்கள் தமது குடியிருப்பு காணிக்கான ஆவணம் மற்றும் அடிப்படை வசதிகள், நிரந்தர வீட்டுத் திட்டம் என்பன இதுவரை கிடைக்கவில்லை.



எனவே இவ்வளவு காலமும் அடிப்படை உரிமை இல்லாத மக்களாக வாழ்ந்து விட்டோம். இனியும் வாழ முடியாது. தயவு செய்து எமக்கான காணி உரிமத்தை வழங்குங்கள் எனக் கோரி ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் நேற்று புதன்கிழமை 36 ஆவது நாளாகவும் தொடர்கிறது.

அத்துடன் தமக்கான காணி உரிமம் கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் என போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்துள்ளனர். (2-5-312)

# கதவடைப்பிற்கு ஒத்துழைப்பு வழங்குங்கள்

## மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் கோரிக்கை

வடக்கு- கிழக்கு முழுவதும் இன்று வியாழக்கிழமை முன்னெடுக்கப்படவுள்ள பூரண கதவடைப்பு ஜனநாயக எதிர்ப்பு போராட்டத்திற்கு எமது முழுமையான ஆதரவை வழங்குவதாக மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் வி.எஸ்.சிவகரன் விடுத்துள்ள செய்திக் குறிப்பில், வடக்கு, கிழக்கு பகுதிகளில் நிலமீட்புக்காகவும் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி வேண்டியும், அரசியல் கைதிகளின் விடுதலை மற்றும் வேலையற்ற பட்டதாரிகள் ஆகியோரினால் ஆரம்பிக்கப்பட்ட மக்கள் போராட்டங்கள் சுமார் இரண்டு மாதங்களை கடந்து தீர்வின்றி தொடர்கின்றது.

அந்த மக்களின் போராட்டங்களையும், அவர்களின் உணர்வுகளையும் மன்னார் மாவட்ட மக்களாகிய நாங்களும் மதிக்கின்றோம்.

அந்தவகையில் இன்றைய தினம் மேற்கொள்ளப்படவுள்ள ஹர்த்தால் கதவடைப்பு போராட்டத்திற்கு மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் சார்பாக முழுமையான ஆதரவை வழங்குகின்றோம்.

மன்னார் மாவட்டத்திலும் ஹர்த்தால் கதவடைப்பு போராட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்குரிய வழிவகைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இன்றைய தினம் தார்மீக அடிப்படையில் அனைவரும் ஒத்துழைப்பை வழங்கி உதவுமாறு உரிமையுடன் கேட்டுக் கொள்கின்றோம் என மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் அதில் குறிப்பிட்டுள்ளார். (2-5-4)

## பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்கு சான்றிதழ்

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகமும், கலாசார பேரவையின் திரைப்பட கல்லூரியால் நடத்தப்பட்ட குறும்படம் மற்றும் புகைப்பட பயிற்சிகளை முடித்துக் கொண்டவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும்நிகழ்வு நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் வேல்ட் விசன் நிறுவனத்தின் அனுசரணையில் இடம் பெற்றது. ஆறுமாத காலமாக புகைப்படம்மற்றும்குறும்பட துறைகளில் பயிற்சிகளையும், செயலமர்வுகளையும் பெற்றுக் கொண்டவர்கள் தங்களுடைய செயற்றிட்டங்களாக நான்கு வகையான 36 குறும்படங்களையும் ஒரு கவிதை ஒளி நாடாவும் தயாரித்துள்ளனர். இவை அனைத்தும் அண்மையில் இடம் பெற்ற கலாசார விழாவில் வெளியீடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்த நிகழ்வில் கரைச்சி பிரதேச செயலாளர் கோ. நாகேஸ்வரன், வேல்ட் விசன் நிறுவன நிறைவேற்று அதிகாரி, பிரதேச செயலக திட்டப் பணிப்பாளர், காவேரி கலாமன்ற இயக்குநர் அருட்தந்தை யோசுவா மற்றும் கலைஞர்கள் [illegible] கலந்து கொண்டார்கள். (2-5-312)

# பல்வேறுபட்ட குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புபட்டவர்கள் சமூக சேவையில்

(மல்லாவி)

கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளிலும் பல்வேறு குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புபட்ட பலர் மாவட்ட நீதவான் நீதிமன்றத்தினால் சமுதாயம்சார் சீர்திருத்த கட்டளைச் சட்டத்தின் கீழ் சமூக சேவைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். சமுதாயம் சார் சீர்திருத்தத் திணைக்களத்தினர், மாவட்ட உத்தியோகத்தர் றெசாந் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்.

கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் 484 வழக்குகளுடன் தொடர்புபட்டவர்கள் சமுதாயம் சார் சீர்திருத்த கட்டளைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளிலும் பல்வேறு குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புபட்ட பலர் மாவட்ட நீதவான் நீதிமன்றத்தினால் சமுதாயம் சார் சீர்திருத்த கட்டளைச்சட்டத்தின் கீழ் சமூக சேவைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

இவ்வாறு சமூக சேவைகளில் ஈடுபடுத்தப்பட்டு வருபவர்களுக்கு அவர்கள் எதிர்காலத்தில் குற்றச்செயல்களில் ஈடுபடாத வகையில் திருத்தி வாழ்வதற்கும் சுயதொழில்களை மேற்கொள்வதற்கும் நீதிமன்ற கட்டளைகளுக்கு அமைவாக விழிப்புணர்வு கருத்தரங்குகள்.தொழில்சார் பயிற்சிகள் என்பனவும் வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்வருடத்தில் பல்வேறு குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புபட்டவர்கள் சமூகசேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அதாவது சட்டவிரோத கசிப்பு உற்பத்தி விற்பனைகள் தொடர்பிலான 186 வழக்குகளுடன் தொடர்புபட்டவர்கள் .மதுபோதையில் வாகனங்களைச் செலுத்திச் சென்றமை தொடர்பான சுமார் 109 வழக்குகளுடன் தொடர்புபட்டவர்கள் .சட்டவிரோத மணல் அகழ்வுகள் தொடர்பான 47 வழக்குகளுடன் சம்பந்தப்பட்டவர்கள் உள்ளடங்கலாக சுமார் 484 வழக்குகளுடன் தொடர்புபட்டவர்கள் இவ்வாறு சமுதாயம் சார் சீர்திருத்த கட்டளைக்கு அமைவாக சமூக சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.


எதிர்காலத்தில் குற்றச்செயல்களில் ஈடுபடாத வகையில் வாழ்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் சமுதாயம் சார் சீர்திருத்த திணைக்களத்தின் மாவட்ட உத்தியோகத்தர் றெசாந் தெரிவித்துள்ளார். (2-5-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பருத்தித்துறை ஞானசம்பந்தர் கலைமன்ற முன்பள்ளியின் விளையாட்டு விழா அண்மையில் இடம்பெற்றது. இதில் மன்றத்தலைவர் டாக்டர்.எஸ்.சுந்தரமூர்த்தி மங்கல விளக்கேற்றுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலய அதிபர் எஸ்.சண்முகராஜா உரையாற்றுவதையும் இலங்கை வங்கியின் இளைப்பாறிய உதவிப் பொது முகாமையாளர் எஸ்.பாலசுப்பிரமணியம் முன்பள்ளிச் சிறார்களுக்கு பரிசில் வழங்கி கௌரவிப்பதையும் படங்களில் காணலாம்.

# ஒரே பிரசவத்தில் நான்கு குழந்தைகள்



(கொழும்பு)

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் ஒரே பிரசவத்தில் நான்கு குழந்தைகளைப் பெற்றுள்ளார்.

நேற்று அதிகாலை பொத்துவிலைச் சேர்ந்த தாயொருவர் சத்திர சிகிச்சை மூலம் குறித்த நான்கு குழந்தைகளை பிரசவித்துள்ளதாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் எம்.எஸ். இப்ராலெப்பை தெரிவித்தார்.

பொத்துவில் இன்ஸ்பெக்டர் ஏற்றம் வீதியை சேர்ந்த ஐ.விஜிதகுமாரி என்னும் 35 வயதுடைய பெண்ணே இந்த நான்கு குழந்தைகளை பிரவித்துள்ளார். குழந்தைகள் நிறை குறைவு காரணமாக தீவிர சிகிச்சை பிரிவில் வைக்கப்பட்டுள்ளதாக குழந்தை நல வைத்திய நிபுணர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் மகப்பேற்று வைத்திய நிபுணர்கள் மற்றும் சத்திரசிகிச்சை நிபுணர்களின் சிறப்பான நடவடிக்கைகள் காரணமாக குறித்த குழந்தைகள் பாதுகாப்பான முறையில் சத்திர சிகிச்சை மூலம் பிரசவிக்கப்பட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர். (இ-7)

# தலைமன்னார் - தனுஷ்கோடிக்கு கப்பல் சேவை பிரதமர் மோடியிடம் தொண்டமான் கோரிக்கை

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து, பெருந்தோட்ட மக்கள் சார்பாக, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகன் தொண்டமான், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதமொன்றை எழுதியுள்ளார்.

இந்திய சமுதாயத்துக்குக் குறிப்பாக தோட்டத் தொழிலாளர்களுக்கு கல்வி, தொழில்நுட்பம், வீடமைப்பு, கலாசாரத் தேவைகள் எனப்பல வகையிலும் இந்திய அரசாங்கம் வழங்கிய உதவி களை நாம் மனதார மதிக்கிறோம். ஆயினும், வீடமைப்பு, கல்வி, தொழில்நுட்ப அறிவு என்ற துறைகளில் எமக்கு மேலும் இந்தியாவின் உதவிகள் தேவையாக உள்ளது. வீடமைப்பு, கல்வித் தேவைகளை நிறைவேற்ற பெருந்தோட்ட சமுதாயத்துக்கு அதிகரித்த தேவையுள்ளது. அந்த வகையில் அரசாங்கத்தின் பங்களிப்பு குறைவாக இருப்பது இதற்கான காரணமாகும்.

கடந்த 2 வருடங்களில் க.பொ.த (சா/த), (உ/த) பெருந்தோட்டத்துறை மாணவர்களின் பெறுபேறுகளின் ஊக்கமும் நம்பிக்கையும் அளிப்பவையாக உள்ளன. ஆனால், அரசாங்கப் பல்கலைக்கழகங்களில் 24,000 மாணவர் மட்டுமே அனுமதிக்கப்படுவதால், பல்கலைக் கழகங்களில் சேர்ந்து படிக்கும் வாய்ப்பு மிகவும் குறைவாக உள்ளது.

பெருந்தோட்டத்துறைத் தொழிலாளர்களின் உரிமைகளுக்கு போராடுவதில் முன்னிற்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தங்களிடம் பின்வரும் வேண்டுதல்களை முன்வைக்கின்றது.

வீடமைப்பு பெருந்தோட்டத் துறைக்கு 4,000 வீடுகளை தரப்பட்டதையிட்டு நாம் இந்திய அரசாங்கத்துக்கு நன்றி கூறுகின்றோம். ஆயினும், மேலும் பல வீடுகளைக் கட்டம் கட்டமாக கட்ட வேண்டிய தேவையுள்ளது. இந்திய அரசாங்கப் புலமைப்பரிசில்கள் இலங்கைத் தோட்டத்தொழிலாளர்களின் கல்வி, நம்பிக்கை நிதியம், தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு வழங்கும் புலமைப் பரிசில்கள் குறைவாக உள்ளன.

தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளின் கல்வி அடைவுகள் கணிசமாக அதிகரித்துச் செல்லும் நிலையில் அதிக புலமைப்பரிசில்கள் தேவையாக உள்ளன. பல்கலைக்கழகம் உருவாக்கல் பெருந்தோட்டப் பகுதியிலிருந்து உயர் கல்விக்குத் தகைமை பெறும் பிள்ளைகளின் தொகை மிகவும் கூடுதலாக அதிகரித்துள்ளமையினால் பெருந்தோட்டப் பகுதிக்கென ஒரு பல்கலைக்கழகம் அமைக்கப்படுவது தேவையாகவுள்ளது. எனவே, பெருந்தோட்டப் பகுதியில் ஒரு பல்கலைக்கழகம் அமைய, இந்திய அரசாங்கத்தின் உதவியை நாம் கோருகின்றோம். தலைமன்னார் - தனுஷ்கோடி கப்பல் சேவை தற்போது இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான விமானப் போக்குவரத்து கடினமானதாகவும் செலவு கூடியதாகவும் உள்ளது. எனவே, தலைமன்னார் - தனுஷ்கோடி கப்பல் சேவை, விசேடமாக பெருந்தோட்டத்துறை சமுதாயத்தினருக்குப் பேருதவியாக அமையும். பிரதம அமைச்சர் அவர்கள் மேற்படி எமது வேண்டு கோளை கவனத்திலெடுத்து, பெருந தோட்ட மக்கள் பிரதான இலங்கை சமூகத்துடன் இணைந்து முன்னேற உதவுவீர்கள் என நான் நம்பிக்கை கொண்டுள்ளேன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

# படகு விபத்து; 30 பேர் பலி!

மேற்கு ஆபிரிக்க நாடுகளான செனகல் மற்றும் காம்பியாவில் நடைபெற்ற இரண்டு படகு விபத்துகளில் சுமார் 30 பேர் உயிரிழந்தனர்.

மேற்கு ஆபிரிக்காவின் அட்லாண்டிக் கடல் பகுதியில் அடுத்தடுத்து உள்ளது செனகல் மற்றும் காம்பியா நாடுகள். இந்த இரண்டு நாடுகளில் நடைபெற்ற இரண்டு வெவ்வேறு படகு விபத்துச் சம்பவத்தில் சுமார் 30 பேர் உயிரிழந்தனர்.

முதலில் மத்திய செனகலின் தீவு பகுதியில் 72 பேருடன் சென்ற படகு கவிழ்ந்து நேற்று முன்தினம் விபத்துக்குள்ளானது. அதிக பேருடன் சென்றதால் இந்த படகு கவிழ்ந்ததாக கூறப்படுகிறது.

இந்த விபத்தில் 22 பேர் உயிரிழந்தனர். இதில் பெரும்பாலானோர் பெண்கள் ஆவர். விபத்து நடந்த பகுதியில் இருந்து சுமார் 51 பேர் மீட்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு கடற்படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதேபோல், மற்றொரு விபத்து காம்பியா ஆற்றில் நிகழ்ந்தது. இந்த விபத்தில் 8 மீனவர்கள் உயிரிழந்தனர். தியாபுகுக் மற்றும் தபஜங் ஆகிய கிராமங்களுக்கு இடையில் உள்ள ஆற்றில் படகு கவிழ்ந்து விபத்து ஏற்பட்டது. (இ-7)



வடமாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினத்தின் நிதி ஒதுக்கீட்டிலிருந்து யாழ். வேலணை சைவப்பிரகாச வித்தியாலயத்திற்கு ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான மேலைத்தேய அணிநடைக்குரிய (பாண்ட்) வாத்தியக் கருவிகள், வெற்றிக் கேடயங்கள், அதிபர் அலுவலக அலுமாரி, பரிசளிப்பு மேடை, விருந்தினர் உரையாற்றும் பீடம் ஆகியவற்றை அண்மையில் பாடசாலை அதிபர் வாகீசனிடம் விந்தன் கனகரத்தினம் கையளித்தார்.



யாழ்ப்பாணம் நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலய வருடாந்த விளையாட்டு அண்மையில் அதிபர் மகேசன் கஜேந்திரன் தலைமையில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதி ஸ்ரீதேவி அசோகன் கலந்து கொண்டு சிறப்பித்தார். மாணவர்களுக்கான விருதுகளையும் கேடயங்களையும் வழங்கி விருந்தினர்கள் மகிழ்வித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைத் தரிசனம்

1944.09.15 ஆம் திகதி பிறந்த இவர் 1955 ஆம் ஆண்டு தவப்புதல்வன் என்னும் நாடகத்தை நடித்து நடிப்புலகில் கால்பதித்தார். அதன்பின்னர் 1960 ஆம் ஆண்டு மனோகரா என்னும் நாடகத்தில் பெண்வேடம் பூண்டு நடித்துள்ளார். அமரர் நமசிவாயம் அவர்களை ஆரம்ப குருவாகக் கொண்டு நாடகத்தில் திறமை காட்டி வந்தார். இவர் பண்டார வன்னியன், அரிச்சந்திரா இசை நாடகத்தில் அதி உச்ச நடிப்பை பல மேடைகளில் வெளிக்காட்டினார். 54 இற்கு மேற்பட்ட நாடகங்களில் நடித்துள்ளார். முள்ளியவளையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் 2016 இல் கலாபூஷண விருதையும் இதே ஆண்டில் சிறந்த நடிகருக்கான விருதையும் பெற்றார். கலாபூஷணம் ச.சிதம்பரப்பிள்ளை அவர்கள் தன்னைப் பற்றியும் தனது கலைப்பணி பற்றியும் வலம்புரிக்கு வழங்கிய செவ்வியை இங்கு தருகின்றோம்.



## கலாபூஷணம் ச.சிதம்பரப்பிள்ளை அவர்களுடனான சந்திப்பு



◆ தங்களுக்கு எப்படி நாடகத் துறையில் ஆர்வம் வந்தது?

எனது நடிப்புத்துறையானது பத்து வயதிலேயே ஆரம்பமானது. அதாவது பாடசாலையில் ''தவப் புதல்வன்'' நாடகத்தை தயாரித்து அதில் என்னை நடிக்க வைத்த திருவாளர் - நமசிவாயம் ஆசிரியர் அவர்களே என்னை நடிப்புத் துறையில் அடி எடுத்து வைக்கத் தூண்டியவர். அந்தப் பெருமை அவ் ஆசிரியருக்கே.

அந்த நாடகத்தில் எனக்கு அதிபர், ஆசிரியர்கள், சமூகத்தினரால் சிறந்த நடிகன் என்ற பல பாராட் டுக்களும் ஊக்குவிப்புக்களும் கிடைக்கப்பெற்றன.

இதனால் அன்று தொட்டு நாடகத்துறையில் எனக்கு மிகுந்த ஆர்வம் ஏற்பட்டு இற்றைக்கு 54 நாடகம் வரை மேடையேறி நடித்துள்ளேன்.

அது மட்டுமன்றி என் பெற்றோரின் ஊக்குவிப்பும் என் தந்தை ஒரு கலையார்வம் மிக்க ஒருவராக விளங்கியமையும் எனக்கு நாடகத்துறையில் ஆர்வம் ஏற்பட ஏதுவாக அமைந்துள்ளது.

◆ தாங்கள் இதுவரை நடித்த பல்வேறுபட்ட நாடகங்களில் தங்களுக்கு பிடித்த பாத்திரம் எது?

நான் 50 இற்கு மேற்பட்ட பல்வேறு மேடை நாடகங்கள் நடித்திருந்தாலும் அவற்றில் பண்டார வன்னியனில் வெள்ளையனாக நடித்த பாத்திரம் எனக்கு பிடித்த பாத்திரம் என்று கூறலாம். இந் நாடகம் இலங்கையின் பல பாகங்களிலும் அரங்கேறி நூற்றுக்கு மேற்பட்ட மேடைகளில் நடித்துள்ளேன்.

◆ தாங்கள் அரிச்சந்திரா இசை நாடகத்தில் நடித்தமைக்காக சிறந்த நடிகருக்கான விருது பெற்றுள்ளீர்கள். அதுபற்றி கூற முடியுமா?

நான் நாடகத்துறையிலே எப்பாத்திரத்தை ஏற்று நடித்தாலும் அப்பாத்திரமாகவே என்னை முழுமையாக மாற்றும் இயல்பு உடையவன். இதனால் சிறப்பாக நடிக்க முடிகிறது.

இவ்வாறே அரிச்சந்திரா மயான காண்டத்தில் விஸ்வாமித்திர முனிவராக என்னை முழுமையாக மாற்றிக் கொண்டு நடித்ததால் சிறந்த நடிகருக்கான விருது வன்னிக்குறோஸ் கலாசார பேரவையினால் வழங்கப்பட்டது.

◆ தாங்கள் முதன் முதலாக நடித்த நாடகம் எது? எத்தனையாம் ஆண்டு?

நான் நடித்த முதல் பாடசாலை நாடகம் 1955 ஆம் ஆண்டு முள்ளியவளை சைவப்பாடசாலையில் (இன்று மு/கலைமகள் வித்தியாலயம்) தவப்புதல்வன் எனும் நாடகமாகும். நான் நடித்த முதல் சமூக மேடை நாடகம் 1960 ஆம் ஆண்டு ''மனோகரா'' எனும் நாடகத்தில் பெண்வேடம்பூண்டு நடித்துள்ளேன்.

◆ பண்டாரவன்னியன் நாடகத்தில் தங்களின் பாத்திரங்களைப் பற்றி?

பண்டார வன்னியன் நாடகத்தில் வெள்ளைக்காரனாகவும் (ஆங்கிலத்துறை) காக்கை வன்னியனாகவும் நடித்துள்ளேன். இரண்டு பாத்திரமும் எனக்கு பிடித்தமான, பொருத்தமான பாத்திரமாக அமைந்துள்ளது. எல்லோராலும் சிறந்த நடிப்பு என கூறப்பட்டது. அதனால் பொருத்தமான பாத்திரமாக எண்ணுகிறேன்.

◆ தாங்கள் இப்போதும் எந்தப் பாத்திரத்தையும் ஏற்று சிறப்பாக நடிக்கும் நிலையில் இருக்கின்றீர்கள். அது எப்படி உங்களால் முடிகிறது?

''நடிப்புத் துறையின் நாயகனே சிவன்'' அந்த சிவன் கொடுத்த கொடையே தவிர வேறொன்றுமில்லை.

◆ தற்போதைய காலத்தில் சினிமா மக்களிடையே அதிக செல்வாக்குப் பெற்று வருகின்றது. அந்த வகையில் நாடகத் துறை எந்நிலையில் உள்ளது?

நாடகத்துறையின் ஓர் பரிணாம வளர்ச்சியே சினிமா என்று கூறலாம். அதாவது நாடகத்துறையே இன்று சினிமாவாக உருவெடுத்து உலகெங்கிலும் உலா வருகிறது. இன்று கலாசார மாற்றங்கள், நாகரிக மாற்றங்கள் வளர்ச்சியடைய வளர்ச்சியடைய சினிமாவும் வளர்ச்சியடைந்து தனித்துவமான போக்கில் இளம் கலைஞர்கள், இளைஞர்கள், யுவதிகள் அனைவரையும் ஈர்த்து தன்னகத்தே ஓரிடம் வகிக்கிறது.

இது இவ்வாறிருப்பதால் நாடகத்துறை வீழ்ச்சியடைந்து கொண்டு போகிற நிலை உருவாகிறது. இளம் சந்ததியினர் அதனை பேணிக் காக்க விருப்பமின்றி போகின்றனர்.

இருந் தாலும் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், பாடசாலைகள், கலைக் கூடங்கள் என்பவற்றில் இதற்கென ஓரிடமுண்டு. கல்விக்காகவும் பட்டத் திற்காகவும் தொழில் தேடுவதற்காகவும் இன்றும் நாடகத்துறை பேணப்பட்டு வருவதை பெரிதும் அவதானிக்க முடிகிறது.

◆ நாடகத்துறையை தாங்கள் எந்த வகையில் வளர்க்க விரும்புகிறீர்கள்?

இளம் கலைஞர்களை உருவாக்கி பாரம்பரிய நாடகங்களை சிதைவடையாவண்ணம் தயாரித்து இனிவரும் இளம் சந்ததியினருக்கு நடித்துக்காட்ட இளைஞர்கள் முன் வந்தால் எந்தவொரு பிரதிபலனையும் எதிர்பாராமல் அதை நிறைவேற்றவும் பூரண ஒத்துழைப்பு வழங்கவும் நடிப்புக் கலையை காட்டிக் கொடுத்து அவர்களையும் அதி சிறந்த நடிகர்களாக்கவும் நான் என்றும் தயங்காது பங்களிப்புச் செய்வேன். அது கலைத்துறைக்கு நான் செய்யும் தொண்டாகவே கருதுகிறேன்.

◆ இளம் கலைஞர்களுக்கு தாங்கள் கூறுவது?

இன்றைய கால கட்டத்தில் இளம் கலைஞர்களை உருவாக்குவது மிகவும் சிரமமானதொன்றாகும். காரணம் வீட்டிலிருந்தபடியே கலையை ரசிக்க முடிகிறது.

ஆனால் இன்றைய இளம் கலைஞர்கள் எல்லோரும் நாடகத் துறையிலோ, நடனத்துறையிலோ, கவித்துறையிலோ முன்னணி வகித்து இயல், இசை, நாடகம் என்ற எமது முன்னோர்களது வார்த்தைக் கிணங்க அதில் முன்னேறிச் சென்று இனிவரும் இளம் சந்ததியினருக்கும் அதை வழிநடத்திச் செல்ல வேண்டும் என்பதே என் பேரவா.

◆ மேடையில் தாங்கள் சந்தித்த சுவாரசிய விடயங்களைப் பகிருங்களேன்?

மேடையிலே பல நடிகர்களுடன் நடித்துக் கொண்டிருக்கும் சந்தர்ப்பங்களில் விறுவிறுப்பான கட்டங்கள் வரும்வேளை என் எதிர்பாத்திரங்களில் நடித்த சிலர் கதை வசனங்களை மறக்க நேரிடுவார்கள்.

அதுமட்டுமன்றி கதை வசனங்களை மாறிக் கூறிவிடுவார்கள். அச் சந்தர்ப்பத்தில் அப்பிழைகளைக் கண்டு நான் சோர்வடையாது எதிர்ப் பாத்திரங்களுக்கு ஏற்ப என் நடிப்பையும் பேச்சையும் சிரிப்பினையும் பிரயோகித்து எதிர்ப்பாத்திரங்களின் பிழையை சபையோருக்கு காட்டிக் கொடுக்காவண்ணம் நாடகத்தை வழிவழிநடத்திச் செல்வது என் நாடக அனுபவத்தில் மிகவும் குறிப்பிட்டுக்கூற வேண்டியதொன்று.

உதாரணமாக கொள்ளைக்காரன் எனும் நாடகத்தில் நான் நடிக்கும் போது என் சக நடிகருக்கு ''வளர்த் தடா குழந்தையை கொழுத்தடா நெருப்பை'' என்று நான் கூற சக நடிகன் மௌனமாகவே நின்றார்.

இரண்டாவது தடவையும் நான் அவ் வசனத்தை விறுவிறுப்பாக்கி கூறினேன்.

அப்போதும் எதிர் நடிகர் குழந்தையை வளர்த்த மறந்து விட்டார்.

மூன்றாவது தடவை எதிர் நடிகருக்கு கன்னத்தில் ஓர் அறை விடுவது போல உண்மையிலே ஓர் அறை விட்டுத்தான் என் நடிப்பையும் நாடக கதையோட்டத்தையும் கொண்டு செல்ல முடிந்தது.

இது சபை முன்னிலையில் பெரும் அனுபவமாகவே எனக்கு அமைந்தது. அது மட்டுமன்றி அக்காட்சி ஒரு தத்ரூபமானதாக ரசிகர்கள் மத்தியில் அமைந்தது.

மேலும் சில வேளைகளில் மேடையில் நடித்துக்கொண்டிருக்கும் போது நான் அணிந்த தலைமுடி, ஆடை, அணிகலன்கள் தவறுதலாக கழற நேர்ந்து விடும்.

அச்சந்தர்ப்பத்தில் அதை பார்வையாளர்களுக்கு புரியாத வண்ணம் அதனை திரும்பவும் நடிப்புப் பாணியிலே சரி.செய்து விடுவேன். இதுவும் என் நாடக அனுபவங்களில் ஒன்றாகும்.

இது மட்டுமன்றி என் நாடக ஆரம்பகால கட்டங்களில் பண்டார வன்னியன் நாடகத்தில் என்னை வெள்ளையனாக நடிக்கும்படி அண்ணாவியார் கூறும் வேளை ஓர் பயம் என்னில் ஊடுருவியது.

ஏனெனில் நானோ கறுப்பு. எவ்வாறு வெள்ளையனுக்கு என்னால் நடிப்பது என்று என் தவறான எண்ணம். பின் அண்ணாவியாரின் வேண்டு கோளுக்கிணங்கி 10 நாட்களில் நாடாளுமன்ற உறுப்பினர் ஆனந்த சங்கரியின் தலைமையில் கிளிநொச்சியில் அரங்கேறியது.

அதில் என் தவறான எண்ணம் மாறுதலாக அமைந்து என் நடை, உடை, பாவனை, நடிப்பு அனைத்துமே ஒரு வெள்ளையன் என்ற பாராட்டும் கிடைத்தது.

இது இன்னோர் அனுபவமாகும். இதிலிருந்து நடிப்புத் திறனால் எப்பாத்திரத்தையும் திறம்பட நடிக்கலாம் என்ற அனுபவத்தைப் பெற்றேன்.

நேர்காணல்:
**ஜெயம் ஜெகன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் ஆணையத்திற்கு லஞ்சம் கொடுக்க முயன்ற டி.டி.வி. தினகரன் கைது



(டில்லி)

இரட்டை இலைச் சின்னத்தைப் பெறுவதற்காக தேர்தல் ஆணையத்திற்கு லஞ்சம் கொடுக்க முயன்ற வழக்கில் டிடிவி தினகரன் கைது செய்யப்பட்டுள்ளார்.

அ.தி.மு.க. இரண்டாக உடைந்ததால், அந்த கட்சியின் சின்னமான "இரட்டை இலை" சின்னத்தை தேர்தல் ஆணையம் முடக்கி வைத்துள்ளது. இரட்டை இலைச் சின்னத்தை யாருக்கு கொடுக்க ஆணையம் ஆய்வு செய்து வருகிறது. இதற்காக இரு அணியினரும் ஆவணங்களை சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இரட்டை இலைச் சின்னம் பெற அ.தி.மு.க. அம்மா அணி துணைப் பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரன் ரூ.50 கோடி லஞ்சம் கொடுக்க முயன்றதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இடைத்தரகர் சுகேஷ் சந்திரசேகர் மூலம் அவர் இலஞ்சம் கொடுக்க முயன்றதாக கூறப்படுகிறது. இதற்காக சுகேசுக்கு ரூ.10 கோடியை தினகரன் கொடுத்ததாக தகவல் வெளியானது.

இந்த நிலையில் ரூ.50 கோடி இலஞ்சம் கொடுக்க முயன்றது தொடர்பாக டிடிவி. தினகரன் மீது 3 பிரிவுகளில் டில்லி குற்றப்பிரிவு பொலிஸார் வழக்கு பதிவு செய்தனர். இது குறித்த விசாரணைக்கு வருமாறு டில்லி பொலிஸார் அளித்த சம்மனை ஏற்று டி.டி.வி. தினகரன் கடந்த சனிக்கிழமை டில்லி சென்றார்.

சாணக் கியா புரியில் உள்ள குற்றப் பிரிவு அலுவலகத்தில் பொலிஸ் முன்பு அவர் ஆஜரானார்.

அவரிடம் 4 நாட்களாக டில்லி பொலிஸார் விசாரணை நடத்தி வந்தனர்.

இந்நிலையில், இரட்டை இலைச்சின்னம் பெறுவது தொடர்பாக தேர்தல் ஆணையத்திற்கு இலஞ்சம் கொடுக்க முயன்ற வழக்கில் டிடிவி தினகரன் கைது செய்யப்பட்டுள்ளார்.

டில்லி குற்றவியல் பொலிஸார் இந்த அதிரடி நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர். தினகரனுக்கு உதவியாக இருந்த அவரது நண்பர் மல்லிகார்ஜுனாவையும் டில்லி பொலிஸார் கைது செய்துள்ளதாக தெரிகிறது.

முன்னதாக 4ஆவது நாளான நேற்று முன்தினம் டில்லி பொலிஸார் தினகரனிடம் சுமார் 7 மணி விசாரணைக்கு பின்னர் இந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-3)

# அ.தி.மு.க. அலுவலகத்திலிருந்து சசிகலா பனர்கள் அகற்றல்



(சென்னை)

அ.தி.மு.க. தலைமை கழகத்தில் வைக்கப்பட்டிருந்த சசிகலா பனர்கள் நேற்று காலையிலேயே ஒவ்வொன்றாக அகற்றப்பட்டன. கட்சி அலுவலகத்தில் இருந்த அவரது படமும் எடுக்கப்பட்டு விட்டது.

ஜெயலலிதா மறைவுக்கு பிறகு அ.தி.மு.க. பிளவுபட்டு சசிகலா தலைமையில் ஒரு அணியும், ஓ.பன்னீர செல்வம் தலைமையில் மற்றொரு அணியும் செயற்படுகிறது.

இரு அணிகளும் இரட்டை இலை சின்னத்தை பெறுவதற்கு தேர்தல் ஆணையத்தில்முறையிட்டுள்ள நிலையில் அதற்கான அபிடவிட் பிரமாணப்பத்திரங்களை தாக்கல் செய்யும் வேலைகளில் இறங்கி உள்ளனர்.

அ.தி.மு.கவின் இரு அணிகளும் ஒன்று சேர்ந்தால் இரட்டை இலைச் சின்னத்தை மீண்டும் பெற்று விடலாம் என்பதற்காக பேச்சுவார்த்தை நடத்த குழு அமைக் கப்பட்டுள்ளது. இந்தப் பேச்சுவார்த்தை நடைபெறஓ.பன்னீர செல்வம் தரப்பில் 3 நிபந்தனைகளையும் விதித்திருந்தனர்.

ஜெயலலிதா மரணத்தில் உள்ள மர்மத்தை விசாரிக்க சி.பி.ஐ. விசாரணைக்கு மாநில அரசு பரிந்துரைக்க வேண்டும் என்றும் சசிகலா குடும்பத்தினரை கட்சியை விட்டு நீக்க வேண்டும் என்று வலியுறுத்தி வந்தனர்.

3ஆவது கோரிக்கையாக அ.தி.மு.க. தலைமை கழகத்தில் வைக்கப்பட்டிருந்த சசிகலாவின் புகைப்படங்களை அகற்றி புனிதத்தை காப்பாற்றவேண்டும்என்று அவைத் தலைவர் மதுசூதனன் நேற்று முன்தினம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இந்த வேண்டுகோ ளுக்கு இணங்க அ.தி.மு.க. தலைமை கழகத்தில் வைக்கப்பட்டிருந்த சசிகலா பனர்கள் நேற்றுக் காலையிலேயே ஒவ்வொன்றாக அகற்றப்பட்டன. கட்சி அலுவலகத்தில் இருந்த அவரது படமும் எடுக்கப்பட்டு விட்டது.

ஓ.பன்னீர்செல்வம் அணியினரின் நிபந்தனைகளை ஏற்று சசிகலா பனர் அகற்றப்பட்டுள்ளதால் இரு அணிகளும் பேச்சுவார்த்தை நடத்த உகந்த சூழல் ஏற்பட்டுள்ளதாகவே கருதப்படுகிறது. (இ-3)

# யாரும் எங்களை பின்னால் இருந்து இயக்கவில்லை வைத்திலிங்கம்

(சென்னை)

யாரும் எங்களை பின்னால் இருந்து இயக்கவில்லை என முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி அணியின் பேச்சுவார்த்தை குழு தலைவர் வைத்திலிங்கம் எம்.பி. தெரிவித்தார்.

அ.தி.மு.கவில் இரு அணிகளையும் இணைப்பதற்காக பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

இதற்காக முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி அணியின் பேச்சுவார்த்தை குழுத் தலைவராக வைத்திலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் ஆங்கில பத்திரிகை ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியில்,

கேள்வி:- இரு அணிகளும் இணைவது சம்பந்தமான பேச்சுவார்த்தை நடத்துவதில் தள்ளாட்டம் இருப்பதற்கு என்ன காரணம்?

பதில்:- நாங்கள் எப்போதுமே பேச்சுவார்த்தைக்கு தயாராக இருக்கிறோம். இது சம்பந்தமாக ஓ.பன்னீர் செல்வம் அணித்தலைவர் கே.பி.முனுசாமியிடம் நான் தொடர்பு கொண்டு பேசினேன்.

திங்கட்கிழமை பேச்சுவார்த்தை தொடங்குவதாக இருந்தது. ஜே.சி.டி.பிரபாகரனை தொடர்பு கொள்ள முயன்றேன். ஆனால், முடியவில்லை.

அமைச்சர் சி.வி. சண்முகம், பி.எச். மனோஜ் பாண்டியனை தொடர்பு கொண்டார். ஆனால், அவர் கள் 2 நிபந்தனைகளை (சசிகலா குடும்பத்தினரை கட்சியை விட்டு நீக்க வேண்டும், ஜெயலலிதா மரணம் குறித்து சி.பி.ஐ. விசாரிக்க வேண்டும்) முன்வைத்து பேச்சுவார்த்தைக்கு வரவில்லை.

எல்லாவற்றுக்கும் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண முடியும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்.

கேள்வி:- உங்கள் அணியினர் டி.டி.வி. தினகரன் மற்றும் அவரது குடும்பத்தினரை தொடர்பில் இருந்து விலக்கி வைத்து விட்டதாக சொல்கிறீர்கள். ஆனால், உங்களுடைய கட்சி அமைப்பு அவர்களுடன் தொடர்பில் உள்ளது ஏன்இப்படிநடக்கிறது?

பதில்:- நாங்கள் அவர்களை ஒதுக்கி வைத்து விட்டோம். அவர்களும் கட்சி மற்றும் ஆட்சி விவகாரங்களில் இருந்து விலகியே இருக்கிறார்கள். எல்லாவற்றையும் ஒரே நாளில் செய்து விட முடியாது.

நமது எம்.ஜி.ஆர். பத்திரிகையை பொறுத்தவரை ஒரு நாளில் செய்து விடக்கூடிய விடயம் அல்ல. அந்த பத்திரிகை ஜெயலலிதாவால் அறிவிக்கப்பட்ட அறக்கட்டளை மூலம் நடத்தப்படுகிறது. இதில், பல சட்டப் பிரச்சினைகள் உள்ளன. குறிப்பாக இந்த விவகாரம் தேர்தல் ஆணையம் முன்பு இருக்கிறது.

கேள்வி:- சசிகலா குடும்பத்தினரை கட்சி பொறுப்பில் இருந்து நீக்குவதற்கு ஏன் தயக்கம் காட்டுகிறீர்கள்?

பதில்:- இதில், தயக்கம் என்ற பேச்சுக்கே இடமில்லை. சசிகலா பொதுச்செயலாளராக தேர்வு செய்ததற்கு எதிராக தேர்தல் ஆணையம் முன்பு பிரச்சினை உள்ளது.

கட்சியில் இருந்து விலகி இருப்பதாக தினகரன் அவராகவே கூறி இருக்கிறார். ஜெயலலிதாவால் தேர்வு செய்யப்பட்ட கட்சி நிர்வாகிகள் இருபக்கமும் இருக்கிறார்கள். தேர்தல் ஆணையத்தின் முடிவை எதிர்பார்த்து கொண்டு இருக்கிறோம். எல்லா விடயத்தையும் பேச்சுவார்த்தை மூலம்தான் முடிவுக்கு கொண்டு வர முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

# அ.தி.மு.க. இரு அணியும் நள்ளிரவில் இரகசிய பேச்சு

(சென்னை)

அ.தி.மு.க. இரு அணிகளின் தலைவர்களுக்கிடையே நேற்று முன்தினம் இரவு 8 மணிக்கு தொடங்கிய பேச்சுவார்த்தை நள்ளிரவு ஒரு மணி வரை நீடித்தது. இந்த பேச்சுவார்த்தையின் போது பல முடிவுகள் எடுக்கப்பட்டன.

ஜெயலலிதா மறைந்த பிறகு அ.தி.மு.க. தற்காலிக பொதுச்செயலாளராக சசிகலா தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பின்னர் அவர் முதலமைச்சராக வேண்டும் என்று சில அமைச்சர்கள் குரல் கொடுத்தனர்.

இதையடுத்து ஓ.பன்னீர் செல்வத்திடம் இருந்த முதல்வர் பதவி பறிக்கப்பட்டது. இதனால் ஓ.பன்னீர்செல்வம் சசிகலாவுக்கு எதிராக போர்க்கொடி உயர்த்தினார். எனவே அ.தி.மு.க. இரு அணிகளாக பிளவுபட்டது.

இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு எடப்பாடி மற்றும் ஓபி.எஸ். அணியைச் சேர்ந்தவர்கள் சென்னையில் உள்ள ஒரு நட்சத்திர ஹோட்டலில் ரகசிய பேச்சுவார்த்தை நடத்தினர்.

எடப்பாடி அணி சார்பில் வைத்திலிங்கம் எம்.பி., செங்கோட்டையன் ஆகியோரும், ஓ.பி.எஸ். அணி சார்பில் கே.பி.முனுசாமி, நத்தம் விசுவநாதன் ஆகியோரும் இந்த இரகசிய பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

நேற்று இரவு 8 மணிக்கு தொடங்கிய இந்த பேச்சுவார்த்தை நள்ளிரவு ஒரு மணி வரை சுமார் 5 மணி நேரம் நீடித்தது. இந்த பேச்சுவார்த்தையின் போது பல முடிவுகள் எடுக்கப்பட்டன. (இ-3)

## பாரதச் செய்தி

# ஜெயா மரணத்தின் மர்மத்தை கண்டுபிடிப்பதே முதல் இலக்கு

## பொன்னையன் உறுதி



(சென்னை)

ஜெயலலிதாவின் மரணத்தில் உள்ள மர்மத்தை கண்டுபிடிப்பதையே முதல் இலக்காக கொண்டு அ.தி.மு.கவின் இரு அணிகளின் இணைப்பு நடக்கும் என்று ஓ.பி.எஸ்ஆதரவாளரும் முன்னாள் அமைச்சருமான பொன்னையன் தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.கவின் இரு அணிகள் இடையே நேற்று முன்தினம் நள்ளிரவு (செவ்வாய்க்கிழமை) இரகசிய பேச்சுவார்த்தை நடைபெற்றதாக கூறப்பட்ட நிலையில், நேற்று செய்தியாளர்களை சந்தித்த பொன்னையன், தினகரன் கைது செய்யப்பட்டிருப்பது நியாயமான நடவடிக்கை. ஜெயலலிதாவுக்கு நீண்ட காலமாக என்ன என்ன சிகிச்சைகள் வழங்கப்பட்டன. அப்பலோ மருத்துவமனையில் நடந்தது என்ன? போன்ற தகவல்களை தெரிந்துகொள் ளும் உரிமை அ.தி.மு.க. தொண்டர்களுக்கு உள்ளது.

ஜெயலலிதாவின் மரணத்தில் உள்ள மர்மத்தை கண்டுபிடிப்பதையே முதல் இலக்காக கொண்டு அ.தி.மு.கவின் இரு அணிகளின்இணைப்பு நடக்கும். இதற்காகத் தான் இரு அணிகளும் இணையும் முயற்சிக்கு தங்கள் அணி ஒப்புதல் தெரிவித்தது என்று தெரிவித்தார். (இ-3)

# வாக்குறுதிகளை நிறைவேற்றாவிட்டால் மீண்டும் போராட்டம் தொடரும்

## தமிழக விவசாயிகள் எச்சரிக்கை

எதிர்வரும் மே 25 ஆம் திகதிக்குள் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாவிடில் மீண்டும் நூற்றுக்கணக்கான விவசாயிகளுடன் டில்லியில் போராடுவோம் என்று அய்யாக்கண்ணு தெரிவித்தார்.

டில்லியில் கடந்த 41 நாட்களாக போராட்டத்தில் ஈடுபட்ட தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் அய்யாக்கண்ணு மற்றும் விவசாயிகள் நேற்று திருச்சி வந்தனர். அவர்களை பல்வேறு தரப்பினர் உற்சாகமாக வரவேற்றனர். பின்னர் அய்யாக்கண்ணு நிருபர்களிடம் தெரிவிக்கையில்,

பிரதமர் மோடி ஆட்சி பொறுப்பேற்றதும் விவசாயிகள் நலன் பாதுகாக்கப்படும். விளைபொருட்களுக்கு 2 மடங்கு விலை பெற்று தருவேன் என்றார். இது வரையில் எந்த முயற்சியும் எடுக்கவில்லை. விவசாயிகளின் வாழ்வாதாரத்துக்காக தொடர்ந்து போராடினோம்.


ஜனாதிபதி, தமிழக முதல்வர், மத்திய அமைச்சர்கள் மற்றும் அனைத்து கட்சியினரும் ஆதரவளித்தனர். என்ன நடந்தாலும் தமிழகத்தை திரும்பி பார்க்க மாட்டோம் என்பது மத்திய அரசின் நிலையாக உள்ளது.

எங்களின் கோரிக்கைகளான 60 வயதான விவசாயிகளுக்கு பட்டா நிலம் இருந்தால் பென்சன், விவசாய கடன்களை [illegible] என்பது உள்ளிட்டவற்றை மே மாதம் 25ஆம் திகதிக்குள் நிறைவேற்றுவதாக மத்திய அமைச்சர்கள், தமிழக முதல்வர் ஆகியோர் உறுதியளித்தனர். இதனால் போராட்டம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள் ளது.

கோரிக்கை நிறைவேற்றப்படாவிடில் மீண்டும் நூற்றுக்கணக்கான விவசாயிகளுடன் டில்லியில் போராடுவோம். தமிழகத்தில் விவசாயிகளுக்கு ஆதரவாக நடந்த 'பந்த்' முழு வெற்றி பெற்றுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடகொரியாவின் சவாலை எதிர்கொள்ள அமெரிக்காவால் ஏவுகணை எதிர்ப்பு கவண்



(வோஷிங்டன்)

ஜப்பானில் உள்ள அமெரிக்க இராணுவ தளத்தை தாக்கி அழிப்பதற்காக வட கொரியா ஒத்திகை பார்த்துள்ள நிலையில் வட கொரியாவின் சவாலை எதிர்கொள்ளும் வகையில் ஏவுகணை தடுப்பு கவண் அமைக்கும் பணியில் அமெரிக்க ராணுவம் தீவிரம் காட்டி வருகிறது.

கிழக்காசிய கண்டத்தின் கொரிய தீபகற்பத்தில் அமைந்துள்ள முக்கிய நாடான வடகொரியா, கடுமையான பொருளாதார நெருக்கடியில் தத்தளித்து வருகிறது. இருப்பினும், கடந்த 2006ஆம் ஆண்டு முதல் உலக நாடுகளின் எதிர்ப்பினை பொருட்படுத்தாமலும், சர்வதேச ஒப்பந்தங்களை புறக்கணித்தும் அணு ஆயுத சோதனைகளை வடகொரியா தொடர்ந்து நடத்தி வருகிறது.

இதன்காரணமாக, வட கொரியா மீது ஐ.நா. பாதுகாப்பு சபையிலும், அமெரிக்காவும் கடந்த 2006ஆம் ஆண்டில் இருந்து மிகக் கடுமையான பொருளாதார தடைகளை விதித்தன. எனினும், அந்த நாடு, தற்காப்பு என்ற பெயரில் தொடர்ந்து ஏவுகணை சோதனை களை விடாமல் நடத்தி வருகிறது.

தென்கொரியாவும், அமெரிக்காவும் இணைந்து தங்கள் நாட்டின்மீது போர் தொடுக்க ஆயத்தமாகி வருவதாக குற்றம்சாட்டி வரும் வடகொரியா, அமெரிக்காவை அழித்து விடுவோம் என்று மிரட்டியுள்ளது.

முன்னதாக, வடகொரியாவின் அணு ஆயுத ஏவுகணை அச்சுறுத்தலை எதிர்கொள்ள, அமெரிக்காவும் தென்கொரியாவும் இணைந்து (Terminal High Altitude Area Defence (THAAD) system) என்ற ஏவுகணை எதிர்ப்பு கவண் ஒன்றை அமைக்க கடந்த ஆண்டு திட்டமிடப்பட்டது.

இதற்கிடையில், ஜப்பானில் உள்ள அமெரிக்க இராணுவ தளத்தை தாக்கும் நோக்கத்தில் அதற்கான ஒத்திகையாக நேற்று முன்தினம் ஏவுகணை பரிசோதனை நடத்தியதாக வட கொரியா தெரிவித்துள்ளது. இந்த நோக்கத்தில் அடுத்தடுத்து பரிசோதிக்கப்பட்ட நான்கு ஏவுகணைகளில் மூன்று ஜப்பானுக்கு சொந்தமான கடல் பகுதியில் விழுந்தது.

இதுதொடர்பாக, வட கொரியா அரசின் கட்டுப்பாட்டில் உள்ள செய்தி நிறுவனம் வெளியிட்ட செய்திக்குறிப்பில், 'ஜனாதிபதி கிம் ஜாங் உன்-னின் கண்களுக்கு விருந்தளிக்கும் வகையில் நமது ஏவுகணை பரிசோதனை வெற்றிகரமாக அமைந்திருந்தது. இதையடுத்து, ஜப்பானில் உள்ள அமெரிக்க இராணுவ தளத்தை தாக்கும் அடுத்தகட்ட பணிகளை தொடருமாறு ஜனாதிபதி உத்தர விட்டுள்ளார்' என குறிப்பிடப் பட்டது.

இந்நிலையில், வடகொரியாவின் அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் வகையில் (THAAD system) என்ற அதிநவீன ஏவுகணை எதிர்ப்பு கவண் நிறுவும் பணிக்கு முக்கியத்துவம் அளிக்க அமெரிக்கா தீர்மானித்தது.

இதுதொடர்பாக, பசுபிக் பெருங்கடல் நாடுகளுக்கான அமெரிக்க இராணுவ தளபதி ஹாரி ஹாரிஸ் வெளியிட்ட அறிக்கையில், 'அமெரிக்காவை சீண்டிப் பார்த்து, சண்டைக்கு அழைக்கும் வடகொரியாவின் எரிச்சலூட்டும் செயல்கள் எல்லாம், இந்த எதிர்ப்பு கவண் அமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்த்தும் வகையில் அமைந்துள்ளது' என குறிப்பிட்டிருந்தார்.

அமெரிக்காவுக்கும் வட கொரியாவுக்கும் இடையே மோதல் போக்கு அதிகரித்து வரும் நிலையில் தென் கொரியாவில் அதிநவீன ஏவுகணை எதிர்ப்பு கவண் நிறுவும் பணிகளை அமெரிக்க இராணுவ அதிகாரிகள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

கொரிய தீபகற்ப பகுதியில் அமெரிக்காவின் இந்த தலையீட்டுக்கு சீனா கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது. இந்த ஏவுகணை தடுப்பு கவணால் தங்கள் நாட்டு ஏவுகணைகளை பரிசோதிக்கும் முயற்சிகளுக்கு பாதிப்பு ஏற்படலாம் என கருதிவரும் சீன அரசு முன்னர் தனது கருத்தை அமெரிக்காவிடம் பதிவு செய்திருந்தது.

ஆனால், இதைப்பற்றி கவலைப்படாத அமெரிக்கா தனக்கு சவால் விடும் வட கொரியாவுக்கு சரியான பாடம் கற்பிக்கும் வகையில் வட கொரியா அருகே உள்ள தனது நட்பு நாடான தென் கொரியாவுக்குட்பட்ட பகுதியில் ஏவுகணை எதிர்ப்பு கவண் அமைப்பதில் தீவிரம் காட்டி வருகிறது.

இந்த கவணுக்கான பாகங்களை அமெரிக்க இராணுவ அதிகாரிகள் நேற்று முன்தினம் தென் கொரியாவுக்கு அனுப்பி வைத்தனர்.

அமெரிக்க தலைநகரான வோஷிங்டனில் இருந்து இராணுவ சரக்கு விமானம் மூலம் அனுப்பி வைக்கப்பட்ட இந்த ஏவுகணை எதிர்ப்பு



கவணுக்கான பாகங்கள் தென் கொரியா தலைநகர் சியோலில் இருந்து 64 கிலோ மீற்றர் தூரத்தில் இருக்கும் ஓசான் நகரில் உள்ள அமெரிக்க இராணுவ தளத்தை வந்தடைந்தது.

இன்னும் ஒருசில நாட்களில் இந்த கவண் நிர்மாணிக்கப்படும். அதன் பின்னர் வட கொரியாவின் ஏவுகணை சோதனைக்கு தனது கிடுக்கிப் பிடி நடவடிக்கையின் மூலம் 'செக்' வைக்க அமெரிக்கா தீர்மானித்துள்ளது. குறிப்பிடத்தக்கது. (இ-3)

# கொரிய தீபகற்பத்தில் போர் பதற்றம்

## அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல் தென்கொரியாவில்; வடகொரியா இராணுவப் பயிற்சியால் பரபரப்பு

(சியோல்)

அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பலின் தென் கொரியா வருகையாலும் வட கொரியா இராணுவ பயிற்சியாலும் கொரிய தீபகற்பத்தில் போர்ப் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

ஐ.நாவின் உத்தரவு மற்றும் பொருளாதார தடையை எதிர்த்து வடகொரியா தொடர்ந்து அணு ஆயுத சோதனை மற்றும் ஏவுகணை சோதனை நடத்தி வருகிறது. இது அமெரிக்காவுக்கு கடும் அதிருப்தியையும் எரிச்சலையும் ஏற்படுத்தியுள்ளது.

எனவே அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வட கொரியா மீது தீவிர நடவடிக்கை எடுக்க ஆயத்தமாகி வருகிறார். தற்போது தென் கொரியாவுடன் இணைந்து அமெரிக்க இராணுவம் கூட்டாக பயிற்சி மேற்கொள்கிறது.



அதற்காக 'யு.எஸ்.எஸ். மிசிகன்' என்ற ஏவுகணை நீர்மூழ்கி கப்பலை தென் கொரியாவுக்கு அனுப்பியுள்ளது. தற்போது அது அங்குள்ள பூசன் துறைமுகத்தில் நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டுள்ளது.

இவை தவிர அமெரிக்காவின் விமானம் தாங்கி கப்பலும் தென கொரியாவுக்கு வந்து கொண்டிருக்கிறது. அக்கப்பல் அடுத்த வாரம் நீர்மூழ்கி கப்பலுடன் இணைந்து பயிற்சியில் ஈடுபடுகிறது.

இதற்கிடையே வட கொரியாவின் 85ஆவது ராணுவ தினம் நேற்று முன்தினம் கடை ப்பிடிக்கப்பட்டது. அப்போது அந்த நாடு 6ஆவது அணு ஆயுத சோதனை அல்லது நீண்ட தூரம் சென்று தாக்கும் ஏவுகணை சோதனை நடத்தும் என எதிர்பார்க்கப் பட்டது.

ஆனால் காலையில் அது போன்று எதுவும் நடைபெற வில்லை. ஆனால் மாலையில் ஆயுதங்களை வெடிக்க செய்து வட கொரியா தனது இராணுவ தினத்தை கோலாகலமாக கொண்டாடியது. இது அமெரிக்கா மற்றும் தென் கொரியாவுக்கு சவால் விடுவது போலவும், ஆயுத கண்காட்சி நடத்தியது போன்றும் இருந்தது.

இதற்கிடையே வட கொரியாவின் மிரட்டலை சமாளிக்க அமெரிக்கா, ஜப்பான் -தென் கொரியா ஆகிய நாடுகள் டோக்கியோவில் கூடி ஆலோசனை நடத்த உள்ளன. இத்தகைய சூழ்நிலையில் கொரிய தீபகற்பத்தில் போர்ப் பதற்றம் நிலவுகிறது. (இ-3)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












இலங்கைத் தமிழரசுக்கட்சியின் நிறுவுநரும், தமிழ் மக்கள் உரிமைகளை பெற்றுக் கொள்ள அறவழிப் போராட்டத்தை முன்னெடுத்த தலைவருமான சாமுவேல் ஜேம்ஸ் செல்வநாயகத்தின் 40 ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்றைய தினம் யாழ்.பொது நூலகத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள தந்தை செல்வா நினைவுச் சதுக்கத்தில் காலை 9.30 மணியளவில் நடைபெற்றது.

முன்னதாக அரசியல் தலைவர்கள், தந்தை செல்வாவின் புதல்வரான சந்திரகாசன், பொதுமக்கள் ஆகியோர் உருவச் சிலைக்கு மாலை அணிவித்தும், சமாதிக்கு மலர் அஞ்சலியும் செலுத்தியிருந்தனர். இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான கலாநிதி ஜயம்பதி விக்ரமரட்ன நினைவுப் பேருரையை ஆற்றியிருந்தார்.

(படங்கள்:- உ.சாளின்)

# இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும்

# திருமுறை மாநாடு

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் வருடந்தோறும் நடத்தும் இந்துசமயம், தத்துவம், வரலாறு மற்றும் திருமுறை சார்ந்த கருப் பொருட்களில் ஆய்வு மாநாடொன்றை நடத்தி வருகின்றது. அதன் தொடர்ச்சியாக இந்த ஆண்டும் இம்மாதம் 28, 29, 30 ஆகிய திகதிகளில் பன்னிரு திருமுறைகளில், தொண்டர் தம் பெருமை கூறும் பன்னிரெண்டாம் திருமுறையாகிய பெரிய புராணத்தை அடிப்படையாகக் கொண்டு கொழும்பு தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபம் ,புதிய கதிரேசன் மண்டபம் ஆகியவற்றில் நடைபெறவுள்ளது.

## தொடக்க வைபவம்

திருமுறை மாநாட்டின் தொடக்கவைபவம் 28.04.2017 ஆம் திகதி கொழும்பு தமிழ் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் காாலை 8.30-1.00 மணி வரை நடைபெறவுள்ளது. பேராசிரியர் சி.பத்மநாதன் தலைமையில் நடைபெறும் தொடக்க வைபவத்தில் பிரதம விருந்தினராக மீள்குடியேற்றம் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சின் செயலாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் கலந்து கொள்ளவுள்ளார். தொடக்க வைபவத்தின் வரவேற்புரையை இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் அ. உமாமகேஸ்வரன், அருளுரையை பாணந்துறை கந்தசாமி ஆலயத்தின் பிரதமகுரு பிரம்மஸ்ரீ லக்சுமிகாந்த ஜெகதீஸ்வரக் குருக்களும் ஆய்வரங்கின் தொடக்கவுரையை மதுரை காமராஜன் பல்கலைக்கழக முன்னை நாள் தலைவர் பேராசிரியர் ஜி.சேதுராமனும் வழங்கவுள்ளனர்.

## பொது அரங்கம் முதலாம் நாள்

மாநாட்டை முன்னிட்டு பொது மக்களுக்கான பொதுஅரங்கம் இரண்டுநாட்கள்நடைபெறவுள்ளன. முதலாம் நாள் பொது அரங்கம் 28.04.2017 புதிய கதிரேசன் மண்டபத்தில் பி.ப 4.30 தொடக்கம் 8.30 வரை நடைபெறவுள்ளது.

இராமகிருஷ்ண சாரதா மிஷன் செயலாளர் ப்ரவ்ராஜிகா ஆத்ம தேவ ப்ரணாமாதாஜி முன்னிலையில் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்திற்கு பிரதம விருந்தினராக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு புனர்வாழ்வளிப்பு மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் தே.ம.சுவாமிநாதன், பிரதம விருந்தினராகவும் செயலாளர் டபிள்யூ.எம்.பி.ஜி.விக்கிரமசிங்க சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவ்வைபவத்தில் கலைநிகழ்ச்சிகள் திரு அ.அமிர்லோஜன், திரு அ.அமிர்தசிந்துஜன் ஆகியோரின் பண்ணிசையும், திருமதி பவானி குகப்பிரியா அவர்களின் நெறியாள்கையில் தியாகராஜா கலைக்கோயில் வழங்கும் நந்தனார் சரித்திரம் எனும் நாட்டிய நாடகமும் நடைபெறவுள்ளன.

## பரிசில்களும் சான்றிதழ்களும் வழ[illegible]

திணைக்களத்தின் ஆய்வரங்கினையொட்டி பல்கலைக்கழக, பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் முதலாம் நாள் பொது அரங்கில் வழங்கப்படவுள்ளன.

## இரண்டாம் நாள்

இரண்டாம் நாள் பொது அரங்கம் 29.04.2017 சங்கரப்பிள்ளை மண்டபத்தில் பிப 4.30 தொடக்கம் 7.30 வரை நடைபெறவுள்ளது. கலாபூஷணம் அருள்மொழியரசி திருமதி வசந்தா வைத்தியநாதன் தலைமையில் நடைபெறும் அரங்கில் பிரதமர் விருந்தினராக மேல் மாகாண ஆளுநர் கே.சி.லோகேஸ்வரன்,சிறப்பு விருந்தினராக அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் கந்தையா நீலகண்டன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவ்வரங்கில் கம்பவாரிதி இ.ஜெயராஜ் தலைமையில் பெரிய புராணம் மும்முனை நோக்கில் எனும் உரையரங்கம் நடைபெறவுள்ளது.

அறவியல் நோக்கில் பெரிய புராணம் வைத்திய கலாநிதி இ.லம்போதரன் (கனடா சைவ சித்தாந்த பீடம்), மருத்துவ நோக்கில் பெரியபுராணம் வைத் திய கலாநிதி எஸ். பத்மினி கபாலி மூர்த்தி (இணைச் செயலாளர் தவத்திரு ஆறுமுக நாவலர் சைவ பிரகாச வித்தியாசாலை, அறக் கட்டளை நிலையம், சிதம்பரம்), அரசியல் நோக்கில் பெரிய புராணம் பேராசிரியர் அரங்க ராமலிங்கம் (தமிழ்த்துறை, சென்னை பல்கலைக்கழகம்)

## தமிழக அறிஞர்கள்

திணைக்களத்தின் அழைப்பின் பேரில் சென்னைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் அரங்க ராமலிங்கம், மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தை சார்ந்த பேராசிரியர் ஜ. சேதுராமன், தமிழ்நாடு தொல்பொருளாய்வாளர் வே.வேதாசலம், கரந்தை ஜெகாந்தம் துரை கண்ணுப் பிள்ளை அறக்கட்டளை அங்கத்தவர் வைத்திய கலாநிதி ஜெ.கபாலி மூர்த்தி, வைத்தியக் கலாநிதி எஸ். பத்மினி கபாலி மூர்த்தி (இணைச்செயலாளர் தவத்திரு ஆறுமுகநாவலர் சைவ பிரகாச வித்தியாசாலை அறக் கட்டளை நிலையம், சிதம்பரம்) ஆகியோர் வருகை தந்து மூன்று தினங்களும் மாநாட்டைச் சிறப் பிக்கவுள்ளனர்.

## திணைக்கள நூல்களின் வெளியீடு

இத்தகைய ஆய்வரங்கு நிகழ்ச்சிகளின் போது திணைக்களம் சிறந்த பல நூல்களை அச்சிட்டு வெளியிடுகின்றது.

அந்த வரிசையில்கடந்த ஆண்டு நடைபெற்ற பன்முக நோக்கில் பதினொராம் திருமுறை எனும் ஆய்வரங்கில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பு நூலும் வெளியிடப்படவுள்ளது. இந்த ஆண்டு நடைபெறும் திருமுறை மாநாட்டை முன்னிட்டு திருத்தொண்டர் புராண திருநெறி எனும் சிறப்புமலரும் சைமன் காசிச்செட்டியின் தமிழ்ப் புலவர் வரிசையும் தமிழ் நூல் வரிசையும் எனும் நூல்கள் வெளியிடப்படவுள்ளன. இந் நூல்கள் பற்றிய அறிமுகவுரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் பேராசிரியர் ஏ.என்.கிருஷ்ணவேணியும்கிழக்குப்பல்கலைக்கழக மொழிகள் துறைத் தலைவர் திருமதி ரூபிவலன்ரீனா பிரான்சிஸும் நிகழ்த்தவுள்ளனர்.

## ஆய்வரங்கு

இம்மாதம் 28, 29, 30 ஆகிய மூன்று தினங்களிலும் காலை 8.30 மணி தொடக்கம் நடைபெறவுள்ள ஆய்வரங்கில் தொண்டர் புகழ் பாடும் பெரியபுராணம் தொடர்பான ஆய்வுக்கட்டுரைகள் சமயமும் தத்துவமும், கலையும் பண்பாடும், சமூகமும் வரலாறும், மொழியும் இலக்கியமும் எனும் தலைப்பிலான 46 ஆய்வுக்கட்டுரைகள் இலங்கைப் பல்கலைக்கழக அறிஞர்களாலும், இந்திய பல்கலைக்கழக அறிஞர்களாலும்சமர்ப்பிக்கப்படவுள்ளன.

இத்திருமுறை மாநாட்டில் ஆலய அறங்காவலர்கள்,ஆன்மீகப் பெரியோர்கள்,இந்துசமய அமைப்புக்களின் பிரதிநிதிகள், அறநெறிப்பாடசாலை ஆசிரியர்கள், தமிழ்ப் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் இந்து இணைப்புக்களைச் சார்ந்தோர் அனைவரும் பங்குகொள்ள வேண்டும் என திணைக்களம் வேண்டிக் கொள்கின்றது.

**அ.உமாமகேஸ்வரன்**
பணிப்பாளர்
இந்துசமய கலாசார
அலுவல்கள்
திணைக்களம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகில் பாராளுமன்ற ஜனநாயகத்தை பலப்படுத்துவதில் மைத்திரி முன்மாதிரி

## பாராளுமன்ற ஒன்றியத் தலைவர் புகழாரம்



(கொழும்பு)

உலகில் பாராளுமன்ற ஜனநாயகத்தைப் பலப்படுத்துவதற்காக உழைக்கின்ற அனைவருக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒரு முன்மாதிரியாவார் என பாராளுமன்றங்களுக்கிடையிலான ஒன்றியத்தின் தலைவர் சாபிர் சௌத்ரி (Saber Chowdhury) தெரிவித்தார். இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்களை பாராளுமன்றத்திற்கு வழங்குவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கொண்ட நடவடிக்கை ஜனநாயகத்தை பலப்படுத்துவதற்கான ஒரு முக்கிய படிமுறையாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்தபோதே பாராளுமன்றங்களுக்கிடையிலான ஒன்றியத்தின் தலைவர் சாபிர் சௌத்ரி இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் இந்த செயற்பாடுகளின் மூலம் இலங்கை பாராளுமன்ற ஜனநாயகம் பலம்பெற்றுள்ளதாக அவர் தெரிவித்தார்.

உலகில் சில நாடுகளில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிகள் பாராளுமன்றத்தை புறமொதுக்கி வருவதாகவும், இன்னும் சில நாடுகளில் மற்றும் சிலர் தமது அதிகாரத்தையும் பதவிக் காலத்தையும் சர்வஜன வாக்கெடுப்பின் ஊடாக நீடித்துக் கொள்வதாகவும் சுட்டிக் காட்டிய சாபிர் சௌத்ரி, இன்று இலங்கையை பாராளுமன்ற ஜனநாயகத்திற்கு சரியான வழியை காட்டும் கலங்கரை விளக்கமாக கொள்ள முடியும் என்றும் தெரிவித்தார்.

இந்த சந்திப்பில் கருத்து தெரிவித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பாராளுமன்றத்தில் இளைஞர்கள் மற்றும் பெண்களின் பங்கு பற்றுதலை அதிகரிப்பதற்கு பாராளுமன்றங்களுக்கு இடையிலான ஒன்றியம்மேற்கொண்டுவரும் முயற்சி குறித்து மகிழ்ச்சி வெளியிட்டார்.

இலங்கைப் பாராளுமன்றத்தில் பெண்களின் பங்கு பற்றுதலை அதிகரிப்பதற்கு தேர்தல் சட்டதிருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

கற்ற இளைஞர்கள் அதிகளவில் அரசாங்க மற்றும் பாராளுமன்றத்தில் பொறுப்புக்களை ஏற்க வேண்டுமென தாம் விரும்புவதாக ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (இ-3)

# பெற்றோலிய கூட்டுத்தாபன ஊழியர்களின் அரச எதிர்ப்புப் போராட்டம் நியாயமானது

## ஜே.வி.பி.ஆதரவு

அரச வளங்களை விற்பனை செய்வதையே தற்போதைய அரசாங்கம் தனது பொருளாதாரக் கொள்கையாக கொண்டுள்ளது.

எனவே அந்தத் திட்டத்தினை தோற்கடிப்பதற்கான முன்னெடுப்பாக அமைந்துள்ள பெற்றோலியக் கூட்டுதாபன ஊழியர்களின் போராட்டம் நியாயமானது என மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

அதேநேரம் ஊழியர்களின் கோரிக்கைகளை நிவர்த்தி செய்து இவர்களின் வேலை நிறுத்தத்தினால் மக்கள் எதிர்கொள்ளும் அசௌகரியங்களைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அக்கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணி நேற்று முன்தினம் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தொழிலாளர்கள் மேற்கொண்ட வேலை நிறுத்தத்திற்கு ஆதரவு தெரிவித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

மேற்படி போராட்டத்திற்கு மக்கள் விடுதலை முன்னணி ஆதரவு வழங்குவதோடு அவர்களின் கோரிக்கைக்கு நியாயமான முடிவுகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்றும் அழுத்தம் கொடுக்கும்.

தற்போதைய அரசாங்கம் நாட்டின் பெறுமதிமிக்க சொத்துக்களை விற்பனை செய்வதையே தமது பொருளாதாரக் கொள்கையாக கொண்டுள்ளது.

இதனால் நாட்டினுள் வர வேண்டிய மிகப்பெரும் அளவிலான இலாபமும் கைநழுவிச் செல்கின்றது. அதனால் தற்போதைய அரசாங்கம் நாட்டு வளங்களை விற்பனை செய்யும் திட்டங்களை தோற்கடிக்க வேண்டும். அதனால் தான் கூட்டுத்தாபனத்தின் தொழிலாளர்களின் போராட்டம் நியாயமானது என்கின்றோம்.

அதனால் அவர்களின் கோரிக்கைகளை நிவர்த்தி செய்து வேலை நிறுத்தத்தினால் பொதுமக்கள் எதிர்கொள்ளும் அசௌகரியங்களையும் குறைக்க அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் புதிய தொகுதி,மாவட்ட அமைப்பாளர்கள் நியமனம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் புதிய தொகுதி மற்றும் மாவட்ட அமைப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ள 17 பேர் நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடமிருந்து தமது நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொண்டனர்.

**தொகுதி அமைப்பாளர்கள்**

01.பாத்ததும்பர தொகுதி - டபிள்யூ.எம்.சமரஜீவ வெலெகெதர

02.தம்புள்ள தொகுதி - டபிள்யூ.எம்.யசமான /யு.ஆர். தயாநந்தசிறி

03. மஹியங்கனைத் தொகுதி - கே.பி. குணவர்தன

**மாவட்ட அமைப்பாளர்கள்**

கண்டி மாவட்டம்

01. நிசங்க ஹேரத்
02. அசங்க தொடம்வல
03. அசேல ஏக்கநாயக்க
04. லின்டன் விஜேசிங்க

மாத்தளை மாவட்டம்

01. குசும்சிறி ஆரியரத்ன
02. சுசில் பிரேமரத்ன

இரத்தினபுரி மாவட்டம்

01. சலித கருணாரத்ன
02. சாந்த ரத்நாயக்க
03. நிக்சன் சூரியகுமார

யாழ்ப்பாண மாவட்டம்

01.எஸ். அகில்தாஸ்
02.பீ கோபால்கிருஷ்ணன்
03.கந்தசாமி கருணாகரன்

முல்லைத்தீவு மாவட்டம்

01.என். அருணதிலகன்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் அமைச்சர் மகிந்த அமரவீர, அமைச்சர்களான நிமால் சிறிபால டி சில்வா, எஸ்.பி.திஸாநாயக்க.

இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன, பிரதி அமைச்சர் அநுராத ஜயரத்ன, வடமாகாண ஆளுநர் ரெஜி னோல்ட் கூரே ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-3)

# இன்று ஒரு தகவல்

## கவனம் ஒலிபெருக்கிகள்

மனிதர்களில் நாம் எத்தனை நிறங்கள்! சிலர் எப்போது பார்த்தாலும் ஊர்க்கதையே பேசிக் கொண்டிருப்பார்கள். யார் வீட்டில் என்ன நடக்கின்றது என்று வம்பளப்பார்கள். பெரும்பாலும் புகார் தொனியிலும் தவறாகவுமே விமர்சிப்பார்கள். ஆங்கிலத்தில் இவர்கள் சாட்டர் பாக்ஸ் என்று அழைப்பார்கள்.

இப்படிப்பட்ட ஒலிபெருக்கிகள் உங்கள் வட்டத்திலும் நிச்சயம் உண்டு. இவர்களிடம் நாம் கவனமாக இருந்தால் மட்டும் போதாது. நம்மைப் பற்றிய பிரசாரங்களை ஆரம்பித்துவிடாதபடியும் இவர்கள் வாயை அடைப்பது மிக முக்கியம்!

இவர்கள் வெறும் வெற்று வேட்டுகள்; ஒன்றுக்கும் உதவாதவர்கள். இவர்கள் பேச்சில் பொய்க் கலப்பு அதிகம் என்றெல்லாம் அனைவருக்கும் தெரியும். ஆனாலும் இவர்கள் சொல்வதை உண்மை என நம்புபவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். எனவேதான் இவர்கள் வாயை நம்மைப் பொறுத்தவரையிலாவது அடைப்பது நம்முடைய முக்கிய வேலையாக இருக்கிறது.

அதிலும் குறிப்பாக நமக்கு மிக வேண்டிய உறவினர்களுக்கோ நாம் பணிபுரியும் இடத்திலோ அல்லது தொழில் புரியும் வட்டத்திலோ மிக உயரத்தில் உள்ளவர்களுக்கு வேண்டியவர்களாக இவர்கள் அமைந்துவிட்டால் கெட்டது காரியம்! நம்மைப் பற்றி இவர்களிடத்தில் ஏகமாகத் தவறாகச் சொல்லி நல்லுறவைக் கெடுத்து ஒருவழி பண்ணிவிடுவார்கள்!

இன்றைய வாழ்க்கையை ஒட்டிய நடைமுறையாக இவர்களை அணுக வேண்டியது அவசியம். அனுசரித்துப் போகும் வழியும் ஒருவகைப் போர் முறைதான். ஆனால் மௌனப் போர், சாமர்த்தியப் போர்.

உதாரணத்திற்கு ஒரு வீட்டுப் பிரச்சினையை எடுத்துக் கொள்வோமா?

ஒரு மருமகள் தன் மாமியாருக்கு மிக வேண்டிய சாட்டர் பாக்ஸ்சைப் பிடிக்க வேண்டும். இந்த ஆள் சமயங்களில் தான் மருமகளாக வருவதற்கு முன்பிருந்தே அதே வீட்டில் பணிபுரிந்து வரும் மேல் வேலைக்காரியாகக் கூட இருக்கலாம். அல்லது எதிர்த்த வீட்டு வயதானவராகக் கூட இருக்கலாம்.

ஒரு கெட்டிக்காரப் பெண் இவர்களை மிகச் சீக்கிரம் வழிக்குக் கொண்டு வந்து தன்னைப் பற்றி மிக நல்ல அபிப்பிராயம் வரும் படி இவர்களைக் கொண்டே சொல்ல வைத்து விடுவாள்.

சரி அத்தகைய ஒலிபெருக்கிகளை வழிக்குக் கொண்டுவருவது எப்படி?

முதலில் இவர்களுடன் விரோதப் போக்கைக் கையாள்வதை விடுத்து அனுசரணையாக நடந்து கொள்ள வேண்டும். அடுத்து பாராட்டி வழிக்குக் கொண்டு வர வேண்டுமு; பின்பு சில உதவிகளைச் செய்தால் இவர்கள் தலை மீதே ஏறி உட்கார்ந்து கொண்டுவிட முடியும்.

நமக்கு எதிராகப் பிரசாரம் செய்யக் கூடியவர்களைக் கொண்டே நம்மைப் பற்றிப் பாராட்டுரைகளை வழங்கச் செய்வது என்பது இருக்கிறதே, இதுதான் நமக்குக் கிடைக்கப் போகும். தலையாய வெற்றி.

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாக்.பாதுகாப்பு பல்கலை.அதிதிகள் குழு பாதுகாப்புச் செயலாளருடன் சந்திப்பு



(கொழும்பு)

பாகிஸ்தான் பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் ஷஹிட் சுஹைல் ராவ் (Shahid Sohail Rao) தலைமையிலான அதிதிகள் குழு இலங்கை பாதுகாப்பு செயலாளர் பொறியியலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சியை சந்தித்தனர்.

பாதுகாப்பு அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வைபவம் ஒன்றின் போது இந்த சந்திப்பு இடம்பெற்றது.

குறித்த சந்திப்பின் போது இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டதுடன் இந்த சந்திப்பினை நினைவுகூரும் வகையில் நினைவுச்சின்னங்களும் பரிமாறப்பட்டன.

இந்நிகழ்வில் பாகிஸ்தான் பாதுகாப்பு ஆலோசகர் கேணல் முகம்மது ராஜில் இர்ஷாட் கான் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர். (இ-7)




# திறைசேரி முறிகள் குறித்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் கால எல்லை நீடிப்பு

திறைசேரி முறிகள் வழங்குவது தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு, இது குறித்த கடிதம் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக, அதன் செயலாளர் சுமதிபால உடுகமசூரிய தெரிவித்தார். இதற்கமைய, இன்று 27ஆம் திகதியோடு நிறைவடையவிருந்த திறைசேரி முறிகள் வழங்குவது தொடர்பாக பரீட்சித்துப் பார்க்கும் மற்றும் புலனாய்வு செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் பதவிக்காலம், எதிர்வரும் ஜூலை 27ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# ஐரோ. நாடுகளுக்கு அனுப்பப்பட்ட ராணுவப் புலனாய்வு அதிகாரிகள் ஒப்புக்கொண்டார் கோத்தபாய



சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க படுகொலையுடன்பிரதான சந்தேகநபருக்கு. இராஜதந்திரப் பதவியை தாம் வழங்கியதாக வெளியான செய்திகளை முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ நிராகரித்துள்ளார்.

இது பொய்யான செய்தி என்று டுவிட்டரில் பதிவு ஒன்றை இட்டுள்ள கோத்தபாய ராஜபக்ஷ, மக்களை தவறாக வழிநடத்தும் செய்தி என்றும் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் இந்தச் செய்தியை மறுக்கும் வகையில் சஞ்சய அமரதுங்க என்பவர் எழுதிய வலைப்பதிவு ஒன்றையும் அவர் இணைத்துள்ளார்.

இந்தப் பதிவில் வெளிநாடுகளில் மேற்கொள்ளப்பட்ட இரகசியப் புலனாய்வு நடவடிக்கைகள் தொடர்பான விபரங்கள் இடம்பெற்றுள்ளன. அந்தப் பதிவில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

'லசந்த விக்கிரமதுங்க படுகொலையுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபராக கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள மேஜர் பண்டார புலத்வத்த, தாய்லாந்தில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் நியமிக்கப்பட்டதாக வெளியான தகவல் தவறானது. அவருக்கு ஜேர்மனியில் தான் பதவி வழங்கப்பட்டது.

அது இராஜதந்திரப் பதவி அல்ல. இரகசிய புலனாய்வு அதிகாரியாகவே அவர் ஜேர்மனியில் பணியாற்ற நியமிக்கப்பட்டிருந்தார்.

விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் உள்ள நாடுகளில் இருக்கும் இலங்கை தூதரகங்களில், இராணுவப் புலனாய்வு அதிகாரிகளை நியமிப்பது வழக்கமான நடைமுறை தான். 2005 ஆம் ஆண்டில் இருந்து, ஐரோப்பிய நாடுகளில் புலனாய்வு அதிகாரிகள் நியமிக்கப்பட்டு விடுதலைப்புலிகளின் செயற்பாடுகள் கண்காணிக்கப்பட்டன.

தேசிய புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த உதவி பொலிஸ் கண்காணிப்பாளர் லதீப்கே, இத்தகைய பதவிக்கு நியமிக்கப்பட்ட முதலாவது அதிகாரியாவார். அதற்குப் பின்னர் இராணுவம் மற்றும் பொலிஸ்துறையைச் சேர்ந்த 25 இற்கும் மேற்பட்ட புலனாய்வு அதிகாரிகள் இத்தகைய நோக்கங்களுக்காக வெளிநாடுகளில் பணியாற்ற அனுப்பப்பட்டனர்.

இப்போதும்கூட இது நடைமுறையில் உள்ளது. தூதரகங்களில் இளநிலைப் பதவிகளில் இருந்து இவர்கள் இரகசியப் புலனாய்வுப் பணிகளை மேற்கொள்வர். இவர்கள் பாதுகாப்பு ஆலோசகர்களாக அனுப்பப்படவில்லை.

2010ஆம் ஆண்டில் மேஜர் பண்டார புலத்வத்த இராணுவப் புலனாய்வுப் பிரிவில் செயற்பாட்டு நிலையில் இருந்தவர் என்பதால், அவருக்கு ஜேர்மனியில் நியமனம் வழங்கப்பட்டிருந்தால் அது இராணுவத்தின் முடிவாகவே இருக்கும்.

குறிப்பிட்ட நாடு ஒன்றுக்கு புலனாய்வு அதிகாரி ஒருவரை இராணுவம் அனுப்ப வேண்டும் என்றால், பாதுகாப்பு அமைச்சின் ஊடாக, பாதுகாப்பு செயலரின் கையெழுத்துடன் வெளிவிவகார அமைச்சுக்கு பரிந்துரை அனுப்பப்படும்.

மேஜர் புலத்வத்த ஏன் இந்தப் பணிக்குத் தெரிவு செய்யப்பட்டார், ஏன் அவரது நியமனம் ரத்துச் செய்யப்பட்டது என்ற கேள்விக்கு இராணுவமே பதிலளிக்க வேண்டுமே தவிர பாதுகாப்பு அமைச்சு அல்ல.' என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## தாய் மற்றும் பிள்ளை கிணற்றில் விழுந்து பலி

கெக்கிராவ - மரதன்கடவல பகுதியில் தாய் மற்றும் பிள்ளை கிணறு ஒன்றில் விழுந்து உயிரிழந்துள்ளனர். குறித்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். சம்பவத்தில் 37 வயதான தாய் மற்றும் 6 வயதான பிள்ளை ஆகிய இருவரே உயிரிழந்துள்ளனர்.

மரண வீடொன்றுக்கு சென்றிருந்த நிலையிலேயே குறித்த இருவரும் கிணற்றில் விழுந்து உயிரிழந்துள்ளனர். சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## தந்தையின் பதவி பறிப்பு

# மாகாண அமைச்சுப் பதவியிலிருந்து பிரமித் பண்டார நேற்று இராஜினாமா



(கொழும்பு)

மத்திய மாகாண சபையின் உறுப்பினர் பிரமித் பண்டார மாகாண சபையின் அமைச்சுப் பதவியில் இருந்து நேற்று இராஜினாமா செய்துள்ளார்.

பிரமித் பண்டாரவின் தந்தையான ஜனக பண்டார தென்னக்கோனை ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் அமைப்பாளர் பதவியில் இருந்து நீக்கியதன் காரணமாக பிரமித் பண்டார மாகாண அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்துள்ளார். (இ-7)

# சுயாதீன ஊடக ஒழுங்குறுத்தல் குழுவினர் அமைச்சர் கயந்தவுடன் பேச்சுவார்த்தை



(கொழும்பு)

சுயாதீன ஊடக ஒழுங்குறுத்தல் ஆணைக்குழு ஒன்றை ஏற்படுத்துவது தொடர்பில் கருத்துக்களை பெற்றுக்கொள்வதற்காக பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு பத்திரிகை சபை உள்ளிட்ட பல நிறுவனங்களின் அதிகாரிகளுடன் பாராளுமன்ற மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக தலைமையில் பல சுற்று பேச்சுவார்த்தைகள் நேற்று நடத்தப்பட்டன.

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் உறுப்பினர்களுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் அதன் அங்கத்தவர்களான மெனிக் டி சில்வா , குமார் நடேசன் , சுகுமார் றொக்குட் கமல் லியனாராய்ச்சி , குமார் லோபேஸ் ஆகியோர் கலந்துகொண்டனர் .

இதேபோன்று பத்திரி கை சபையின் உறுப்பினர் களுடனும் சுயாதீன ஊடக ஒழுங்குறுத்தல் ஆணைக் குழு தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் சபையின் தலைவர் பந்துல வெல்லாள மற்றும் பேராசிரியர் ரோகண லக்ஸ்மன் பியதாச, ஊடகவியலாளர் ஆரியநந்த தும்பஹாவத்த, காமினி சுமனசேகர , பத்திரிகை சபையின் பதில் ஆணையாளர் றொசான் தபோவிட்ட, அரச தகவல் திணைக்களத்தின பணிப்பாளர் நாயகம் கலாநிதி ரங்க கலன்சூரிய ஆகியோர் கலந்துகொண்டனர். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரக்கட்சியின் மேதினக் கூட்டத்திற்கு கூட்டு எதிரணியினர் செல்லமாட்டார்கள்

## பிரசன்ன எம்.பி.கூறுகிறார்



"தமது குழுவின் மீது எவ்வாறான அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டாலும் அக்குழுவைச் சேர்ந்த 41 உறுப்பினர்களும் கண்டியில் நடைபெறவுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மே தினக் கூட்டத்துக்குச் செல்லமாட்டார்கள்" என ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் ஒருங்கிணைப்பாளரும் எம்.பியுமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார். "ஒரு சவாலுக்காகவே மே தினத்தைக் கொண்டாட காலிமுகத்திடலை ஒன்றிணைந்த எதிரணிக்கு அரசாங்கம் கொடுத்தது. அந்தச் சவாலுக்கு முகம் கொடுத்து இலட்சக்கணக்கான மக்களை அங்கு கொண்டு வரவேண்டியது ஒன்றிணைந்த எதிரணியின் பொறுப்பாகும். எம்மீதான அச்சத்தின் காரணமாகவே காலிமுகத்திடல் எங்களுக்கு வழுங்கப்பட்டுள்ளது. அந்தச் சவாலை நாங்கள் வெற்றி கொள்வோம்.கண்டி, கெட்டம்பே விளையாட்டு மைதானத்தில் நடத்தவுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின், மே தினக் கூட்டத்தில் கட்டாயம் பங்குபற்ற வேண்டுமென சகல உறுப்பினர்களுக்கும் கட்சியினால் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அவ்வாறு பங்கேற்காதவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது" என்றும் அவர் கூறினார். எனினும், காலிமுகத்திடலில் இடம் பெறும் மேதினக் கூட்டத்துக்குச் செல்வதற்கு நாங்கள் தீர்மானித்தது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மீதுள்ள எதிர்ப்பினால் அல்ல என்றும் இந்த அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பவேண்டும் என்பதற்கான மக்கள் பலத்தை நிரூபிப்பதற்காகவே அங்கு செல்கின்றோம் என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

# ஒருவரை கூரியஆயுதத்தால் தாக்கி காயப்படுத்திய நான்கு பேர் கைது

(கொழும்பு)

களனி - திப்பிடிகொட பகுதியில் ஒருவரை கூரிய ஆயுதத்தால் தாக்கி காயப் படுத்திய சம்பவம் தொடர்பில் நால்வர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

பேலியகொடை பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற முறைப்பாடு ஒன்றுக்கு அமைய, மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்படியே, இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்டவர்கள் 22, 24 மற்றும் 55 வயதான நால்வர் எனவும் களனி பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர், (இ-7)

# ஒரே குலையில் இருவகை காய்கள்

(கொழும்பு)

வென்னப்புவ- லுணுவில கிரிமெட்டியான பிரதேசத்தில் உள்ள ஒரு வீட்டில், ஒரே வாழைக் குலையில் இரண்டு வகையான காய்கள் காய்த்துள்ளன. இங்கு கப்பல் வாழை மரத்தில், பச்சை நிறத்தில் உள்ள கப்பல் வாழைக் காய்களும் சிவப்பு நிறத்தில் செவ்வாழைக் காய்களும் காய்த்துள்ளன. இந்த



மரத்தை பார்வையிடுவதற்கு பிரதேச மக்கள் பலர் அங்கு கூடுகின்றனர். (இ-7)

# இலங்கைக்கு பாரிய அச்சுறுத்தல்

## தயான் ஜெயதிலக்க அச்சம்



பிரதமரின் இந்திய விஜயத்துடன் திருகோணமலை துறைமுகம் இந்தியாவிற்கு தாரைவார்த்துக் கொடுக்கப்படும். திருகோணமலை எண்ணெய் குதங்கள் ஒப்பந்தம் இலங்கைக்கு பாரிய அச்சுறுத்தல் என கலாநிதி தயான் ஜெயதிலக்க தெரிவித்தார். 2003 ஆம் ஆண்டு செய்த தவறை மீண்டும் இந்த ஆட்சியில் செய்கின்றனர் எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்திய விஜயம் மேற்கொண்டுள்ள நிலையில் இலங்கை- இந்திய பொருளாதார உடன்படிக்கைகள் சில கைச்சாத்திடப்படும் என எதிர்பார்க்கப்படும் நிலையில் திருகோணமலை விவகாரத்தில் இலங்கை அரசாங்கத்தின் நகர்வுகள் தொடர்பில் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு அச்சம் வெளியிட்டார். (இ-7)

# மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு அதிகாரிக்கு எதிராக ஊழல் வழக்கு

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பிரத்தியேக பாதுகாப்பு அதிகாரியாக பணியாற்றிய மேஜர் நெவில் வன்னியாராச்சிக்கு எதிரான ஊழல் வழக்கில் அடிப்படை எதிர்ப்புகள் சம்பந்தமான உத்தரவுகளை எதிர்வரும் 31 ஆம் திகதி வழுங்கவுள்ளதாக நீதிமன்றம் அறிவித்துள்ளது.

கொழும்பு பிரதான நீதவான் லால் ரணசிங்க பண்டார நேற்று முன்தினம் இதனை அறிவித்துள்ளார்.

வருடந்தோறும் வழங்க வேண்டிய சொத்துக்கள் தொடர்பான விபரங்களை 5 ஆண்டுகளாக சமர்ப்பிக்கவில்லை என குற்றம் சுமத்தி மேஜர் நெவில் வன்னியாராச்சிக்கு எதிராக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1056

### கவிதா




### வரதன்




### சியா




### கஜீ




### சுயன்




### மதுரா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு ஜி.எஸ்.பி. கிடைக்குமா? கிடைக்காதா? ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் இன்று வாக்கெடுப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகை கிடைக்குமா? என்பது இன்று ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் நடக்கவுள்ள வாக்கெடுப்பிலேயே தீர்மானிக்கப்படவுள்ளது.

2010ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கைக்கான ஜிஎஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் இரத்துச் செய்திருந்தது. இந்தச் சலுகையை மீள வழங்குமாறு கோரி ஐரோப்பிய ஒன்றியத்திடம் இலங்கை விண்ணப்பித்திருந்தது.

எனினும், இந்தச் சலுகையை மீள வழங்குவதற்கு ஒரு தொகுதி நிபந்தனைகளை இலங்கை நிறைவேற்ற வேண்டும் என்ற நிபந்தனையை ஐரோப்பிய ஒன்றியம் முன்வைத்திருந்தது.

அந்த நிபந்தனைகளை நிறைவேற்றும் செயற்பாடுகளை இலங்கை முன்னெடுத்து வந்த நிலையில், 52 ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற உறுப்பினர்கள், இலங்கைக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையை வழங்கக்கூடாது என்று தீர்மானம் ஒன்றை கடந்தவாரம் ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளனர்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் மெதுவாகவே நிறைவேற்றப்படுகின்றன. பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கி, அதற்கு மாற்றான புதிய சட்டத்தை கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பன உள்ளிட்ட பல விடயங்களைச் சுட்டிக்காட்டியே இந்த தீர்மானம் முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானம் மீது விவாதம் நடத்தப்பட்டு இன்று வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

இந்த நிலையில், பிரசெல்ஸ் சென்றுள்ள பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹர்ஷ டி சில்வா, அங்குள்ள இலங்கை தூதுவருடன் இணைந்து ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்து கலந்துரையாடி வருகிறார்.

அத்துடன், பயங்கரவாத தடைச்சட்டத்துக்குப் பதிலாக கொண்டு வரப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவு நேற்று முன்தினம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு அவசரமாக அதற்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

அதன் பிரதி பிரசெல்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத் தீர்மானத்தை தோற்கடிக்கும் தீவிர இராஜதந்திர முயற்சிகளை இலங்கை மேற்கொண்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-7)

# நீதியைப் பெற்றுக் கொடுக்க தமிழ்ப் பெண்கள் பொலிஸில் இணைவது மிக அவசியம்

## யாழ். மாவட்ட பெண்கள் அபிவிருத்தி இணைப்பாளர் உதய நிதி சுட்டிக்காட்டு

எமது சமூகத்தில் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க தமிழ் பெண்கள் பொலிஸ் சேவையில் இணைவது மிக அவசியம் எனத் தெரிவித்த யாழ். மாவட்ட பெண்கள்அபிவிருத்தி இணைப்பாளர் செல்வி ந.உதயனி, பொலிஸ் சேவை வெற்றிடங்களுக்கு விண்ணப்பிக்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது சமூகத்தில் பெண்கள் வன்முறைக்குட்படுத்தப்பட்டால் அவர்கள் பொலிஸ் நிலையங்களுக்கு செல்லும் போது கலாசார ரீதியான சில இடர்பாடுகளை சந்திக்க வேண்டியுள்ளது.

அதாவது பொலிஸ் நிலையங்களில் ஆண் பொலிஸ் உத்தியோகத்தர்களிடம் வன்முறை தொடர்பாக குறிப்பாக பாலியல் வன்முறை தொடர்பான விடயங்களை முறைப்பாட்டின் போது சொல்வதில் கலாசார ரீதியான தயக்கம் பெண்கள் மத்தியில் ஏற்படுகிறது.

இதன் காரணமாக சட்ட நடவடிக்கை எடுக்கும் போது அவர்களுக்கான சில குறைபாடு காணப்படும் இடத்தில் நீதியை பெறுவதற்கு தாமதம் ஏற்படுகிறது. இது தொடர்பாக காலத்துக்கு காலம் பெண்கள் சார்ந்த அமைப்பினர், செயற்பாட்டாளர்கள் பொலிஸ் உயர் அதிகாரிகளிடம் சுட்டிக்காட்டி வருகின்றனர்.

ஆனால் அவர்களின் பதில் • தமிழ் பெண்கள் பொலிஸ் சேவையில் இணைய முன்வர வேண்டும் என்பதே.சில குடும்பங்களில் பெண்கள் விருப்பப்பட்ட போதும் அவர்களின் உறவுகளால் குறித்த சேவையில் இணைவதில் பல தடை ஏற்படுகிறது. இது தொடர்பில் மக்கள் மத்தியில் போதிய விழிப்புணர்வு இல்லை என்றே கூற முடியும்.

எனவே நாம் சமூகத்தின் மத்தியில் இது தொடர்பில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி வருகிறோம். தமிழ் பெண்கள் பொலிஸ் சேவையில் இணைவது மிக மிக அவசியம் ஆகும்.

இந்த நிலையில் கடந்த மார்ச் மாதம் 31 ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. அதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி மே மாதம் 2 ஆம் திகதியாக வுள்ளது. திருமணமாகாத 18 வயது தொடக்கம் 28 வயது வரையான பெண்கள் குறித்த சேவைக்கு விண்ணப்பிக்க முடியும்

பொலிஸ்சேவையில்விருப்பமும் ஆர்வமும் உள்ள பெண்கள் பொலிஸில் இணைவதன் மூலம் வன்முறைக்குட்படுகின்ற பெண்கள் சார்ந்த பொலிஸ்சேவைகளை வினைத்திறனாக்க முடியும். என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-9)

# கம்பவாரிதி இ.ஜெயராஜ் உள்ளிட்ட தமிழ் அறிஞர்கள் 52 பேருக்கு விருது

## தமிழக முதல்வர் பழனிச்சாமி வழங்கினார்



(சென்னை)

தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி நேற்று முன்தினம் தலைமைச் செயலகத்தில் தமிழ் அறிஞர்கள் 52 பேருக்கு விருதுகள் வழங்கிக் கௌரவித்தார்.

முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி நேற்று முன்தினம் தலைமைச் செயலகத்தில், 2016 ஆம் ஆண்டுக்கான தமிழ்த்தாய் விருது, கபிலர் விருது, உ.வே.சா. விருது, கம்பர் விருது, சொல்லின் செல்வர் விருது, ஜி.யு. போப் விருது, உமறுப்புலவர் விருது, இளங்கோவடிகள் விருது, அம்மா இலக்கிய விருது, சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருதுகளையும், 2015 ஆம் ஆண்டுக்கான முதலமைச்சர் கணனித் தமிழ் விருது மற்றும் 2015 ஆம் ஆண்டுக்கான தமிழ்ச் செம்மல் விருதுகளையும் சேர்த்து 52 விருதுகளை வழங்கினார்.

2016ஆம் ஆண்டிற்கான தமிழ்த்தாய் விருதிற்கு மாணவர் மன்றம் தமிழ் அமைப்பு தெரிவு செய்யப்பட்டு, விருதுத் தொகையாக 5 இலட்சம் ரூபாய்க்கான காசோலை, கேடயம், தகுதியுரை மற்றும் பொன்னாடை என்பன அந்த மன்றத்தின் நிர்வாகிகளுக்கு வழங்கப்பட்டன.

கபிலர் விருதை இல.க. அக்னிபுத்திரன், உ.வே.சா. விருதை முதுமுனைவர் ம.அ.வேங்கடகிருஷ்ணன், கம்பர் விருதை இலங்கை கம்பவாரிதி இ.ஜெயராஜ், சொல்லின் செல்வர் விருதை மணிகண்டன், ஜி.யு.போப் விருதை வைதேகி ஹெர்பார்ட் சார்பாக ஆறுமுகம், உமறுப்புலவர் விருதை தி.மு.அப்துல் காதர், இளங்கோவடிகள் விருதை நா.நஞ்சுண்டன், அம்மா இலக்கிய விருதை ஹம்சா தனகோபால் ஆகியோர் பெற்றனர்.

இவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலை, ஒரு பவுண் தங்கப்பதக்கம், தகுதியுரை மற்றும் பொன்னாடை ஆகியவை வழங்கப்பட்டன.

2016ஆம் ஆண்டிற்கான சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருதுகள் நாகலட்சுமி சண்முகம், அ.ஜாகிர் உசேன், அல்லா பிச்சை (எ) முகம்மது பரிஸ்டா, உமாபாலு, கா.செ லப்பன், வி.சைதன்யா, முருகேசன், கு.பாலசுப்பிரமணியன், ச.ஆறுமுகம்பிள்ளை, கே.எஸ்.சுப்பிரமணியன் ஆகியோருக்கு வழங்கப்பட்டது.

அவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலை, தகுதியுரை மற்றும் பொன்னாடை என்பனவற்றை முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி வழங்கினார்.

2015ஆம் ஆண்டிற்கான முதலமைச்சர் கணனித் தமிழ் விருது செ.முரளி (எ) செல்வமுரளிக்கு ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலை, ஒரு பவுண் தங்கப் பதக்கம், தகுதியுரை, பொன்னாடை ஆகியவவை வழங்கப்பட்டன. (இ-3)

# இந்திய மீனவர்களின் படகுகளை விடுவிப்பது தொடர்பாக ஆராய அரசால் விசேட குழு அமைப்பு

(சென்னை)

இந்திய மீனவர்களின் படகுகளை விடுவிப்பது தொடர்பாக ஆராய இலங்கை அரசு சார்பில் விசேட குழு அமைக்கப்பட்டுள்ளது.

இக் குழுவின் தீர்மானங்களுக்கமையவே எதிர்காலத்தில் தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளன். இது தொடர்பாக கடற்றொழில் நீரியல்வளத்துறை அமைச்சு மேலும் தகவல் தருகையில், இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி, மீன்பிடித்த இந்திய மீனவர்களின் 132 இற்கு மேற்பட்ட படகுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவற்றை விடுவிப்பதற்கு வடபகுதி மீனவ சமாசங்களும் மீனவர்களும் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். இந்தியப் படகுகள் விடுவிக்கப்பட்டால் மீண்டும் கடல் எல்லை மீறப்படும். எனவே எங்களது வாழ்வாதாரம் பாதிக்கப்படும் எனத் தெரிவிக்கும் வடபகுதி மீனவர்கள் படகுகளை விடுவிப்பதை கடுமையாக எதிர்க்கின்றனர். எனவே இப் பிரச்சினையைக் கையாள்வதற்காக வடபகுதி மீனவ சங்கங்களின் பிரதிநிதிகள், அமைச்சின் அதிகாரிகள் உள்ளடக்கப்பட்ட விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இக் குழு கூடி இந்திய மீனவர்களின் படகுகளை விடுவிபதா? இல்லையா? என்பது தொடர்பில் தீர்மானம் எடுக்கவுள்ளது. (இ-7)





ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளராக ஜனாதிபதியால் அகிலதாஸ் நேற்று முன்தினம் நியமிக்கப்பட்டுள்ளார். மேலும் 2 மாவட்ட அமைப்பாளர்களாக கோபால கிருஷ்ணன் கருணாகரன், அருணதிலக ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூன்று புதிய அமைப்பாளர்களுக்கான நியமனக் கடிதங்களை கட்சியின் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவரது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் வைத்து வழங்கிவைத்தார். (படங்கள்:- சோபிகா, மகாலிங்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

50 வருட காலமாக யாழ். குடாநாட்டு மக்களின் நன்மதிப்பை பெற்ற உங்கள் அபிமான

மைதிலி

நகைமாடம் இன் தங்கத்திருநாளாம்

அக்ஷய திருதியை கொண்டாட்டம்

இம் மாதம் (29.04.2017) 29ஆம் திகதி வரை எம்மிடம் நகை வாங்கும் அனைத்து வாடிக்கையாளர்களின் சிட்டைகளும் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்டு விசேட பரிசுகள் வழங்கப்படும்.

முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகள் தங்க நாணயங்கள், மேலும் 10 ஆறுதல் பரிசுகள்




அன்றைய தினத்துக்கான (28, 29 ஆம் திகதி) விசேட சலுகைகள்

- அதி நவீன டிசைனுக்கேற்ப நம்ப முடியாத விலைக் கழிவுகள் வழங்கப்படும்.
- பழைய நகைகளைக் கொடுத்து நகை வாங்குவோருக்கு அன்றைய பவுண் விலைக்கே எடுக்கப்படும்.
- குறிப்பிட்ட நகைகள் தங்க விலைக்கே சேதாரம் இல்லாமல் வழங்கப்படும்.
- நகைகள் கொள்வனவு செய்யும் அனைவருக்கும் அதி விசேட பரிசு காத்திருக்கின்றது.
- 02.பவுணுக்கு மேல் கொள்வனவு செய்வோருக்கு பவுண் காசு அன்பளிப்பாக வழங்கப்படும்.

காலை 8.00 மணி தொடக்கம் இரவு 8.00 மணிவரை கடைதிறந்திருக்கும்



அக்ஷய திருதியை

அர்த்தமுள்ள அக்ஷய திருதியில் பொன், பொருள் வாங்கினால் செல்வம் பெருகும் என்பது அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.

செல்வத்துக்கு அதிபதியான குபேரன் நான் இழந்த சங்க நிதி, பதும நிதிகளை பெற்றது அக்ஷய திருதியை நாளில்தான். பாண்டவர்கள் வன வாசத்தின் போது சூரியனிடம் இருந்து அள்ள அள்ள குறையாத அட்சய பாத்திரம் பெற்றது இந்த நாளில்தான். அதே போல் மணிமேகலையும் இந்த நாளில் தான் அக்ஷய பாத்திரம் பெற்றுள்ளார். ஆம் உங்கள் சௌபாக்கியம் குறையாத வாழ்வின் அதிர்ஷ்டம் பெருகிட தூய தங்க ஆபரணங்களை உங்கள் ஒவ்வொருவரது இல்லத்துக்கு எடுத்துச் செல்லத் தவறாதீர்கள்.

யாழ் மைதிலி ஜுவலர்ஸ்

89 V, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 222 7902

79 Z, Sea Street, Colombo - 11.
Tel : 2396239

சி-8269


# காணி உறுதிகளை சுருட்டிக்கொண்டு ஓடச்சொல்லுங்கள்

## ஞானசார தேரர் எச்சரிக்கை



மாணிக்கமடு தீகவாவி புனிதப் பகுதியில் காணி அனுமதிப் பத்திரத்தை வைத்துள்ளவர்களுக்கு அதனைச் சுருட்டிக்கொண்டு வெளியேறுமாறு கூறுங்கள் எனவும், பொலிஸாரின் உதவியுடன் விஹாரைக்கான கட்டடம் அமைக்கும் பணியை முன்னெடுக்குமாறும் பொதுபல சேனாவின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் அம்பாறை மாவட்ட செயலாளருக்கு எச்சரித்தார்.

தீகவாவி புனிதப் பிரதேசம் எனக் கூறப்படும் மாணிக்கமடு பகுதியிலுள்ள இரு நிலப் பகுதிகளை முஸ்லிம்கள் சட்டவிரோதமாக தங்களது பெயருக்கு எழுதிக்கொண்டுள்ளதாகவும், அதிகாரிகள் இதற்கு உடந்தையாக இருந்துள்ளதாகவும் பௌத்த தீவிரவாத அமைப்புக்கள் குற்றம் சாட்டி வருகின்றன.

இவ்வாறு முஸ்லிம்களின் பெயரில் காணி உறுதியுள்ள மாணிக்கமடு பகுதியில் உள்ள காணியில், பௌத்த விஹாரைக்குரிய கட்டடமொன்றை நிர்மாணிக்க கடந்த வாரம் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, அந்த காணி உறுதியுள்ள முஸ்லிம்கள் நியாயமான முறையில் இந்த நடவடிக்கையை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்தினர். இதனால் இந்த நடவடிக்கை ஒருவாரத்துக்கு பிற்போடப்பட்டது.

இந்த நடவடிக்கையை உடன் ஆரம்பிக்குமாறு தெரிவித்து, நேற்று முன்தினம் பௌத்த அமைப்பான பொதுபல சேனா அம்பாறை மாவட்ட செயலாளரைச் சந்தித்துக் கலந்துரையாடியது.

இதன்போதே ஞானசார தேரர் காரமான முறையில் மாவட்ட செயலாளருக்கு கட்டளையிட்டார்.

பணத்தைக் கொடுத்து காணி உறுதிகளை செய்து கொண்டுள்ளதாகவும், கிழக்கு மாகாணத்தில் இடம்பெறும் அபிவிருத்தி ,நடவடிக்கைகளைப் புரிந்து கொள்ள முடியாதளவுக்கு தாங்கள் சிறுபிள்ளைகள் அல்லவெனவும், எந்தவொரு அதிகாரத்துக்கும் பயப்படத் தேவையில்லையெனவும் பொலிஸாரின் உதவியைக்கொண்டு உடனடியாக கட்டடப் பணிகளை ஆரம்பிக்குமாறும் ஞானசார தேரர் மேலும் எச்சரித்தார். (இ-7)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1983இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: சூரிசெவ் 7 இல்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்: BSc Eng/ பொறியியலாளர் சிங்கப்பூர்
தொ.இ: B/7245

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 26
உயரம்: 6'
தகைமை/தொழில்:MBA/சொந்த தொழில் லண்டன் NOT PR
தொ.இ: B/7246

பிறப்பு: 1968 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 16 செவ் 12 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BA, MA/ அரசதொழில்
தொ.இ: B/7247

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி.பா: 21 சூரி செவ் 4 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: QS/தனியார் தொழில்
தொ.இ: B/7249

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 45 செவ் 1 இல்
தொழில்: A/L
தொ.இ: G/5807

பிறப்பு: 1975 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 34
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L
தொ.இ: G/5808

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 12 சூரிசெவ் 2 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: BSc/தனியார் தொழில்
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: G/5813

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 43
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: BA/ அரசதொழில்
தொ.இ: G/5817

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## பதவியும் குதிரையும்



ஆசை யாரை விட்டது? சாதாரணமானவர்களுக்கு, சாதாரண ஆசை. பெரிய பதவிகளில் உள்ளவர்களுக்கோ, பெரிய ஆசைகள். நாட்டை ஆளக்கூடியவர்கள், சாதாரண துறவியின் சொத்துக்கு ஆசைப்பட்டு, அவருடன் மோதிய வரலாறு இது.

நலன் (நளன் அல்ல) என்ற மன்னன், வேட்டையாடப் போனான். ஒரு மானைத் துரத்தி நெடுந்தூரம் போனதில், குதிரைகள் களைத்துப் போயின. அதனால், எவ்வாறு நாடு திரும் புவது என்று யோசித்த மன்னரின் பார்வையில், வாமதேவ முனிவர் அகப்பட்டார்.

முனிவரை வணங்கிய அரசர், "மாமுனிவரே... உங்களிடம் உள்ள இரண்டு குதிரைகளைத் தந்தால், நான் நாடு திரும்பிய பின், குதிரைகளைத் திருப்பி அனுப்பி விடுவேன்..." என வேண்டினான்.

முனிவரும் சம்மதித்து, குதிரைகளைக் கொடுத்தார். நாடு திரும்பிய மன்னனுக்கு, முனிவர் அளித்த குதிரைகளின் அழகு, கம்பீரம் மற்றும் வேகம் ஆகியவை மனதைக் கவர்ந்ததால், குதிரைகளைத்தானே சொந்தமாக்கி கொள்ள முடிவு செய்தான்.

நாட்கள் வாரமாகி, வாரங்கள் மாதங்களாகின. குதிரைகள் திரும்பாததால், வாமதேவர் தன் பணியாட்களை அனுப்பி, குதிரையை திரும்ப அழைத்து வரப் பணிந்தார். ஆனால், மன்னன் குதிரைகளைத்தர மறுத்து விட்டதால், முனிவரே நேரில் வந்து கேட்டார்.

"காட்டில் ஆசிரமத்தில் வாழும் உங்களுக்கு குதிரைகள் எதற்கு? வேண்டுமானால், அவற்றுக்குப் பதிலாக, என் குதிரைகளில் இரண்டைத் தருகிறேன் வாங்கிக் கொள்ளுங்கள்..." என்று கூறினான் மன்னன்.

அதை ஏற்க மறுத்த முனிவர், "மன்னா... தவறு செய்யாதே... நீ தவறு செய்தால், உன்னைப் பார்த்து உன் நாட்டு மக்களும் கெடுவர் அதன்பின் நாடே கெட்டுப் போகும்..." என்றார்.

"ஆட்சி செய்யும் எனக்கு, ஒரு ஆண்டி அறிவுரை கூறுவதா...? யாரங்கே... இவரை கொல்லுங்கள்..." என்று கட்டளை பிறப்பித்தான் மன்ன்னன்.

பொறுமை இழந்த முனிவர், தன் தவ சக்தியால் அரசரையும் அவரைக் கொல்ல வந்த வீரனையும் கொன்றார்.

நலன் இறந்த பின், அவன் தம்பி பதவிக்கு வந்தான். அண்ணனை விட, நயவஞ்சகன் இவன். எதிர்பாராமல் கிடைத்த அரச பதவி அவனுள் ஆணவத்தை வளர்த்தது. அவனிடம் சென்று, முனிவர் தன் குதிரைகளைத் திருப்பித் தரு மாறு கேட்டார்.

இவனோ, அண்ணனைப் போல ஆளை அனுப்பாமல் தானே முனிவரைக் கொல்ல, வில்லை எடுத்து, அதில், அம்பைத் தொடுத்தபோது, கோபமடைந்த முனிவர் சாபம் கொடுத்தார்.

அதன்படி, அரசனின் கைகள் அப்படியே செயலற்றுப் போக, அவன் பயந்து, முனிவரின் காலில் விழுந்து மன்னிப்பு கேட்டான். கூடவே, முனிவரின் குதிரைகளை அவரிடம் ஒப்படைத்தான். அதன்பின், முனிவரின் அருளால், அவன் கைகள் இயங்கின. குதிரைகளுடன் ஆசிரமம் திரும்பினார் முனிவர்.

ஆபத்தில் உதவியவர்களுக்கு தீங்கு செய்ய நினைப்பவன் அரசனாக இருந்தாலும், அழிந்து போவான்!



## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1521-நாடுகாண் பயணி பேர்டினண்ட் மகலன் பிலிப்பைன்சில் பழங்குடியினரால் கொல்லப்பட்டார்.
- 1522-மிலான் நகரைக் கைப்பற்ற இடம்பெற்ற போரில் பிரெஞ்சு மற்றும் சுவிட்சர்லாந்துப் படையினரை ஸ்பானியப் படையினர் தோற்கடித்தனர்.
- 1565-பிலிப்பைன்சின் முதலாவது ஸ்பானியக் குடியேற்ற நாடு சேபு (Cebu) அமைக்கப்பட்டது.
- 1813 - 1812 போர் ஐக்கிய அமெரிக்கப் படைகள் ஒண்டாரியோவின் தலைநகர் யோர்க்கை கைப்பற்றினர்.
- 1865-2,400 பேரை ஏற்றிச் சென்ற ஐக்கிய அமெரிக்காவின் சுல்டானா என்ற நீராவிக் கப்பல் டென்னசிக்கருகில் வெடித்து மூழ்கியதில் 1,700 பேர் கொல்லப்பட்டனர். இவர்களில் பெரும்பாலானோர் அமெரிக்க உள்நாட்டுப் போரில் சிறைபிடிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட கூட்டணிப் படையினராவார்.
- 1904-அவுஸ்திரேலியாவின் முதலாவது தேசிய அரசை அவுஸ்திரேலியத் தொழிற் கட்சி அமைத்தது.
- 1909-துருக்கியின் சுல்தான் இரண்டாம் அப்துல் ஹமீட் பதவியில் இருந்து அகற்றப்பட்டு அவனது சகோதரன் ஐந்தாம் மெஹ்மெட் ஆட்சிக்கு வந்தான்:
- 1945 - இரண்டாம் உலகப் போர் கடைசி நாசி ஜேர்மன் படைகள் பின்லாந்தில் இருந்து வெளியேறினர்.
- 1945 - இரண்டாம் உலகப் போர் நாசிக் கட்சியின் அதிகாரபூர்வ பத்திரிகையான வோல்கிஷெர் பியோபாக்டர் நிறுத்தப்பட்டது.
- 1959 - மக்கள் சீனக் குடியரசில் இருந்து கடைசி கனேடிய மதபரப்புநர் வெளியேறினர்.
- 1960-பிரெஞ்சு நிர்வாகத்தின் கீழ் ஐ.நாவின் நேரடி ஆட்சியின் கீழிருந்த டோகோ விடுதலை அடைந்தது.
- 1961-சியேரா லியோனி ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலை பெற்றது.
- 1974-அமெரிக்க ஜனாதிபதி ரிச்சார்ட் நிக்சனுக்கெதிராக வோஷிங்டன் டிசியில் 10,000இற்கு மேற்பட்டோர் ஆர்ப்பாட்ட ஊர்வலம் சென்றனர்.
- 1978-இராணுவப் புரட்சியை அடுத்து ஆப்கானித்தான் மக்கள் சனநாயகக் கட்சி ஆப்கானித்தானின் ஆட்சியைக் கைப்பற்றியதுடன் ஆப்கானித்தானில் போர் தொடங்கியது.
- 1981 - Xerox PARC முதன் முறையாக கணனி mouse I அறிமுகப்படுத்தியது.
- 1992-சேர்பியா மற்றும் மொண்டெனேகிரோவை உள்ளடக்கிய யூகொஸ்லாவிய கூட்டுக் குடியரசு அமைக்கப்பட்டது.
- 1993-காபோனில் இடம்பெற்ற விமான விபத்தில் காம்பியாவின் தேசிய காற்பந்தாட்ட அணியினர் அனைவரும் கொல்லப்பட்டனர்.
- 1994-தென்னாபிரிக்காவில் முதற்தடவையாக கறுப்பினத்தவரும் வாக்களித்த மக்களாட்சி முறையிலான தேர்தல் இடம்பெற்றது.
- 2001-தீச்சுவாலை இராணுவ நடவடிக்கை (ஹீனிகல) விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டது. 600 இற்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டனர்.
- 2002-நாசாவின் பயனியர் 10 விண்கலத்துடன் கடைசித் தடவையாக தொடர்புகள் கிடைத்தது.
- 2007-எஸ்தோனியாவின் தலைநகர் தாலின் நகரில் இருந்த சோவியத்தின் செம்படையின் நினைவுச் சிலை அங்கிருந்து அகற்றப்பட்டது.

பிறப்புகள்

- 1723 - பிலிப்பு தெ மெல்லோ, கொழும்பில் பிறந்த கிறிஸ்தவத் தமிழ் அறிஞர் (இ. 1790)
- 1852 - சர் பி. தியாகராய செட்டி, திராவிட அரசியல் தலைவர் (இ. 1925)
- 1902 - கந்தமுருகேசனார், ஈழத்துப்பெரியார், மூதறிஞர் (இ. 1965)
- 1912 - சோரா சேகல், இந்தியத் திரைப்பட நடிகை (இ. 2014)
- 1942 - வலேரி பொல்யாக்கொவ், ரஷ்ய விண்வெளி வீரர்
- 1945 - பிரபஞ்சன், தமிழ் எழுத்தாளர், விமர்சகர்

இறப்புகள்

- 1521 - பெர்டினென்ட் மகலன், போர்த்துக்கேய மாலுமி (பி. 1480)
- 2015 - க.அருணாசலம், ஈழத்து தமிழறிஞர், பேராசிரியர் (பி. 1946)

சிறப்பு நாள்

- சியாரா லியோனி - விடுதலை நாள் (1961)
- டோகோ - விடுதலை நாள்



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 50 | 60 | 50 | 80 | 100 |
| உருளைக்கிழங்கு | 110 | 100 | 90 | 120 | 110 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 80 | 100 | 120 | 160 | 120 |
| தக்காளி | 110 | 100 | 60 | 100 | 100 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 100 | 50 | 70 | 80 | 80 | 60 |
| கோவா | 100 | 160 | 80 | 100 | 100 | 100 | 120 |
| கரட் | 130 | 140 | 80 | 120 | 120 | 200 | 120 |
| பூசணி | 50 | 60 | 30 | 50 | 50 | 60 | 60 |
| புடோல் | 100 | 100 | 50 | 80 | 60 | 80 | 100 |
| வாழைக்காய் | 60 | 40 | 40 | 50 | 40 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 200 | 200 | 140 | 200 | 160 | 200 | 200 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 90 | 100 | 90 | 100 | 120 |
| பாகற்காய் | 170 | 200 | 60 | 160 | 100 | 120 | 180 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 50 | 80 | 60 | 120 | 120 |
| கருணைக்கிழங்கு | 120 | 100 | - | 100 | 100 | 100 | 100 |
| பயற்றங்காய் | 80 | 100 | 50 | 60 | 60 | 60 | 180 |
| லீக்ஸ் | 60 | 100 | 60 | 120 | 80 | 120 | 100 |
| பீற்றூட் | 80 | 100 | 100 | 160 | 120 | 120 | 100 |
| கறிமிளகாய் | 100 | 200 | 90 | 200 | 120 | 160 | 150 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 150 | 200 | 200 | 300 | 300 |
| போஞ்சி | 160 | 200 | 100 | 160 | 160 | 160 | 200 |
| கத்தரிதம்புள்ள | 80 | 60 | 30 | 60 | 40 | 50 | 100 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 15 | 30 | 30 | 30 | 20 |
| தேசிக்காய் | 70 | 30 | 40 | 80 | 60 | 60 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 70 | 60 | 70 | 60 | 50-60 | 70 |
| இராசவள்ளி | 200 | 30 | 150 | 200 | 160 | 200 | 200 |
| வெங்காயப்பூ | - | - | - | — | — | - | 300 |
| முள்ளங்கி | 60 | - | - | 60 | 100 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 40 | - | 10 | 30 | 40 | 40 | 20 |
| வல்லாரை | 10 | - | 10 | 10 | 20 | 20 | 25 |
| ஈரப்பலா | - | - | - | — | - | - | - |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'குளிக்க கிணற்றடிக்குச் சென்றவன் குளிக்க வேண்டும் அல்லது கிணற்றடியை விட்டு அகல வேண்டும்.
- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழ் அரசியல் தலைமை தீர்க்கமான முடிவு எடுக்க வேண்டும்

தினம் தினம் பதற்றத்தோடும் ஏக்கத்தோடும் வாழுகின்ற அவலம் காணாமல்போனவர்களின் உறவுகளை வாட்டி நிற்கிறது.

என் பிள்ளைக்கு நடந்தது என்ன என்பதை அறிய முடியாததால் பெற்றவர்களும் பிள்ளைகளும் குடும்பத் தலைவிகளும் படும் வேதனை அளவேயில்லை.

என் பிள்ளையை என் கையால் ஒப்படைத்தேனே என்று பெற்ற மனம் பதறுகின்ற அவலத்தை தீர்க்க யாரும் முன்வரவில்லை.

இது ஒருபுறம். மறுபுறத்தில் சொந்த நிலத்தில் வாழ முடியாத பரிதாபம். கூடவே, விளக்கம் விசாரணை இன்றி சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளின் அவலம் என தமிழ் மக்கள் ஏதோவொரு வகையில் யுத்தத்தின் கொடூரத்தை அனுபவித்துக் கொண்டே இருக்கின்றனர்.

இச்சந்தர்ப்பத்தில் தங்களின் உரிமைக்காக, இழப்புக்காக நீதி கேட்டு தொடர் போராட்டம் நடத்தும் தமிழ் மக்களின் கோரிக்கையை உலகறியச் செய்யும் பொருட்டு வடக்கு கிழக்கு எங்கும் இன்று பூரண ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்குத் தழுவியதாக முன்னெடுக்கப்படும் இன்றைய ஹர்த்தாலால் போராட்டம் எந்தளவு தூரம் இலங்கை அரசை மசிய வைக்கும் என்று ஆராய்வதும் அவசியம்.

இத்தகைய கட்டத்தில், தொடர்ச்சியான மக்கள் போராட்டம்; கடையடைப்பு என்பன பல்வேறு நடைமுறைச் சிக்கல்களைத் தரக் கூடியவை.

எனவே, இன்றைய ஹர்த்தால் போராட்டம் முழுமையாக நடந்தேறிய பிற்பாடு, அந்தப் போராட்டத்தை மையப்படுத்தி – உதாரணப்படுத்தி – எடுத்துக்காட்டி தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சினைகளை, அவலங்களை; துயரங்களை சிங்கள மயமாக்கும் சர்வதேச சமூகத்துக்கும் எடுத்துரைக்க வேண்டும்.

இதைச் செய்வதன் மூலமாகவே இன்று நடைபெறும் ஹர்த்தால் அர்த்தமுடையதாக – வெற்றியுடையதாக அமையும்.

எனினும் ஹர்த்தாலுக்கு ஆதரவு தெரிவிப்பதுடன் தமது கடமை முடிந்து விடுவதாக தமிழ் அரசியல் தலைமை நினைக்கிறது.

காணாமல்போன உறவுகளின் பரிதாபத்துக்கு முடிவு கட்டப்பட வேண்டும். அவர்கள் தொடர்ச்சியாக போராடுவதென்பது எத்துணை கடினமானதென்பதை உணர்ந்து தமிழ் அரசியல் தலைமை; காணாமல்போனவர்கள் தொடர்பில், நிலமீட்புத் தொடர்பில்; தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் தொடர்ச்சியாக குரல் கொடுப்பதுடன்,

வெளிநாட்டுத் தூதுவர்கள், இந்த நாட்டின் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் மதத் தலைவர்கள் எனப் பலரையும் சந்தித்து மேற்குறிப்பிட்ட விடயத்துக்கு தீர்வு கட்ட வேண்டும் என வலியுறுத்த வேண்டும்.

மிகக் குறுகிய கால அவகாசம் கொடுத்து மேற்குறிப்பிட்ட விடயத்துக்குப் பதில் சொல்லாவிட்டால் நாங்கள் எங்கள் ஆதரவை விலக்குவோம் என்று எச்சரிக்கை செய்ய வேண்டும்.

இதைச் செய்யாமல் வெறுமனே ஹர்த்தால் போராட்டத்தை நடத்தி முடிப்பது எதிர்பார்த்த வெற்றியைத் தராமல் போகும் என்பதால்,

இன்றைய ஹர்த்தால் போராட்டத்துடன் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை தமிழ் அரசியல் தலைமை கையிலெடுக்க வேண்டும். இது மிகவும் அவசியமானதாகும்.

# வடக்கு- கிழக்கில் இன்று நடைபெறும் ஹர்த்தாலுக்கு முல்லை. பிரஜைகள் உரிமைக்கான அமைப்பு ஆதரவு

(முல்லைத்தீவு)

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் கோரிக்கைக்கு அமைவாக இன்று வடக்கு- கிழக்கு தழுவிய ரீதியில் நடைபெறும் பூரண ஹர்த்தாலுக்கு முல்லைத்தீவு மாவட்ட பிரஜைகள் உரிமைக்கான அமையம் தனது முழு ஆதரவை வழங்கியுள்ளது.

இது தொடர்பாக அவ்வமையத்தின் உபதலைவர் சு.பரந்தாமன் விடுத்துள்ள அறிக்கையில்,

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் விடுத்துள்ள கோரிக்கைக்கு அமைவாக இன்று நடைபெறும் ஹர்த்தால் போராட்டத்திற்கு பூரண ஆதரவை வழங்குகின்றோம்.

வடக்கு- கிழக்கில் யுத்தத்தால் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு சரியான தீர்வு இன்னும் அரசால் வழங்கப்படவில்லை.

எனவே தொடர்ந்து போராடி வரும் மக்களுக்கு விரைவில் தீர்வு கிடைக்க வேண்டும் என்ற நோக்கோடு இன்று நடைபெறும் ஹர்த்தாலுக்கு முல்லைத்தீவு மாவட்ட மக்கள் பூரண ஆதரவை வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# சுமந்திரன் மீதான கொலை முயற்சி; முன்.போராளிகளுக்கு மீளவும் மறியல்

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை படுகொலை செய்ய முயற்சித்ததாக தெரிவித்து கைது செய்யப்பட்ட 5 சந்தேக நபர்களையும் எதிர்வரும் மே மாதம் மூன்றாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

த.தே.கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனை படுகொலை செய்ய முயற்சித்தமை, சட்டவிரோத ஆயுதங்கள் மற்றும் போதைப் பொருள் என்பவற்றை வைத்திருந்ததாக குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்ட 5 சந்தேக நபர்களும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

நேற்றுவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 5 பேரும் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் நேற்று ஆஜர்படுத்தப்பட்ட போதே தொடர்ந்து எதிர்வரும் மே மாதம் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டுள்ளது. (செ-11)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்

**விளக்கு என பெண்களைக் கூறுவது ஏன்?**

வீட்டில் பெண்கள் பழகுவதைப் பொறுத்துத்தான் அந்த வீட்டின் நிலைப்பாடு அமையும். பெண் வீட்டின் ஐஸ்வர்யமாவாள். லட்சுமியாவாள். பெண்கள் எப்பொழுதும் சிரித்த முகத்துடனும் சுத்தமான மனதுடனும் அன்போடும் ஆதரவோடும் அனைவரிடத்திலும் பழக வேண்டும். அப்பொழுது அவள் முகத்தில் லட்சுமி குடியிருப்பதுடன் லட்சுமி கடாட்சமும் உண்டாகும்.




அவள் எப்போதும் வீட்டைத் தூய்மையாகவும் அழகாகவும் வைத்து வீட்டில் உள்ளவர்களின் நலன்களுக்கு உதவிக்கரமாக இருப்பாள்.

மேலும் அவள் சகிப்புத் தன்மையுள்ளவளாகவும் பொறுமைசாலியாகவும் விட்டுக்கொடுக்கும் மன முள்ளவளாகவும் இருப்பதால் லட்சுமி அவளிடம் குடி கொள்கிறாள்.

வீட்டிற்கு எப்பொழுதும் மகிழ்ச்சியைத் தருகிற, ஆனந்தம் அளிக்கிற பெண் வீட்டிற்கு விளக்கைப் போன்றவளாவாள். வீட்டில் வெளிச்சம் பரவச் செய்து வீட்டில் உள்ளவர்களை மகிழ்ச்சிபபடுத்தி ஐஸ்வர்யமாக்கி அந்த வீட்டை முன்னேற்றத்திற்கு அழைத்துச் செல்பவள் பெண் தான்.

பெண்கள் நினைத்தால் ஒரு வீட்டை சொர்க்கமாகவும் நரகமாகவும் மாற்றலாம். பெண்கள் ஐஸ்வர்யமில்லாதவளாக இருந்தால் துர்க்குணமுள்ளவளாக இருந்தால் அந்த வீடு நரகமாகிப் போகும். (தொடரும்)

# கடையடைப்புக்கு ஆதரவு

(யாழ்ப்பாணம்)

வடக்கு -கிழக்கில் இன்று 27 ஆம் திகதி நடைபெறவுள்ள பூரண கடையடைப்பு போராட்டத்திற்கு யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கமும் தமது பூரண ஆதரவை வழங்குவதாக அதன் தலைவர் இ.பேரின்பநாயகம் தெரிவித்துள்ளார். (இ-7)

## சாஸ்திரங்கள்

✦ பிறருடைய குடும்பங்களுக்கு நாசம் விளைவித்து பொருள் பறிக்கும் சுயநலக்காரர்கள் இனம் புரியாத ஜந்துக்களால் கடிபட்டு வதைவது.

-ரௌரவம் (கருடபுராணம்)

# தாயையும் தந்தையையும் அடித்துக் கொன்ற மகன்

(கொழும்பு)

மகனொருவர் தனது தாய் மற்றும் தந்தையை கொலை செய்துள்ள சம்பவம் ஹெம்மாதகம - தல்கஸ்பிடிய பகுதியில் இடம்பெற்றுள்ளது.

போதைப்பொருளுக்கு அடிமையான குறித்த 38 வயதான சந்தேகநபர் நேற்று முன்தினம் இரவு தனது பெற்றோரைத் தாக்கி கொலை செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, நேற்றுக் காலை வீட்டுக்கு சென்ற அவரது மூத்த சகோதரர் பெற்றோர் சடலமாக கிடப்பதை கண்டுள்ளார்.

அத்துடன், சந்தேகநபர் குறித்த வீட்டிலேயே இருந்துள்ளதோடு, அவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

மேலும், இந்த சம்பவத்தில் 76 வயதான தந்தை மற்றும் 72 வயதான தாயுமே பலியாகியுள்ளனர்.

சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை ஹெம்மாதகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(இ-7)

## சத்திய தரிசனம்



### உங்களை மட்டும் நம்புங்கள்

❖ எல்லா மனிதர்களிடமும் குறைபாடு இருக்கிறது. தவறு செய்யும் ஒருவரை நீங்கள் ஆட்காட்டி விரலை நீட்டி சுட்டிக் காட்டுகிறீர்கள். அப்போது, அந்த விரல் மட்டுமே எதிரே இருப்பவரை நோக்கியிருக்கும். மற்ற மூன்று விரல்கள் உங்களது உள்ளங்கையை நோக்கியே இருக்கும். அதாவது நீங்கள் சுட்டிக்காட்டுபவரிடம் ஒரு குறை இருப்பதாக உங்களுக்கு தெரிந்தால், உங்களிடம் மூன்று குறைகள் இருக்கிறது என்பதை இது உணர்த்துகிறது. அடுத்தவனை சுட்டிக் காட்டும் வேளையில் உங்களையும் உணர்ந்து கொள்ள வேண்டும். இந்த உண்மையிலிருந்து விலக முடியாது என்பதற்காகவே கட்டை விரல், அந்த மூன்று விரல்களை அழுத்தியபடி இருக்கிறது. எனவே, யாரிடமும் குறைபாடு கண்டு புறம் பேசாதீர்கள்.

❖ நீங்கள் செல்ல வேண்டிய பாதையை நீங்களே தீர்மானியுங்கள். அந்த பாதையை தேர்ந்தெடுக்கும் முன்பு, அவ்வழியே செல்வதால் ஏற்படும் நன்மை, தீமையை ஆராய்ந்து பாருங்கள். அதனால் மிகச்சிறிய அளவேனும் அடுத்தவர்களுக்கு தீமை விளையும் என தெரிந்தால், எவ்வளவு இலாபம் கிடைத்தாலும் அதில் செல்லாதீர்கள். அப்பாதையில் போகும்போது தன்னம்பிக்கையுடன்தான் போக வேண்டுமே தவிர, அடுத்தவர்களை நம்பி செல்லக் கூடாது. அவர்கள் மீது வைக்கும் நம்பிக்கையை உங்கள் மீது வையுங்கள். பார்வை சரியாக இருப்பவர்கள்தான், தாம் செல்லும் வழியில் [illegible] நம்பி சென்றால் செல்ல வேண்டிய இடத்தை அடைய முடியாது.



திருப்பதி மலை வாழும் வெங்கடேசா


அந்த மகாபலியால் தன்னை வெல்ல முடியவில்லை. அகங்காரம் அவனை ஆண்டவன்பால் அணுகவிடாமல் செய்தது. அவனுக்கும் அருளவே ஆண்டவன் வாமனனாக வடிவெடுத்துச் சென்று மூன்றடி நிலம் தானமாகக் கேட்டு ஓரடியிலே உலகை அளந்து மகாபலிக்கு அவன் வென்ற உலகென்பது தனது ஒரு காலடி மாத்திரமே என உணரவைத்தான். மகாபலியின் அகங்காரத்தை மண்ணோடு மண்ணாக்கி அவன்மீது அருள்பாலித்து ஆட்கொண்டான்.

அடியார்கள் எப்படிப்பட்டவராய் இருப்பினும் அவர்களுக்கு அருள்பாலிப்பவன் ஆண்டவன். அதன்படி அகில மக்கள் அனைவருக்கும் அருள்பாலிக்கத் திருவுளம் கொண்டது தெய்வம்.

அந்தப் பரமனை, அவதார நாயகனை, உள்ளுக்குள் உறைபவனை, வானவர் மட்டுமே வணங்கி வழிபட முடியும் என்றில்லாமல் அகில உலகத்தாரும் வானவர் போலவே வழிபாடுகளைச் செய்ய வாய்ப்பு வேண்டும். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கே.சி.சி.சி வெற்றிக் கிண்ணம் - 2017
# சென்றைலைட்ஸ் அணி புதிய சாதனை





கே.சி.சி.சி. வெற்றிக் கிண்ணத்திற்காக கே.சி.சி.சி. விளையாட்டுக் கழகம் 24 ஆவது வருடமாக நடத்திவரும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக்கொண்ட துடுப்பாட்ட சுற்றுப்போட்டியின் 12ஆவது போட்டியில் சென்றலைட்ஸ் அணி, மூளாய் விக்டோறி அணியை 152 ஓட்டங்களால் வெற்றிபெற்று கால் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் அணி 30 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 330 ஓட்டங்களை பெற்றனர்.

30 ஓவர் கொண்ட போட்டியில் இதுவே அதி கூடிய ஓட்டங்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

2013ஆம் ஆண்டு ஜொலிஸ்ரார் வெற்றிக்கிண்ணச் சுற்றுப் போட்டியில் ஸ்ரான்லி அணியை எதிர்த்து யங்ஸ்ரார் அணி பங்கு கொண்ட போது ஸ்ரான்லி அணி 29 ஓவர்களில் 6 இலக்குகளை இழந்து 311 ஓட்டங்களை பெற்றனர்.

இதுவே சாதனையாக இருந்தது. இச் சாதனையை சென்றலைட்ஸ் அணியினர் முறியடித்தமை குறிப்பிடத்தக்கது.

ஸ்ரான்லி அணியின் சாதனை 26.05.2013 இல் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்திலும், சென்றலைட்ஸ் அணியின் புதிய சாதனை 15.04.2017 இல் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

ஜேம்ஸ் 128, வதூசனன் - 54, எடின் - 68, செவ்ரன் - 12, டார்லின் ஆட்டமிழக்காது - 25, கிருபா ஆட்டமிழக்காது 13 ஓட்டங்களை பெற்றனர்.

பந்துவீச்சில் சரத்குமார் - 03, பிரசாத், ராஜ் தலா - 01 இலக்கினையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மூளாய் விக்டோறி அணி 30 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 178 ஓட்டங்களை பெற்றனர்.

ராஜ் - 32, கணேஸ் - 19, பிரணவன் - 27, டானியல் - 14, கஜேந்திரன் - 15, பிரசாந் ஆட்டமிழக்காது 10, விபுலன் - 19, குகசாந்தன் - 15 ஓட்டங்களை பெற்றனர்.

பந்து வீச்சில் ஜெரிக் - 01, மயூரன் - 01, அலன்ராஜ், ஜேம்ஸ் தலா 3 இலக்குகளையும் கைப்பற்றினர். (க)

## யங்கம்பன்ஸ் பிறிமியர் லீக் Young Star அசத்தல் வெற்றி





யங்கம்பன்ஸ் பிறிமியர் லீக் உதைபந்தாட்டத்தின் (25.04.2017) அன்று நடைபெற்ற முதல் போட்டியில் Young Star அணியை எதிர்த்து King Star அணி மோதியது.

முதல் பாதியாட்டத்தில் Young Star அணி வீரர் அஜய் ஒரு கோலினை பதிவு செய்தார். முதல் பாதியாட்டம் 01:00 என்ற அடிப்படையில் அணி முன்னிலையில் காணப்பட்டது.

இரண்டாவது பாதியாட்டத்திலும் Young Star அணி வீரர் ரதன் இரண்டு கோல்களைப்போட்டு அணியின் வெற்றியை உறுதிப் படுத்தினார். இறுதியாட்ட நேர முடிவில் 03:00 என்ற ரீதியில் வெற்றியீட்டியது Young Star அணி.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக Young Star அணியின் கோல் காப்பாளர் பிரபு தெரிவு செய்யப்பட்டார். (க)

## இலங்கை பொலிஸ் அணியை வீழ்த்தியது குருநகர் பாடும்மீன்

இலங்கையின் முதல்தர உதைபந்தாட்ட அணிகள்மோதும் FA கிண்ண தொடரில் 25.04.2017 அன்று நடைபெற்ற போட்டியில் யாழின் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து இலங்கை பொலிஸ் அணி மோதியது.

ஆட்டநேர முடிவில் இரண்டு அணியும் எவ்வித கோல்களும் பெறவில்லை.

தண்ட உதையில் 4-1 என்ற கணக்கில் குருநகர் பாடும்மீன் அணி வெற்றி பெற்றது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்



## பரபரப்பான ஆட்டத்தில் கலைமதி அணியை வீழ்த்தி இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது பலாலி விண்மீன்





பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்தும் அமரர் மாமனிதர் குமார் பொன்னம்பலம் ஞாபகார்த்த மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி (25.04.2017) அன்று நடைபெற்றது.

அரையிறுதிப்போட்டியில் கலைமதி விளையாட்டுக் கழகத்தை எதிர்கொண்டது பலாலி விண்மீன்.

முதல் பாதியாட்டத்தில் விண்மீன் அணித்தலைவர் டேமியனால் முதலாவது கோல் போடப்பட்டது. கலைமதி வீரர்கள் கோல் போட மேற்கொண்ட முயற்சிகள் விண்மீன் பின்கள வீரர்களால் முறியடிக்கப்பட 1:0 என முதல் பாதியாட்டம் நிறைவுக்கு வந்தது. இரண்டாம் ப்ாதியாட்டத்தில் கலைமதி வீரர்களால் விண்மீனின் பின்கள வியூகம் உடைக்கப்பட்டு ஒருகோல் பதிவுசெய்யப்பட்டது. பதிலுக்கு வேகம் கொண்ட விண்மீன் அணியினரின் கோல் வாய்ப்புக்கள் பலவும் வீணடிக்கப்பட்டது. போட்டி நிறைவடைய இரண்டு நிமிடம் இருக்கும் போது மீண்டும் விண்மீன் அணித்தலைவர் டேமியன் இரண்டாவது கோலினைப் பதிவு செய்து அணியின் வெற்றியை உறுதிசெய்தார்.

ஆட்டநேர முடிவில் 2:1 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்று இறுதிப்போட்டிக்குள் நுழைந்தது பலாலி விண்மீன்.

ஆட்டநாயகனாக விண்மீன் அணியின் பின்கள வீரர் ஜோன் கெனடி தெரிவு செய்யப்பட்டு பதக்கம் அணிவிக்கப்பட்டது. (க)





மாவட்ட மட்ட கயிறிழுத்தல் போட்டியில் பருத்தித்துறை பிரதேச செயலகத்தை பிரதிநிதித்துவப்படுத்தி வல்வை விளையாட்டுக்கழகம் இறுதிப்போட்டியில் காரைநகர் பிரதேச செயலக அணியை வீழ்த்தி சம்பியனானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எதிர்பார்க்கும்...

நூலகத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள தந்தை செல்வா சதுக்கத்தில் நடைபெற்றது. இதன்போது நினைவு பேருரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

பல்வேறுபட்ட இனங்கள் கொண்ட நாடுகளில், அனைத்து இன மக்களும் சம உரிமையை கோருவார்கள். அது நியாயமானதும் கூட. இவ்வாறான ஓர் அதிகார பரவலாக்கலை தான் இங்குள்ள தமிழ் மக்களும் கோரி வருகின்றார்கள். ஆனால் தமிழ் மக்களுடன் உணவையும் தேநீரையும் பருக தயாராக உள்ள தென்னிலங்கை மக்கள் உண்மையான அதிகார பரவலாக்கத்துக்கு தயாராகவில்லை. இதனால் தான் இங்கு பிரச்சினை ஏற்பட்டது. ஏற்பட்டு வருகின்றது.

ஆரம்பத்தில் தமிழ் மக்களுக்கான அதிகார பரவலாக்கலை வழங்காமல் தென்னிலங்கை மக்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தமையால்தான் சிறுபான்மையினராகிய தமிழர்கள் தனிநாடு கோருவதற்கு காரணமாக அமைந்தது. கூட்டாட்சியை தமிழர்கள் முதலில் கோரவில்லை. கண்டிய சிங்களவர்கள் தமக்கு அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் எனவும், எஸ்.டபிள்யு.ஆர்.டி பண்டாரநாயக்கவுமே அதிகார பரவலாக்கலை கோரினார்கள்.

இலங்கையில் தமிழர்களுக்கான சமஷ்டியை முதலில் கோரிய கட்சியாக இலங்கை பொதுவுடைமை கட்சியே கோரிக்கை முன்வைத்திருந்தது. எனினும் தென்னிலங்கை அந்த கோரிக்கைகளை அப்போது ஏற்றுக் கொள்ள தயாராகவே இருந்திருக்கவில்லை. இது போன்ற காரணங்களால் தான் 1949 ஆம் ஆண்டு தமிழ் மக்களுக்கு இலங்கையின் பங்காளிகள் என்ற உணர்வு இருக்க வேண்டும். ஆனால் அந்த உணர்வு எமக்கு இல்லை என தந்தை செல்வநாயகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார்.

அப்போது ஆட்சியில் இருந்த தமிழர் ஐக்கிய முன்னணி தமிழ் மக்களுக்கான அதிகாரப்பரவலாக்கல் தொடர்பில் ஓர் இணக்கப்பாட்டுடன் வந்திருந்தால் பின்னர் நாட்டில் ஏற்பட்டிருந்த அவலங்கள் நடந்திருக்காது. வட்டுக்கோட்டை தீர்மானத்திற்கும் அவசியம் ஏற்பட்டிருக்காது. தற்போதைய சூழ்நிலையை பொறுத்தவரையில் மாகாண சபைகளுக்கு கூடுதலான அதிகாரங்களை வழங்கலாம் என்று ஆலோசித்து வருகின்றோம்.

மாகாண சபைகளுக்கு அதிக அதிகாரங்களை வழங்கினால் பிரிவினையை கோருவார்கள் என தெற்கு மக்கள் அஞ்சுகின்றார்கள். அந்த அச்சத்தையும் நாங்கள் எதிர் கொண்டு பயணிக்க வேண்டிய கட்டாயம் உள்ளது. தற்போது அரசியலமைப்பு தொடர்பில் சிறப்பான நீதிமன்ற பொறிமுறை ஒன்றையும் முன்னெடுத்து வருகின்றோம். இந்த நீதிமன்றமே அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில் ஆராயவுள்ளது.

நாட்டில் ஒரு தீர்வை எட்டுவதற்கு தற்போது ஒரு மகத்தான சந்தர்ப்பம் உள்ளது. இந்த சந்தர்ப்பம் கிடைப்பதற்கு மீண்டும் எத்தனை தசாப்தம் செல்லும் என்று தெரியவில்லை. இரு பிரதான கட்சிகள் இணைந்து ஆட்சி அமைத்துள்ளார்கள். குறிப்பாக ஐக்கிய் தேசிய கட்சி 106 ஆசனங்களுடனும், சிறிலங்கா சுதந்திர கட்சி 93 ஆசனங்களையும், இதில் சுதந்திர கட்சியின் அரைவாசி உறுப்பினர்கள் எதிர்த்தரப்பாக செயற்பட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் இரு கட்சிகளும் இணைந்திருந்தால் தான் பெரும்பான்மையாக செயற்பட முடியும். ஆகையால் அரசியல் யாப்பில் ஒரு மாற்றத்தை கொண்டுவருவதற்கு கூடிய வலு இந்த அரசிடமே உள்ளது. தமிழ் தரப்புடனான இணக்கப்பாட்டுடன் கூடிய அரசியல் யாப்பே வருவதற்கான சாத்தியங்கள் உள்ளன. புதிய அரசியல் அமைப்பு தொடர்பில் மக்களிடையே மாறுபட்ட கருத்துக்கள் உள்ளன என கூறப்படுகின்றன. கூடுதலாக தென்னிலங்கை மக்கள் எதிர்ப்பார்கள் என கூறுகின்றார்கள்.

கருத்துக்கணிப்பில் தென்னிலங்கை மக்கள் புதிய அரசியலமைப்பிற்கு ஆதரவு வழங்குவார்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு. பத்து வருட மகிந்தவின் ஆட்சி சிங்கள மக்களுடைய மனங்களை சிதைத்துள்ளது. இருந்தாலும் சிங்கள மக்கள் எமக்கு ஆதரவு தருவார்கள். தந்தை செல்வா இணக்கத்திற்கும் விட்டுக்கொடுப்பிற்கும் தயாராக இருந்தார். ஆகவே இதனை நீங்களும் கருத்தில் எடுங்கள் என தெரிவித்த அவர், நான் ஒரு இடதுசாரி என்ற வகையில் தமிழ் மக்கள் எதிர பார்க்கும் அளவிற்கு அதிகாரப்பரவலாக்கம் இருக்க போவதில்லை என்பதை இவ்விடயத்தில் தெரிவிக்கிறேன் எனவும் ஜெயம்பதி விக்கிரமரட்ண தெரிவித்தார். (செ-4)

## பூரண ஹர்த்தால்...

சங்கம்

- புதுக்குடியிருப்பு வர்த்தக சங்கம்,
- முல்லை காணாமல் ஆக்கப்பட்ட உறவினர சங்கம்
- வவு.நகர சிறுவியாபாரிகள் சங்கம்
- வவு.மாவட்ட உள்ளூர் விளைபொருள் விற்பனையாளர் சங்கம்
- வவுனியா சமூக விழிப்புணர்வு மக்கள் அமைப்பு
- வவுனியா வர்த்தக சங்கம்
- இ.போ.ச.வவுனியாசாலை தொழிற்சங்கம்
- வவுனிய வளாக ஆசிரியர் சங்கம்
- வவுனியா பிரஜைகள் குழு
- மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம்
- திருகோணமலை காணாமல் ஆக்கப்பட்ட உறவினர் சங்கம்
- மட்டக்களப்பு காணாமல் ஆக்கப்பட்ட உறவினர் சங்கம்
- அம்பாறை காணாமல் ஆக்கப்பட்ட உறவினர் சங்கம்
- கல்முனை மாணவர் மீட்பு பேரவை
- ஜனநாயக மக்கள் முன்னணி
- அம்பாறை முஸ்லிம்கள் நலன்பேணும் அமைப்பு ஆகியன தமது ஆதரவினை வழங்கியுள்ளன. (செ-9)

## நல்லாட்சி அரசுக்கு...

அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் ராஜித சேனாரத்ன கோரிக்கை விடுத்துள்ளார்.

காணாமல் போனோர் விவகாரங்களை முன்வைத்து இன்றைய தினம் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஹர்த்தால் முன்னெடுக்கப்படும் நிலையில் அரசாங்கத்தின் பேச்சாளரான அமைச்சர் ராஜித சேனாரத்ன இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு இரண்டு வாரங்களுக்குப் பின்னர் நேற்றையதினம் கொழும்பிலுள்ள அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.

இதன்போது இன்றைய தினம் முன்னெடுக்கப்படும் ஹர்த்தால் தொடர்பாக ஊடகவியலாளர்கள் எழுப்பிய வினாவுக்கு அமைச்சர் ராஜித சேனாரத்ன மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கம் ஹர்த்தாலுக்கு இடமளித்திருப்பதே மிகப்பெரிய ஒன்றாகும். வடக்கில் கடந்த காலங்களில் இவ்வாறு ஹர்த்தால் இருக்கவில்லை. தெற்கு மக்களைப் போன்றே வடக்கு மக்களுக்கும் முழு உரிமையும் வழங்கப்பட்டிருக்கின்றது. அதனை கொண்டாடும் வகையில் பிறிதொரு ஹர்த்தால் ஒன்று முன்னெடுக்கப்பட வேண்டும். ஹர்த்தால் நடத்தவும் உரிமை வழங்கிய அரசாங்கத்திற்கு நன்றி செலுத்தும் வகையில் வடக்கு மக்கள் ஒருநாள் ஹர்த்தால் ஒன்றை முன்னெடுக்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

இதன்போது குறுக்கீடு செய்த ஊடகவியலாளர்கள், ஹர்த்தால் நடத்துவதற்கு காரணமான விடயங்கள் குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தவில்லையா என்று வினா எழுப்பினார்கள்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் ராஜித சேனாரத்ன நான் யாழ்ப்பாணத்திற்கு சென்றிருந்தபோது காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள் சிலரை சந்தித்து அவர்களது விடயங்கள் குறித்து கேட்டறிய சந்தர்ப்பம் கிடைத்தது. நான் சென்று சந்தித்தேன். அவர்கள் சில புகைப்படங்களைக் காண்பித்தார்கள். அதில் உள்ள ஒருவர் காணாமல் போனவர். குறித்த நபர் ஜனாதிபதியின் அருகில் நின்றவாறு எடுக்கப்பட்ட புகைப்படமே இருந்தது. துண்டுப் பிரசுரத்தில் இப்புகைப்படம் காணப்பட்டது. கடந்த ஆட்சிகாலத்தில் நாங்கள் இருந்த சில இடங்களிலும் இந்த மாணவர்கள் இருந்திருக்கலாம். இதுகுறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும். இந்த விவகாரம் குறித்து முழுமையான அறிக்கை ஒன்றை தயாரித்து, என்னிடம் தந்தால் அதனை ஜனாதிபதியிடம் கையளித்து இதனை விரைவுபடுத்த வேலைத்திட்டமொன்றை ஆரம்பிப்பேன் என்பதை அவர்களிடம் தெரிவித்தேன். எனினும் 1971ஆம் ஆண்டிலிருந்து காணாமல் ஆக்கப்படுகின்ற பிரச்சினை காணப்படுகிறது.

எனினும் 1971ஆம் ஆண்டில் காணாமல் போனோருக்கும் மரணச்சான்றிதழ் அளிக்கப்படவில்லை. அதன் பின்னர் 1994 ஆம் ஆண்டில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா வாக்குறுதி அளித்தபோதிலும் அப்போதும் அது கொடுக்கப்படவில்லை. இப்போது மரணச்சான்றிதழ் கேட்கின்ற பட்சத்தில் அதனை கொடுத்த பின்னர் சம்பந்தப்பட்ட நபர் மீண்டும் வந்துவிட்டால், சட்டத்தின்படி அவர் உயிரிழந்துவிட்டார். ஆனால் மீண்டும் வந்து, நான் உயிருடன் இருக்கின்றேன் என்று கூறினாலும் அதனை ஏற்கமுடியாது. நெருக்கடி நிலையே ஏற்படும். காணாமல் போனோர் விடயத்தில் இதுவே பிரச்சினை. 1971,81களில் காணாமல் போனோருக்கு வழங்காமல் தான் இருக்கின்றது. எனவே நாட்டில் சட்டம் ஒன்று இருக்கின்றது. அதனை பயன்படுத்தி இதனை எவ்வாறு முன்னெடுக்கலாம் என்ற பிரச்சினை காணப்படுகிறது. மாறாக மரணச்சான்றிதழ் ஒன்றை அளிப்பதில் அரசாங்கத்திற்கு ஒரு பிரச்சினையும் இல்லை என்றார் அமைச்சர் ராஜித. (செ-11)

## அமைதியான...

முழுவதும் பூரண ஹர்த்தாலுக்கு அனைத்து அரசியல் கட்சிகள், பொது அமைப்புக்கள் உள்ளிட்ட பலரும் ஆதரவு தெரிவித்துள்ளன. இவ்வாறான நிலையில் யாழ்ப்பாணத்தின் பாதுகாப்பு நடவடிக்கை தொடர்பாக யாழ்ப்பாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். யாழ்ப்பாணத்தின் பாதுகாப்பு நடவடிக்கை தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

இன்றைய காணாமல்போனோருக்கு ஆதரவான ஹர்த்தால் போராட்டத்தை மக்கள் அமைதியாக மேற்கொள்ள வேண்டும். இன்றைய தினம் விஷேட பொலிஸ் ரோந்து நடவடிக்கைகளை ஈடுபடுத்தியுள்ளோம். இவற்றைவிட தேசிய பாதுகாப்புக்கும், சமாதானத்திற்கும் பங்கம் ஏற்படுத்தும் வகையில் எவராவது செயற்பட்டால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் வீதிகளில் ரயர்களை போட்டு எரித்தல், பொதுச் சொத்துக்களை சேதப்படுத்தல் மற்றும் அத்தியாவசிய சேவைகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் செயற்படும் எந்தவொரு நபரையும் கைது செய்து அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் இதன்போது தெரிவித்தார். (செ-4)

## வாகன விபத்து...

சக்கரவண்டியும் விபத்துக்குள்ளாகி மோட்டார் சைக்கிள் மேல் ஏறி தலை கீழாகப் புரண்டதில் நான்கு பேர் படுகாயங்களிற்குள்ளாகினர். இதில் ஒருவர் ஆபத்தான கட்டத்தில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை-யாழ்ப்பாணம் பிரதான வீதியில் உள்ள மந்திகை மடத்தடிப் பகுதியில் நேற்று மாலை 6.30 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் துவிச்சக்கரவண்டியில் பயணித்த அல்வாய் கிழக்கை சேர்ந்த ஆறுமுகம் நடராசா (வயது 71) என்ற வயோதிபர் ஆபத்தான நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் இருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த அளவெட்டியைச் சேர்ந்த கிருபாலசிங்கம் திலக்சன் (வயது 22) மற்றும் முச்சக்கர வண்டியில் பயணித்த அம்பன்-குடத்தனையைச் சேர்ந்த சகோதரர்களான ரவீந்திரநாதன் ஜெயகரன் (வயது 20) ரவீந்திரநாதன் ஜெனரதன் (வயது 17) ஆகியோர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

முச்சக்கரவண்டியில் பயணித்த வெளிநாட்டு பிரஜைகள் மூவர் சிறுகாயம் அடைய நேரிட்டது. இது தொடர்பில் நெல்லியடிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (செ-60)

## வடக்கு-கிழக்கில்...

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரை கண்டறியக் கோரியும் படையினரின் ஆக்கிரமிப்பில் உள்ள மக்களின் நிலங்களை விடுவிக்க வலியுறுத்தியும் வடக்கு-கிழக்கு முழுவதிலும் இன்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின உறவுகளால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த ஹர்த்தாலுக்கு வடக்கு-கிழக்கு தழுவிய ரீதியில் அனைத்து தரப்பினரும் தமது பூரண ஆதரவினை வழங்கியுள்ளதுடன் அரசுக்கு அழுத்தத்தை கொடுக்கவும் சர்வதேசத்துக்கு மக்களின் துன்ப சூழ்நிலை குறித்த உண்மை நிலையை வெளிப்படுத்தவும் ஓர் அணியில் வலுச் சேர்ப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

கடந்த காலத்தில் நாட்டில் இடம்பெற்ற கொடிய யுத்தத்தின் போது இலட்சக்கணக்கான உயிர்களை இழந்த தமிழ் மக்கள், போர்க்காலத்திலும் போர் முடிவுற்ற பின்னரும் தமது உறவுகளை சரணடையச்செய்தும் கடத்தல், வலிந்து காணாமல் போகச் செய்தல் என பறிகொடுத்து விட்டும் இன்று வரை அவர்களைப் பற்றிய தகவல்களை அறியாது அலைந்து திரிகிறார்கள்.

தமது உறவுகள் இருக்கிறார்களா இல்லையா என்ற தகவலை தெரியாமல் அன்றாடம் வலியில் துடித்துக்கொண்டிருக்கிறார்கள். வீதியோரங்களில் தமது உறவுகளின் புகைப்படங்களை தாங்கியவண்ணம் ஒவ்வொரு போராட்டங்களிலும் அவர்கள் தமது உறவுகளை தேடி அழுகுரல்கள் இட்டவண்ணமே தமது வாழ்க்கையை கழித்து வருகிறார்கள்.

இதேபோன்றே தமது காணிகளை படையினரிடம் பறிகொடுத்த மக்களின் வாழ்வும் துயர் நிறைந்ததாக தொடர்ந்து வருகின்றது.

காணி விடுவிப்பு தொடர்பில் இழுத்தடிப்பும் மந்தமான நிலையுமே காணப்படுவதுடன் இராணுவத் தேவைகளுக்காக மேலும் காணிகள் சுவீகரிக்கப்படும் அச்ச நிலைமையும் காணப்படுகின்றது.

இந்த நிலையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் மற்றும் நில மீட்புக்காக போராடும் மக்கள் தாம் தொடர்ச்சியான போராட்டத்தை தீர்வு கிடைக்கும் வரை முன்னெடுப்பதாக தெரிவித்து பல நாட்களாக வடக்கு கிழக்கு பகுதிகளில் போராட்டங்களை தொடர்ந்து வருகின்றனர்.

இந்நிலையிலேயே இவர்களின் போராட்டத் துக்கு வலுச்சேர்க்கும் முகமாக இன்றைய தினம் வடக்கு-கிழக்கு மாகாணங்கள் தழுவிய பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படுகிறது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டுள்ள இக் ஹர்த்தாலுக்கு பல தரப்பட்டவர்களின பங்களிப்பும் ஆதரவும் பெருகியுள்ள நிலையல் இப்போராட்டம் சர்வதேசத்திடம் வலிமை மிக்க காத்திரமான செய்தியை பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் தெரியப்படுத்தும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (செ-9)

## தனியார் பேருந்து...

களை விடுவிக்க கோரியும் காணாமல் ஆக்கப்பட்டோரின் நிலையை அரசு வெளிப்படுத்தக்கோரி அதற்கான நீதி வேண்டி இன்றை தினம் வடக்கு-கிழக்கு தழுவிய ரீதியில் கதவடைப்பு போராட்டம் இடம்பெறவுள்ளது.

இந் நிலையில் இப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாக தனியார் பேருந்து உரிமையாளர்கள் சேவையில் ஈடுபடுவதை தவிர்க்கவுள்ளனர். எனவே வட மாகாணத்தில் அனைத்து பேருந்து சேவைகளும் நிறுத்தப்படவுள்ளதுடன் தென் பகுதியில் இருந்து வரும் பேருந்துகளும் வவுனியாவுடன் மட்டுபபடுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எனவே பயணிகளுக்கு இதனால் ஏற்படும் அசௌகரியத்திற்காக வருந்துவதுடன் எமது மக்களின் சாத்வீக போராட்டத்திற்கு ஆதரவு வழங்க வேண்டிய கடப்பாட்டில் நாம் உள்ளமையை கருத்தில் கொண்டு இந் நடைமுறையை கைக்கொள்வதாகவும் தெரிவித்தார். (செ-250)

## முஸ்லிம்களது...

கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கப்படும் பூரண ஹர்த்தால் போராட்டம் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள விசேட அறிக்கையிலேயே இவ்வாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழ்கின்ற தமிழ் மக்கள் ஏராளமான பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர். அம்மக்களது பிரச்சினைகள் அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புக்களினால் அவ்வப்போது வெளிக்கொணரப்பட்டுள்ளன.

அந்தவகையில், காணாமல் போனவர்களுக்கு நீதி கோரி நாளை (இன்று) வியாழக்கிழமை வடக்கு, கிழக்கு காணாமல்போனவர்களின் உறவினர்கள் சங்கத்தினால் மேற்கொள்ளப்படவுள்ள பூரண ஹர்த்தாலுக்கு தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு மேலதிகமாக முஸ்லிம் கட்சிகளான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகியன ஆதரவு தெரிவித்துள்ளன.

இதனால் இந்த ஹர்த்தால் ஆர்ப்பாட்டம் அரசியல் மட்டத்தில் பாரிய தாக்கத்தை செலுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே, இவ்வாறான சந்தர்ப்பங்களில் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் வாழ்கின்ற முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் சரியான முறையில் முன்வைக்கப்பட வேண்டும்.

சமகாலத்தில் மறிச்சுக்கட்டி, இறக்காமம் மாயக்கல்லி மலை போன்ற விவகாரங்கள் குறித்து சரியான தெளிவுபடுத்தல்கள் செய்யப்பட வேண்டும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகிலா நகைமாடம்



## அக்ஷய திருதியை அழைப்பிதழ்

அக்ஷய திருதியை முன்னிட்டு இன்று முதல் ஏப்ரல் 29ம் திகதி வரை எமது நகைமாடத்தில் தங்க நகைகளை முற்பதிவு மற்றும் கொள்வனவு செய்பவர்களுக்கு தங்க நாணயம் மற்றும் பெறுமதிமிக்க பரிசுகள் காத்திருப்பதோடு சலுகைகளும் வழங்கப்படும் என்பதை மனமகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

அக்ஷய திருதியை தினத்தில் உங்கள் வாழ்வில் ஐஸ்வர்யம் பெருக்கும் நகைகளை



**வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் ஓர் நற்செய்தி**

**ஆபரண அரசி**

**அகிலா நகைமாடத்தில்**

காக்கா கடைச்சந்தி யாழ்.வீதி,
கிளிநொச்சி. 021 228 3559

அல்லது

கிளை:- **நவீனா நகையகம்**
இல.191, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். 021 222 7114

**நவீனா நகையகத்தில்**

பெற்று மகிழுங்கள்.

## 2017 இல் கிளிநொச்சி நகரில்

# அகிலா நகைமாடம்



## அக்ஷய திருதியை பெருவிழா

அக்ஷய எனும் சொல் குறையாதது எனும் பொருள் ஆகும். மேலும் இந்த நாள் நல்ல பலன்களையும் வெற்றியையும் அள்ளித்தரும். குறிப்பாக மங்களகரமான நீண்டகால சொத்துக்களான தங்கம், வெள்ளி, வைரம் ஆகியவற்றினால் செய்யப்பட்ட நகைகளை வாங்குவதற்கு உகந்த நல்ல நாளாக கருதப்படுகின்றது. அக்ஷய திருதியை நாளில் தொடங்கப்படுகின்ற எந்த ஒரு முயற்சியும் தொடர்ச்சியாக நன்மையையே கொடுக்கும் செல்வம் வளரும். ஆகவே இம்முறை உங்கள் அக்ஷய திருதியை எம்முடன் இணைந்து பாருங்கள். நீங்களே உணர்ந்து கொள்வீர்கள். உங்களது ஓடர் நகைகளை அகிலா நகைமாடத்துடன் அல்லது எமது கிளை நிறுவனமான **நவீனா நகையகத்துடன் 191, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 7114 தொடர்புகளை மேற்கொள்ளவும்.**

எங்களிடம் கொள்வனவு செய்யப்படும் அனைத்து ஆபரணங்களுக்கும் தரச் சான்றிதழ் வழங்கப்படும்.

**அகிலா நகைமாடத்தினர்**
காக்கா கடைச்சந்தி யாழ்.வீதி,
கிளிநொச்சி. 021 228 3559
fb:ageila nahaimadam
Y!:ageilanahaimadam@yahoo.com






(சி-8268)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.04.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org